# தமிழ்
# இலக்கண வழிகாட்டி

## க.பொ.த (உ/த)

தமிழ் இலக்கண விளக்கம்

மாதிரி வினாக்களும் விடைகளும்

பயிற்சி வினாக்கள்

பா. பத்மநாதன்
B. A (Hons.) [ Tamil Sp]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இலக்கண வழிகாட்டி

## க. பொ.த (உ. த)

(புதிய பாடத்திட்டத்திற்கு அமைவானது)

**பா. பத்மநாதன்**
**B.A (Hons.) [Tamil Sp]**

**விற்பனை**
லங்கா புத்தகசாலை
F.L 1/14 டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர,
கொழும்பு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | தமிழ் இலக்கண வழிகாட்டி |
| நூலாசிரியர் | - | பாலசுப்பிரமணியம் பத்மநாதன் |
| முகவரி | - | "சித்திர பவனம்"<br>ஏழாலை வடக்கு,<br>ஏழாலை.<br>யாழ்ப்பாணம். |
| பதிப்புரிமை | - | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு | - | ஏப்ரல் 2007 |
| கணினிவடிவமைப்பு | - | MCT , கொன்வென்ற் றோட், மன்னார் |
| அச்சுப்பதிப்பு | - | யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்<br>48 B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13.<br>தொலைபேசி: 2330195. |
| விலை | - | 200/= |
| விற்பனையாளர் | - | ஸ்ரீலங்கா புத்தகசாலை<br>F.L 1/14 டயஸ் பிளேஸ்,<br>குணசிங்கபுர,<br>கொழும்பு - 12<br>Tel: 011-2-341942 |

| | |
|---|---|
| **Title** | - TAMIL ILAKKANA VAZIKATTY |
| **Subject** | - A Guide to Tamil Grammar |
| **Author** | - B. Pathmanathan B. A (Hons) [Tamil Sp.] |
| **Copy right** | - with the author |
| **First Edition** | - April 2007 |
| **Type setting** | - Micro Code Technology<br>Convent Road, Mannar. |
| **Printed by** | - Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road, Colombo 13.<br>Tel: 2330195. |
| **Price** | - Rs 200/= |
| **Distributor** | - Lanka Book Depot<br>F.L 1/14, Dias Place,<br>Gunasinghapura,<br>Colombo – 12.<br>Tel: 011-2-341942 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| முன்னுரை | - | i - iii |
| 1. எழுத்துக்கள் | - | I - 17 |
| 2. பதங்கள் | - | 17 - 21 |
| 3. பெயர்ச்சொற்கள் | - | 22 - 29 |
| 4. வேற்றுமைகள் | - | 30 - 34 |
| 5. வினைச்சொற்கள் | - | 35 - 43 |
| 6. அடைகள் | - | 44 -46 |
| 7. இடைச்சொற்கள் | - | 47 - 51 |
| 8. வாக்கியங்கள் | - | 52 - 55 |
| 9. மாதிரி வினாக்கள் | - | 56 - 103 |
| 10. விடைகள் | - | 104 - 125 |
| 11. பயிற்சி வினாக்கள் | - | 126 - 135 |
| 12. பின்னிணைப்பு | - | 136 - 139 |
| 13. உசாத்துணை நூல்கள் | - | 140 - 141 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கல்விப் பொதுத் தராதரப் உயர்தரக் கலைப்பிரிவில் தமிழை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கும் பல்கலைக் கழகங்களிலே கலைப்பிரிவில் தமிழை ஒரு பாடமாகக் கற்கின்ற மாணவர்களுக்கும் இலக்கணம் மிக இன்றியமையாத ஒரு பகுதியாக அமைகின்றது. தமிழ் இலக்கணம் கற்கும் மாணவர்களின் தேவை கருதி "தமிழ் இலக்கண வழிகாட்டி" என்னும் நூலை வெளியிடுவதில் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

தமிழிலே இலக்கணப்பகுதியை மாணவர்கள் மிகக் கடினமான ஒரு பகுதியாகவே கருதுகின்றார்கள். எனினும் அடிப்படை இலக்கணம் அறிந்த மாணவர்களுக்கு இலக்கணப் பகுதியில் உள்ள வினாக்களுக்கு விடையளிப்பது மிக எளிமையாக அமையும். பத்து வருடங்களுக்கும் மேலாகக் கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர் என்ற வகையில் மாணவர் மத்தியில் கல்வி ரீதியில் காணப்படுகின்ற குறை நிறைகளை அறிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. தமிழ்ப்பாடத்தைப் பொறுத்தவரையில் இலக்கணப் பகுதியில் உள்ள வினாக்களுக்கு மாணவர்கள் மிகச் சரியான விடை எழுதத் தவறுகிறார்கள். இந்நூலானது அக்குறைபாட்டை நீக்கும் எனப் பெரிதும் நம்புகின்றேன்.

இந்நூலானது மூன்று பிரிவுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. முதலாவது பிரிவில் தமிழ் இலக்கண விளக்கம் அமைகின்றது. இது தமிழின் அடிப்படை இலக்கணக் கூறுகளை எளிமையான முறையில் விளக்குகின்றது. இரண்டாவது பிரிவில் மாதிரி வினாக்களும் விடைகளும் காணப்படுகின்றன. பரீட்சையின் போது எதிர்பார்க்கப்படும் வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் இப் பகுதியில் அமைந்துள்ளன. மூன்றாவது பிரிவு பயிற்சி வினாக்களைக் கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நீண்டகால முயற்சியின் பின்னர் இந் நூல் வெளிவருகின்றது. ஏனைய பாடசாலை ஆசிரியர்கள் பலரும் என்னோடு உரையாடும் போது இலக்கணப் பகுதியிலேயே மாணவர்கள் மிகக் குறைந்த புள்ளிகளை எடுக்கின்றார்கள். மாணவர்களுக்கு எளிய முறையில் விளங்கும் விதத்தில் இலக்கண நூலொன்று எழுத வேண்டும் என அடிக்கடி கூறுவார்கள். சக ஆசிரியர்கள் தந்த ஊக்கமும் இந் நூல் வெளிவர ஒரு காரணம் ஆகும். இந் நூலாசிரியர் பற்றிய அறிமுகக் குறிப்பைத் தந்த எனது மதிப்பிற்குரிய பேராசிரியரும், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வப்போது நூலில் சில திருத்தங்களைச் செய்துதவிய எனது சகோதரியும், ஆசிரியையுமாகிய திருமதி சுயந்தினி குருபரன் அவர்களுக்கும், ஆலோசனைகள் வழங்கி வழிகாட்டிய மன்னார் உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்) திருமதி. கலா சிவகுமாரவேலு அவர்களுக்கும் என் நன்றிகள். கையெழுத்துப் பிரதியை கணினிப்பிரதியாக்கிய MCT நிறுவன நண்பர்களுக்கும், இந்நூலை அச்சுப் பதித்த யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவன நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது முயற்சியில் உருவாகிய முதல் நூல் இதுவாதலால் இந் நூலில் சில குறைபாடுகளும் தவறுகளும் இருக்கும் என எண்ணுகின்றேன். இந்நூலைப் பயன்படுத்தும் ஆசிரியர்களும், மாணவர்களும் அவற்றைச் சுட்டிக்காட்டினால் அவை மறுபதிப்பில் திருத்திக் கொள்ளப்படும். அமுதோடு அறிவூட்டி என்னை வழிநடத்திக் கொண்டிருக்கும் பெற்றோருக்கு இந் நூல் சமர்ப்பணம்.

**பா. பத்மநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. எழுத்து

மொழியிலுள்ள ஒலி வடிவத்தையும், வரி வடிவத்தையும் குறிப்பது **"எழுத்து"** ஆகும். எழுத்துக்களை முதல் எழுத்து, சார்பெழுத்து என இரு வகைப்படுத்தலாம்.

## I. முதல் எழுத்து.

முதல் எழுத்துக்களை உயிர் எழுத்து, மெய் எழுத்து என இரண்டு வகைப்படுத்துவர். முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை முப்பது ஆகும்.

### I.1 உயிர் எழுத்து

தாமே தனித்து நின்று ஒலிக்கும் ஆற்றலுடைய எழுத்துக்களே "உயிர் எழுத்துக்கள்" எனப்படுகின்றன. அ, ஆ, இ, ஈ, உ, ஊ எ, ஏ ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய பன்னிரண்டு எழுத்துக்களே உயிர் எழுத்துக்கள் எனப்படுகின்றன. உயிர் எழுத்துக்களை குறில் எழுத்து. நெடில் எழுத்து என இரு வகைப்படுத்தலாம்.

### I. 1. i. குறில் எழுத்து/ குற்றெழுத்து

குறைந்த ஓசை கொண்ட ஒலிக்கும் உயிர் எழுத்துக்கள் "குறில் எழுத்துக்கள்" எனப்படுகின்றன. உயிர் எழுத்துக்களுள் **அ, இ, உ, எ, ஒ** ஆகிய ஐந்து எழுத்துக்களும் "உயிர்க் குறில்" எனப்படுகின்றது. குறில் எழுத்துக்களின் மாத்திரை ஒன்று ஆகும்.

### I. 1. ii. நெடில் எழுத்து/ நெட்டெழுத்து.

நீண்ட ஓசை கொண்டு ஒலிக்கும் உயிர் எழுத்துக்கள் "நெடில் எழுத்துக்கள்" எனப்படுகின்றன. உயிர் எழுத்துக்களுள் **ஆ. ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ** ஆகிய ஏழு எழுத்துக்களும் **"உயிர் நெடில்"** எனப்படுகின்றது. நெடில் எழூத்துக்களின் மாத்திரை இரண்டு ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயிர் எழுத்துக்களுள் **அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ** ஆகியவை இதழ் குவியாது பிறக்கின்றன.

- சில உயிர் எழுத்துக்கள் இரு வேறுபட்ட விதமாகவும் உச்சரிக்கக் காணலாம்.

உ + ம் (இ)

| பிரிவு I | பிரிவுII |
|---|---|
| இஞ்சி | இடர் |
| இவை | இணக்கம் |
| இசை | இணைப்பு |
| சிலை | இழப்பு |
| இனிது | இறப்பு |

- பிரிவு I இல் உள்ள இகரங்கள் சாதாரணமாக ஒலிப்பது போல் ஒலிக்கின்றன.

- பிரிவு II இல் உள்ள இகரங்கள் வேறுபட்டு உச்சரிக்கப்படுகின்றன. இந்த உச்சரிப்பு மாற்றத்திற்கு இகரத்தை அடுத்து **ட், ண், ள், ழ்** ஆகிய மெய்களும் உயிர் ஏறிய றகரமும் வந்துள்ளமையே காரணமாகும்

- இவ்வாறே **ஈ, எ, ஏ** ஆகிய உயிர்களின் உச்சரிப்பு முறைகளும் கொள்ளப்படும்.

## I. 2. மெய் எழுத்து

தாமே தனித்து நின்று ஒலிக்கும் ஆற்றல் இல்லாது உயிர் ஒலிகளோடு கூடி ஒலிக்கும் ஆற்றலுடைய எழுத்துக்களே "மெய் எழுத்துக்கள்" எனப்படுகின்றன. **க், ங், ச், ஞ், ட். ண், த். ந் ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்** ஆகிய பதினெட்டு எழுத்துக்களும் மெய் எழுத்துக்களாகும். மெய் எழுத்தின் மாத்திரை "½" ஆகும். மெய் எழுத்துக்களை வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகைப்படுத்தலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வல்லினம் | - க், | ச். | ட், | த், | ப், | ற் |
| மெல்லினம் | - ங், | ஞ், | ண், | ந், | ம், | ன் |
| இடையினம் | - ய், | ர், | ல், | வ், | ள், | ழ் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I.2. i வல்லினம்

வன்மையான ஓசை கொண்டு ஒலிக்கும் மெய் எழுத்துக்களே வல்லினம் எனப்படும். க் , ச், ட், த், ப், ற் ஆகிய ஆறு மெய்களும் வல்லினம் ஆகும். இவற்றை "வெடிப்பொலிகள் / தடையொலிகள்" எனவும் கூறுவர்.

## I. 2. ii. மெல்லினம்

மென்மையான ஓசை கொண்டு ஒலிக்கும் மெய் எழுத்துக்களே மெல்லினம் எனப்படும். ங், ஞ், ண், ந், ம், ன் ஆகிய ஆறு மெய்களும் மெல்லினம் ஆகும். இவற்றை "மூக்கொலிகள்" எனவும் கூறுவர்.

## I. 2. iii. இடையினம்

வன்மையான ஓசைக்கும் மென்மையான ஓசைக்கும் இடைப்பட்ட ஓசை கொணடு ஒலிக்கும் மெய் எழுத்துக்களே 'இடையினம்' எனப்படும். ய், ர், ல், வ், ள், ழ் ஆகிய ஆறு மெய்களும் இடையினம் ஆகும்.

### ஒலியனும் மாற்றொலியனும்

ஓர் எழுத்தானது தன் உச்சரிப்புக்கு ஏற்ப ஒலிப்பதனை "ஒலியன்" என்பர். ஓர் எழுத்தானது வெவ்வேறு இடங்களில் வேறுபட்டு ஒலிக்குமாயின் அதனை "மாற்றொலியன்" என்பர். உதாரணமாக க என்பது ஓர் ஒலியன் ஆகும். இவ்வெழுத்தின் வேறுபட்ட உச்சரிப்புக்களையே மாற்றொலியன்கள் என்பர்.

**எடுத்துக்காட்டு**

| கத்தி | பாகம் | சங்கம் |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| **k** | **h** | **g** |

- இதில் **"க"** மூன்று விதமாக ஒலிக்கப்படுவதனை அவதானிக்கலாம்.

- வல்லின மெய்களுக்கு ஒவ்வொன்றுக்கும் இவ்வாறு வேறுபட்ட பல ஒலிப்புக்கள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II. சார்பெழுத்து

சார்பெழுத்துக்கள் பத்து வகையுடையனவாகக் காணப்படுகின்றன. மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பவையாகவும் மாத்திரையிலிருந்து கூடி ஒலிப்பவையாகவும் வடிவ மாற்றம் உடையவையாகவும் சார்பெழுத்துகள் காணப்படுகின்றன. சார்பெழுத்துக்களை,

1. **குற்றியலுகரம்**
2. **குற்றியலிகரம்**
3. **ஐகாரக்குறுக்கம்**
4. **ஔகாரக்குறுக்கம்**
5. **மகரக்குறுக்கம்**
6. **ஆய்தக்குறுக்கம்**
7. **முற்றாய்தம்**
8. **உயிரளபெடை**
9. **ஒற்றளபெடை**
10. **உயிர் மெய்**

எனப் பத்து வகைப்படுத்துவர்.

### I1.1. குற்றியலுகரம்

தனிக் குறிலைச் சாராத ஏனைய எழுத்துக்களைத் தொடர்ந்து சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஏறிய உகரம் தனக்குரிய மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிப்பது குற்றியலுகரமாகும்.
குற்றியலுகரத்தின் மாத்திரை **அரை** ஆகும்.
உ +ம் : பட்டு. ஆடு, எட்டு. பஞ்சு.

**குற்றியலுகரங்களை இனங்காணல்.**

***இரண்டு எழுத்துக்களால் அமைந்த பதமாயின்,***

- முதலாவது எழுத்து நெடிலாக அமைதல் வேண்டும். (ஆ, ஈ, ஊ, ஏ, ஐ. ஓ. ஔ)
- இறுதி எழுத்து **கு, சு, டு. து, பு, று** ஆகிய ஆறினுள் ஒன்றாக இருக்கவேண்டும்.

  **உ- ம்: ஆடு, ஏடு, கோடு, காசு**

***இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களால் அமைந்த பதமாயின்,***

- இறுதி எழுத்து **கு, சு, டு. து, பு, று** ஆகிய ஆறினுள் ஒன்றாக இருக்கவேண்டும்.

  **உ - ம்: கொக்கு, பஞ்சு, கயிறு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குற்றியலுகர வகைகள்

தம்மைத் தொடருகின்ற அயல் எழுத்தின் வகையைக் கொண்டு குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவையாவன,

1. **வன்றொடர்க் குற்றியலுகரம்.**
2. **மென்றொடர்க் குற்றியலுகரம்**
3. **இடைத் தொடர்க் குற்றியலுகரம்.**
4. **உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.**
5. **நெடில் தொடர்க் குற்றியலுகரம்**
6. **ஆய்தக் தொடர்க் குற்றியலுகரம்**

### ☞ வன்றொடர்க் குற்றியலுகரம்.

வல்லின மெய்யினால் தொடரப்படுகின்ற குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**உ-ம்:** பாக்கு, காற்று

**விளக்கம் :**

பாக்கு என்பதில் **"கு"** குற்றியலுகரம் அதன் அயல் எழுத்து **"க்"** என்னும் வல்லினம் ஆகும். இங்கு குற்றியலுகரம் வல்லின மெய்யினால் தொடரப்படுவதனால் இது **"வன்றொடர் குற்றியலுகரம்"** ஆகும். இதேபோலவே ஏனைய தொடர்க் குற்றியலுகரங்களும் இனங்காணப்படும்.

### ☞ மென்றொடர்க் குற்றியலுகரம்

மெல்லின மெய்யினால் தொடரப்படுகின்ற குற்றியலுகரமே மென் றொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**உ-ம்:** பங்கு, அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☞ இடைத் தொடர்க் குற்றியலுகரம்.

இடையின மெய்யினால் தொடரப்படுகின்ற குற்றியலுகரம் இடைத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**உ-ம்** சால்பு, கொய்து

## ☞ உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.

உயிர் எழுத்தினால் தொடரப்படுகின்ற குற்றியலுகரம் உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஆகும்.

**உ-ம்:** பயறு, கயிறு

◆ சொற்களுக்கிடையில் வரும் உயிரினைத் தொடர்ந்து குற்றியலுகரம் வரும் போது அது உயிர்குறிலாக இருந்தாலென்ன (கயிறு) நெடிலாக இருந்தாலென்ன (தராது) அக் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகவே கொள்ளப்படும்.

## ☞ நெடில் தொடர்க் குற்றியலுகரம்

தனி நெடில் எழுத்தினால் தொடரப்படுகின்ற குற்றியலுகரம் நெடில் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**உ-ம்:** ஆடு, மாடு

◆ இரண்டு எழுத்துக்களைக் கொண்ட சொற்களில் குற்றியலுகரம் வரும் போது முதலாவது எழுத்து தனி நெடிலாகவே அமையும் அத்தகைய தனி நெடிலால் தொடரப்படும் குற்றியலுகரம் நெடில் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

## ☞ ஆய்தத் தொடர் குற்றியலுகரம்

ஆய்த எழுத்தினால் தொடரப்படுகின்ற குற்றியலுகரம் ஆய்தத் தொடர் குற்றியலுகரம் ஆகும்.

உ - ம் : எ.்.கு, அ.்.து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முற்றியலுகரம்**

குற்றியலுகரங்கள் தவிர்ந்த ஏனைய எல்லா உகரங்களும் முற்றியலுகரங்கள் எனப்படுகின்றன. முற்றியலுகரத்தின் மாத்திரை ஒன்று ஆகும்.

உ - ம் காவு, ஏழு, மேரு

## I1.2. குற்றியலிகரம்

குற்றியலுகரத்தின் முன்னால் யகர மெய் வருமாயின் அந்த உகரம் இகரமாகத் திரியும். அந்த இகரமே குற்றியலிகரம் எனப்படும். குற்றியலிகரத்தின் மாத்திரை அரை என்பர்.

பாட்டு + யாத்தனர் – பாட்டியாத்தனர்

அத்துடன், கேண்மியா, சென்மியா முதலான பதங்களில் வருகின்ற **"மியா"** என்னும் அசைச் சொல்லில் வரும் இகரமும் குற்றியலிகரமாகும்.

## I1.3. ஐகாரக் குறுக்கம்.

ஐகாரம் தன் பெயர் சுட்டும் போது மாத்திரையிலிருந்து குறையாது. ஆனால் ஐகாரம் மொழி முதல், இடை, கடைகளில் வரும் போது தன் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். இதுவே ஐகாரக்குறுக்கம் ஆகும். ஐகாரக் குறுக்கத்தின் மாத்திரை ஒன்று ஆகும்.

உ - ம் : மொழி முதல் - ஐந்து,
மொழி இடை - படைப்பு,
மொழி கடை - மலை

## I1.4. ஒளகாரக்குறுக்கம்

ஒளகாரம் தன் பெயர் சுட்டும் போது மாத்திரையிலிருந்து குறையாது. ஆனால், சொற்களில் வரும் போது மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும். இதுவே ஒளகாரக் குறுக்கம் ஆகும். ஒளகாரக் குறுக்கத்தின் மாத்திரை ஒன்று ஆகும்.

உ - ம் : ஒளடதம், கௌமாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## I1.5. மகரக் குறுக்கம்

ணகர, னகரங்களைத் தொடர்ந்தும், வகரத்தின் முன்னாலும் வரும் மகரம் 'மகரக்குறுக்கம்' எனப்படும். மகரக்குறுக்கத்தின் மாத்திரை ¼ ஆகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ண் | → | ம் | ⇨ | மருண்ம் |
| ன் | → | ம் | ⇨ | போன்ம் |
| ம் | ← | வ் | ⇨ | தரும் வளவன் |

## I1.6. ஆய்தக் குறுக்கம்

லகர, ளகர ஈற்றுச் சொற்கள் தகரத்தை வருமொழி முதலாகக் கொண்ட சொற்களோடு புணரும் போது லகர, ளகரங்கள் ஆய்தமாகத் திரியும். அந்த ஆய்தமே "ஆய்தக் குறுக்கம்" ஆகும். ஆய்தக் குறுக்கத்தின் மாத்திரை ¼ ஆகும்

கல் + தீது - க.்.றீது

முள் + தீது - மு.்.டீது

## I1.7. முற்றாய்தம்

புள்ளிவடிவினதாகிய ஆய்தம் குற்றெழுத்துக்களைத் தொடர்ந்தும் உயிர் ஏறிய வல்லினத்தின் மேலதாயும் வரும். இதுவே **"முற்றாய்தம்"** ஆகும். முற்றாய்தத்தின் மாத்திரை அரை ஆகும்.

**உ+ம்** - எ.்.கு, அ.்.து

- ஆய்த எழுத்தை "தனி நிலை எழுத்து" எனவும் வழங்குவர்.

## I1.8. உயிரளபெடை

செய்யுளில் ஓசை குறையும் போது அந்த ஓசையினை நிறைவு செய்ய நெடில் எழுத்துக்கள் தமது மாத்திரையிலிருந்து நீண்டொலிக்கும். இதுவே உயிரளபெடை எனப்படும். இவ்வாறு நீண்டொலித்தமைக்கு அடையாளமாக அளபெடுத்த நெடில் எழுத்தின் இனக்குறில் அயலிலே இடப்படும்.

உயிரளபெடையின் மாத்திரை மூன்று ஆகும்.

*(ஆ - அ), (ஈ - இ), (ஊ- உ), (ஏ- எ), (ஐ- இ), (ஓ- ஒ), (ஔ- உ)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரளபெடை மொழி முதல், மொழி இடை, மொழி கடை என மூன்று இடங்களில் வரும்.

மொழி முதல் - **ஓஒடம்**
மொழி இடை - **விடாஅது**
மொழி கடை - **கடாஅ**

**விளக்கம் :**

ஓஒடம் என்பதில் அளபெடுத்த எழுத்து ஓகாரம் ஆகும். அளபெடுத்தமைக்கு அடையாளமாக ஓகாரத்தின் இனக்குறில் ஒகரம் அயலிலே இடப்பட்டுள்ளது. இவ்வுயிரளபெடையின் மாத்திரை மூன்று ஆகும்.

## I1.9. ஒற்றளபெடை

செய்யுளில் ஓசை குறைவடைகின்ற பொழுது ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள், ∴, ஆகிய பதினொரு ஒற்றெழுத்துக்களும் தமது மாத்திரையிலிருந்து நீண்டொலிக்கும். இதுவே "ஒள்றளபெடை" ஆகும். ஒற்றெழுத்துக்கள் அளபெடுத்தமைக்கு அடையாளமாக அளபெடுத்த அதே ஒற்று அயலிலே இடப்படும். ஒற்றளபெடையின் மாத்திரை ஒன்று ஆகும். ஒற்றெழுத்துக்கள் குறில் கீழ் இடை, குறில் கீழ்கடை, குறிலிணைக் கீழ் இடை, குறிலிணைக்கீழ் கடை என நான்கு இடங்களில் அளபெடுக்கும்.

| | | **ஒற்றளபெடை** |
|---|---|---|
| குறில் கீழ் இடை | - எல்லை | - **எல்ல்லை** |
| குறில் கீழ் கடை | - எம் | - **எம்ம்** |
| குறில் இணைக்கீழ் இடை | - இலங்கு | - **இலங்ங்கு** |
| குறில் இணைக்கீழ் கடை | - விடம் | - **விடம்ம்** |

**விளக்கம் :**

இலங்ங்கு என்பதில் **'ங்'** என்னும் ஒற்று அளபெடுத்துள்ளது. அளபெடுத்தமைக்கு அடையாளமாக அதே ஒற்று (ங்) அயலிலே இடப்பட்டுள்ளது. இவ்வொற்றளபெடையின் மாத்திரை ஒன்றாகும்.

## I1.10. உயிர் மெய்

ஒவ்வொரு மெய்களும் உயிர்களோடு சேரும் போது உயிர் மெய் எழுத்துக்கள் தோன்றுகின்றன. 18 மெய்களும் 12 உயிர்களோடு சேரும் போது 216 உயிர் மெய் எழுத்துக்கள் தோன்றுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்துக்கள் | → | 18 x 12 = 216 |
| உயிர் மெய் நெடில் | → | 18 x 7 = 126 |
| உயிர்மெய் குறில் | → | 18 x 5 = 90 |
| உயிர் மெய் வல்லினம் | → | 6x x12 =72 |
| உயிர் மெய் மெல்லினம் | → | 6 x 12 = 72 |
| உயிர் மெய் இடையினம் | → | 6 x 12 = 72 |

### உயிர் மெய் எழுத்தின் மாத்திரை அறிதல்

உயிர் மெய் எழுத்தின் மாத்திரையாவது, மெய்யானது எந்த உயிருடன் கூடிவந்துள்ளதோ அந்த உயிரின் மாத்திரையையே உயிர் மெய் எழுத்துப் பெறும்.

க் + அ[1 மாத்திரை]
க ⟶ 1 மாத்திரை

க் + ஆ[2 மாத்திரை]
கா ⟶ 2 மாத்திரை

### முதல் நிலை எழுத்துக்கள்

மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்களை 'முதல் நிலை எழுத்துக்கள்' என்பர். முதல் நிலை எழுத்துக்களை உயிர் முதல் நிலை எழுத்துக்கள், மெய் முதல் நிலை எழுத்துக்கள் என இரண்டு வகைப்படுத்தலாம்.

## உயிர் முதல் நிலை எழுத்துக்கள்

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு முதலில் வரும் .

| | | |
|---|---|---|
| அ - அன்னை | உ - உலகம் | ஐ - ஐயம் |
| ஆ - ஆமை | ஊ- ஊஞ்சல் | ஒ - ஒன்பது |
| இ - இலை | எ - எருது | ஓ - ஓசை |
| ஈ - ஈட்டி | ஏ - ஏணி | ஔ - ஔடதம். |

## மெய் முதல் நிலை எழுத்துக்கள்

மெய்யெழுத்துக்கள் உயிர் எழுத்துக்களோடு சேர்ந்து மொழிக்கு முதல் வருகின்றன. சில மெய்கள் மொழிக்கு முதலில் வருவதில்லை. மொழிக்கு முதலில் வரும் என இலக்கணகாரர் கூறிய சில மெய்கள் தற்காலத்தமிழில் மொழிக்கு முதலில் வருவது மிக அரிதாகவே உள்ளது. பழந்தமிழில் மொழிக்கு முதலில் வராத சில மெய்கள் தற்காலத்தமிழில் பிறமொழிச் சொற்களில் மொழிக்கு முதலில் வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க் - கதிர், காது
ச் - சமர், சாதி
த் - தவறு, தானம்
ப் - பட்டம், பாட்டு
ஞ் - ஞாயிறு, ஞானம்
ந் - நன்மை, நாகு
ம் - மண், மானம்
ய் - யமகம், யானை
வ் - வட்டம். வானம்

- மொழிக்கு முதலில் வராத மெய்கள் எனக் கூறப்பட்ட எழுத்துக்களுள் **ட், ற, ர், ல்** ஆகிய மெய்கள் தற்காலத்தமிழில் வந்து சேர்ந்த மொழிச் சொற்களிலே முதலில் வரக்காணலாம்.
  ட் - டமாரம், டாக்டர்.
  ற் - றப்பர், றேடியோ
  ர் - ரயர், ராகம்
  ல் - லட்டு , லொறி
- **ங், ண், ன், ள், ழ்** ஆகிய மெய்கள் முதல் நிலையாக வருவதில்லை. ஆயினும் அவை தத்தம் பெயரைச் சுட்டும் போது மொழிமுதல் வருகின்றன.
  ஙகரம், ணகரம், ளகரம், ழகரம்
- **ஜ, ஷ, ஸ, ஹ**, ஆகிய கிரந்த எழுத்துக்கள் தமிழோடு வந்து சேர்ந்து பிறமொழிச் சொற்களில் முதலில் வரக்காணலாம்.
  ஜ் - ஜனாதிபதி. ஜனநாயகம்.
  ஷ் - ஷரத்து, ஷியாம்
  ஸ் - ஸாம், ஸர்ப்பம்
  ஹ - ஹர்த்தால்

## இறுதிநிலை எழுத்துக்கள்

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துக்களே இறுதி நிலை எழுத்துக்கள் எனப்படுகின்றன. இறுதி நிலை எழுத்துக்களை உயிர் இறுதி நிலை எழுத்துக்கள், மெய் இறுதிநிலை எழுத்துக்கள் என இரு வகைப் படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர் இறுதி நிலை எழுத்துக்கள்.

'எகரம்' தவிர்ந்த பதினொரு உயிர்களும் மொழிக்கு இறுதியில் வரும் எனக் கூறப்படுகின்றது.

அ - பல. கரிய
ஆ - பலா, சா
இ - சதி. கரி
ஈ - தீ, நீ
உ - பயறு, சாக்கு
ஊ - பூ
ஏ - சே, நீயே
ஐ - பாதை, ஆமை
ஒ - நொ
ஓ - கோ. அவரோ
ஔ - கௌ, வெள

◆ தற்காலத் தமிழில் எ, ஒ, ஔ தவிர்ந்த எனைய உயிர்களே மொழிக்கு இறுதியில் வரக்காணலாம். ஏ, ஓ ஆகிய எழுத்துக்கள் இன்றைய வழக்கில் இடைச் சொல்லாகவே அதிகம் வருகின்றன.

## மெய் இறுதிநிலை எழுத்துக்கள்

ஞ், ண், ந், ம், ன், ய். ர். ல், வ், ழ், ள் ஆகிய மெய்கள் மொழிக்கு இறுதியில் வரும் எனக் கூறப்படுகின்றது.

ஞ்- உரிஞ்
ண் - கண்
ந் - வெரிந்
ம் - மரம்
ன் - கூன்
ர் - வேர்
ல் - கல்
வ் - தெவ்
ழ் - வாழ்
ள் - அவள்
ய் - வாய்

இங்கு கூறப்பட்ட மெய்களில் ஞ், ந், வ் ஆகிய மெய்கள் பழந்தமிழில் கையாளப்பட்டுள்ளன. தற்காலத் தமிழில் பயன்படுத்துவதில்லை. பழந்தமிழில் வல்லின மெய்கள் மொழிக்கு இறுதியில் வரவில்லை. ஆயினும் தற்காலத்தமிழில் வல்லினம் ஆட்பெயரையும் இடப்பெயரையும் பிறமொழிச் சொற்களையும் குறிக்க மொழிக்கு இறுதியில் வருகிறது.

க் - ஈராக் . கேக்
ட் - ஜெராட், டேவிட்
ப் - ஜோசப்
ச் - சூரிச், டோர்ச்
த் - சிந்துபாத், பாக்தாத்
ற் - கறற்

ஙகரம் தற்காலத் தமிழில் இடப்பெயர், ஆட்பெயரில் மொழிக்கு இறுதியில் வரக்காணலாம்.
ஹொங்கொங், மாஒசேதுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைநிலை மெய்ம்மயக்கம்.

மொழிக்கு இடையிலே வருகின்ற மெய்யெழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று சேருவது 'இடைநிலை மெய்மயக்கம்' எனப்படும். இடைநிலை மெய்மயக்கம் உடன்நிலை மெய்மயக்கம், வேற்றுநிலை மெய்மயக்கம் என இருவகைப்படும்.

### உடன் நிலை மெய்மயக்கம்

சொற்களுக்கிடையில் வரும் மெய்யானது தன்னோடு தான் சேருவதே உடன் நிலை மெய்மயக்கம் ஆகும். க். ச். த். ப் ஆகிய நான்கு மெய்களும் உடன் நிலையாக மட்டுமே மயங்கும் எனக் கூறப்படுகின்றது.

க் - அக்கா (க்க்)
ச - மச்சாள் (ச் ச் )
த் - அத்தான் (த் த்)
ப் - அப்பா (ப்ப்)

**உடன் நிலை மெய்மயக்கத்தை இனங்காணல்.**

க் + ஆ
அ க் கா

க் - என்னும் மெய் தன்னோடு தான் (க் - க்) சேர்வதனால் உடன்நிலை மெய்ம்மயக்கம் ஆயிற்று.

தற்கால வழக்கில் சில பதங்களிலே இவை வேற்று நிலையாக மயங்கிவருவதனையும் காணலாம்.

க் - த் - பக்தி, பகவத்கீதை
த் - ம் - ஆத்மா
ப் - த் - சப்தம்

### வேற்று நிலை மெய்மயக்கம்

சொற்களுக்கு இடையில் வருகின்ற மெய்யானது தான் அல்லாத வேறு மெய்களோடு சேருவதே 'வேற்றுநிலை மெய்மயக்கம' ஆகும். ர், ழ் ஆகிய இரண்டு மெய்களும் வேற்று நிலையாக மட்டுமே மயங்கும் எனக் கூறப்படுகின்றது.

ர் - சார்பு (ர் ப்) ழ் - வாழ்வு (ழ் வ்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேற்று நிலை மெய் மயக்கத்தை இனங்காணல்.**

ப் + உ
சா ர் பு

ர் - என்னும் மெய்யானது தான் அல்லாத வேறு மெய்யோடு (ர்- ப்) சேருவதனால் வேற்றுநிலை மெய்ம்மயக்கம் ஆயிற்று.

## மெய்மயக்கங்கள்




உடன் நிலையாக மட்டும் மயங்கும் மெய்கள் - **4**

வேற்று நிலையாக மட்டும் மயங்கும் மெய்கள் - **2**

உடன் நிலையாக மயங்கும் மெய்கள் - **16** (4 + 12)

வேற்று நிலையாக மயங்கும் மெய்கள் - **14** (2 + 12)

உடன் நிலையாகவும் வேற்று நிலையாகவும் மயங்கும் மெய்கள்- **12**

## மூன்று மெய்கள் மயங்கல்

சொற்களுக்கிடையில் மூன்று மெய்கள் மயங்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்வாறு மெய்கள் மயங்கும் போது முதலாவது மெய் **ய், ர், ழ்** ஆகிய மூன்றினுள் ஒன்றாக இருக்கும்

ய் - பாய்ந்தான் (ய் ந் த்)

ர் - சந்தர்ப்பம் (ர் ப் ப்)

ழ் - வாழ்ந்தான் (ழ் ந் த்)

## சுட்டெழுத்துக்கள்

**அ, இ, உ** ஆகிய மூன்று எழுத்துக்களும் மொழிக்கு முதலில் நின்று சுட்டுப் பொருளை உணர்த்துமாயின் அவை 'சுட்டெழுத்துக்கள்' என்று அழைக்கப்படும். சுட்டெழுத்துக்களை அகச்சுட்டு, புறச்சுட்டு என இரு வகைப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகச்சுட்டு

சுட்டெழுத்தையும் சுட்டுகின்ற பொருளையும் பொருள் படப்பிரிக்க முடியாதாயின் அது 'அகச் சுட்டு' எனப்படும்.

அ- அது,
இ - இது,
உ- உது

## புறச் சுட்டு

சுட்டெழுத்தையும் சுட்டுகின்ற பொருளையும் பொருள்பட பிரிக்கமுடியுமாயின் அது 'புறச்சுட்டு' எனப்படும்.

அ - அக்கடல் ( அ + கடல்)
இ - இக்கடல் ( இ + கடல்)
உ - உக்கடல் ( உ + கடல்)

அக்கடல் - அ + கடல்
↓ ↓
சுட்டெழுத்து சுட்டும் பொருள்.

### வினா எழுத்துக்கள்.

எ, யா மொழிக்கு முதலிலும், ஆ, ஓ மொழிக்கு இறுதியிலும் ஏ இரு வழிகளிலும் நின்று வினாப்பொருளைத் தருமாயின் அவை வினா எழுத்துக்கள் எனப்படும்.

**மொழிமுதல்** - எ - என்ன?
யா - யார்?

**மொழி இறுதி** - ஆ - வந்தானா? ( வந்தான் + ஆ )
ஓ - வந்தானோ? ( வந்தான் + ஓ )

**இருவழி** ஏ → முதல் - ஏன்
→ இறுதி - வந்தானே (வந்தான் + ஏ )

வினா எழுத்துக்களையும் அகவினா, புறவினா என இருவகைப் படுத்துவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அகவினா

வினா எழுத்தையும் வினாவப்படுகின்ற பொருளையும் பொருள்படப் பிரிக்கமுடியாதாயின் அது 'அகவினா' எனப்படும்.

உ - ம்: எ - என்ன

யா - யார்

### புற வினா

வினை எழுத்தையும் வினாவப்படுகின்ற பொருளையும் பொருள் பொருள்படப் பிரிக்கமுடியுமாயின் அது 'புறவினா' எனப்படும்.

எ - எக்கடல் (எ + கடல்)

ஆ - வந்தானா (வந்தான் + ஆ)

| | | | |
|---|---|---|---|
| எக்கடல் - | எ | + | கடல் |
| | ↓ | | ↓ |
| | வினாஎழுத்து | | வினாப்பொருள். |

## இன எழுத்துக்கள்

ஓர் எழுத்தானது இன்னோர் எழுத்தோடு வரி வடிவிலோ அல்லது ஒலி வடிவிலோ அல்லது மாத்திரை அளவிலோ ஒத்திருப்பது இன எழுத்து ஆகும். இன எழுத்துக்களை உயிர் இன எழுத்து, மெய் இன எழுத்து என இருவகைப்படுத்துவர்.

### உயிர் இன எழுத்து

ஒவ்வொரு நெடில் எழுத்துக்கும் ஒவ்வொரு குறில் எழுத்து இனமாக அமையும்.

( அ - ஆ ), ( இ - ஈ), (உ - ஊ), (எ - ஏ) (ஒ - ஓ) (ஐ - இ), (ஔ - உ)

- ஐ, ஔ - கூட்டெழுத்துக்கள் என அழைக்கப்படுகின்றன.

### மெய் இன எழுத்துக்கள்

ஒவ்வொரு வல்லினத்திற்கும் அதன் கீழ் வருகின்ற மெல்லினம் இனமாக அமையும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வல்லினம் - | க் | ச் | ட் | த் | ப் | ற் |
| மெல்லினம் - | ங் | ஞ் | ண் | ந் | ம் | ன் |

- இடையின மெய்களுக்கு (ய், ர், ல், வ், ள், ழ்) இடையின எழுத்துகள் இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### போலி எழுத்துக்கள்

ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்திற்குப் பதிலாக பிறிதொரு எழுத்து நின்று அதே பொருளைத் தருமாயின் அது போலி எழுத்து எனப்படும். போலி எழுத்துக்களை மொழிமுதற்போலி, மொழி இடைப்போலி, மொழிகடைப் போலி என மூன்று வகைப்படுத்தலாம்.

| | | போலி | எழுத்து |
|---|---|---|---|
| மொழி முதற் போலி | - ஐயர் | - அய்யர் | |
| மொழி இடைப்போலி | - இடையன் | - இடயன். | |
| மொழி கடைப் போலி | - பந்தல் | - பந்தர் | |

# 2. பதம்

எழுத்துக்கள் ஒன்றோ அல்லது பலவோ ஓரெழுத்தாகியோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்து நின்றோ பொருள் தருமாயின் அது 'பதம்' எனப்படும். பதங்களைப் பகுபதம், பகாப்பதம் என இரண்டு வகைப்படுத்தலாம்.

## 2. I. பகுபதம்

பகுதி, விகுதி, இடைநிலை என்கின்ற ஆக்கக் கூறுகளால் பொருள்படப் பிரிக்கக்கூடிய பதங்களே 'பகுபதங்கள்' எனப்படுகின்றன.

உ - ம் :

கூனி - **கூன்** + **இ**
(பகுதி) (விகுதி)

### பகுபத உறுப்புக்கள்

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் ஆகிய ஆறுமே பகுபத உறுப்புக்கள் ஆகும். ஒரு பகுபதத்தில் ஆகக் குறைந்தது இரண்டு பகுபத உறுப்புக்களும் ஆகக் கூடிய ஆறு பகுபத உறுப்புக்களும் காணப்படும்.

| **பகுபதம்** | **பகுதி** | **சந்தி** | **விகாரம்** | **இடைநிலை** | **சாரியை** | **விகுதி** |
|---|---|---|---|---|---|---|
| கூனி | கூன் | - | - | - | - | இ |
| உண்டான் | உண் | - | - | ட் | - | ஆன் |
| படிப்பான் | படி | ப் | - | ப் | - | ஆன் |
| நடித்தனன் | நடி | த் | - | த் | அன் | அன் |
| வந்தனன் | வா | த் | (ந்) | த் | அன் | அன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி

பகுபதம் ஒன்றில் உள்ள ஆக்கக் கூறுகளில் முதல் உள்ள பகாப்பதமே பகுதி ஆகும்.

உ - ம்: தேடினான் - தேடு + இன் + ஆன்
(பகுதி)

சில பகுதிகள் இரட்டித்துக் காலங்காட்டும் இயல்புடையன. அதாவது கு, டு, று இல் முடிகின்ற சில பகுதிகள் இரட்டித்துக் காலங்காட்டக்கூடியவை.

கு - புகு + ஆன் - புக்கு + ஆன் - புக்கான்
டு - விடு + ஆன் - விட்டு + ஆன் - விட்டான்
று - உறு + ஆன் - உற்று + ஆன் - விற்றான்

**விளக்கம் :**

புகு + ஆன் என்பதில் பகுதியாகிய 'புகு' என்பதில் உள்ள இறுதி எழுத்து 'கு' ஆகும். 'கு' வில் உள்ள மெய்யாகிய (கு- க் + உ) 'க்' இரட்டிக்க புக்கு எனப் பகுதி வந்துள்ளது. இதனுடன் 'ஆன்' விகுதி இணைய 'புக்கான்' என இறந்தகால வினை வந்துள்ளது.

- சில பகுபதங்களின் பகுதி கூட்டுப்பகுதியாகவும் வரும். கூட்டுப் பகுதிகள் பகுபதங்கள் போலத் தோன்றினாலும் அவற்றினைப் பிரிக்க முடியாது.

உ + ம் வாழைக்குட்டிகள் - வாழைக்குட்டி + கள்
↓
(கூட்டுப் பகுதி)

**விளக்கம் :**

வாழைக்குட்டி என்பதை வாழை + குட்டி எனப் பிரிக்க முடியாது. இவ்விரண்டு சொற்களும் சேர்ந்து உருவான தனிச் சொற்களாகவே வாழைக்குட்டி அமைகிறது.

**கூட்டுப் பகுதிகள் சில :-**

| பகுபதங்கள் | கூட்டுப் பகுதி |
|---|---|
| ஏற்றுக் கொண்டான் | ஏற்றுக்கொள் |
| கைவிடுவோம் | கைவிடு |
| கோழிக்குஞ்சுக்கு | கோழிக்குஞ்சு |
| பின்வாங்கினான் | பின்வாங்கு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விகுதி

பகுபதம் ஒன்றில் உள்ள ஆக்கக் கூறுகளில் இறுதியில் வரும் பகாப்பதமே 'விகுதி' ஆகும். விகுதிகளில் திணை, பால். எண், இடம் என்பவற்றை உணர்த்தும்.

சென்றான் - செல் + ற் + ஆன்
(விகுதி)

## இடைநிலை

பகுபதம் ஒன்றில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும் ஆக்கக்கூறே இடைநிலையாகும். இடைநிலைகள்,

i. பெயரிடைநிலை
ii. வினை இடைநிலை
iii. எதிர் மறை இடைநிலை

என மூன்று வகைப்படும்.

- **பெயரிடை நிலைகள் காலங்காட்டுவதில்லை**

  கவிஞன் - கவி + ஞ் + அன் - ஞ் - பெயரிடைநிலை

- **வினை இடை நிலைகள் காலங்காட்டும் இயல்பு உடையன.**

**இறந்தகால இடை நிலைகள்.**

| | | |
|---|---|---|
| உண்டான் | - உண் + ட் + ஆன | - ட் |
| கற்றான் | - கல் + ற் + ஆன் | - ற் |
| படித்தான் | - படி + த் + த் + ஆன் | - த் |
| போனான் | - போ + ன் + ஆன் | - ன் |
| ஓடினான் | - ஓடு + இன் + ஆன் | - இன் |
| ஓடியது | - ஓடு + இ + அது | - இ |

**நிகழ்கால இடை நிலைகள்..**

| | | |
|---|---|---|
| உண்கிறான் | - உண் + கிறு + ஆன் | - கிறு |
| உண்கின்றான் | - உண் + கின்று + ஆன் | - கின்று |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எதிர்கால இடை நிலைகள்..**

படிப்பான் - படி + ப் + ப் ஆன் - ப்
மடிவான் - மடி + வ் + ஆன் - வ்

- எதிர் மறைப் பொருள் உணர்த்தும் இடைநிலை எதிர்மறை இடை நிலையாகும்.

சென்றிலன் - **(இல்) - எதிர்மறை இடைநிலை**

**எதிர்மறை இடை நிலைகள் சில**

செல்லாத - **(ஆ)**
பேசாதே - **(ஆத்)**
எழுதமாட்டோம் - **( மாட்டு)**

**சாரியை**

**அன், அத்து, அற்று, இன், அம்,** முதலான சாரியைகள் பகுபதங்களில் வருகின்றன. சாரியைகள் பல்வேறு செயற்பாடுகள் உடையவையாகக் காணப்படுகின்றன.

**அன்** - படித்தனன் ⇨ படி + த் + த் + **அன்** + அன்

மகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமை உருபை ஏற்கும் போது அத்து சாரியை பெற்றுப் புணரும்.

**அத்து** - மரம் + ஐ ⇨ மரம் + **அத்து** + ஐ - மரத்தை

சில சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது 'இன்' சாரியை பெறும்.

காடு + கு ⇨ காடு + **இன்** + கு - காட்டிற்கு

புளி + பழம் ⇨ புளி + **அம்** + பழம் - புளியம்பழம்

புளி, மாதுளை, பனை முதலான சொற்கள் கூட்டுப் பெயராக்கத்தில் 'அம்' சாரியை பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சந்தி

பகுதி, விகுதி, இடைநிலை ஆகிய பகுபத உறுப்புக்கள் புணரும் போது / இரண்டு சொற்கள் புணர்ந்து தொகைச் சொல்லாகும் போது இடையில் தோன்றும் எழுத்து 'சந்தி' ஆகும்.

படித்தான் - படி + த் + த் + ஆன்
↓
சந்தி

பூவை - பூ + வ் + ஐ
↓
சந்தி

படித்தான், கடித்தான் - என வருகின்ற வினைகளை இலக்கணக் காரர் படி + த் + த் + ஆன், கடி + த் + த் + ஆன் எனப் பிரித்து முதல் வரும் 'த்' சந்தியாகவும், அடுத்து வருகின்ற "த்" இடைநிலை யாகவும் கொள்வர்.

ஆனால், நவீன மொழியியலாளர்கள் படித்தான் - படி + **த்த்** +ஆன், கடித்தான் - கடி + **த்த்** + ஆன் என பிரித்து **- த்த் -** இடைநிலையாகக் கொள்வர்.

### விகாரம்

புணர்ச்சியின் போது பகுதி, விகுதி, இடைநிலை முதலான உறுப்புக்களில் ஏற்படும் மாற்றமே விகாரம் ஆகும்.

நடந்தனன் - நட + த் (ந்) + த் + அன் + அன் - த் - **(ந்)**
பழமரம் - பழம் + மரம் - பழம் - **பழ**
வருவான் - வா + வ் + ஆன் - வா - **வரு**
கண்டான் - காண் + ட் + ஆன் - காண்- **கண்.**

## 2. II. பகாப்பதம்

பகுதி, விகுதி, இடைநிலை என்கின்ற ஆக்கக் கூறுகளால் பொருள்படப் பிரிக்கமுடியாத பதங்களே 'பகாப்பதங்கள்' எனப்படுகின்றன.

உ_ ம் - கல், மண், நட, சிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3.பெயர்ச் சொற்கள்

பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் இயல்புடையன.

**ஐ** - கண்ணனை
**ஆல்** - கத்தியால்
**கு** - இராமனுக்கு
**இன்** - ஊரின்
**அது** - எனது
**கண்** - மலைக்கண்

## 3. I. அறுவகைப் பெயர்கள்.

பொருட்பெயர் - புத்தகம் , மரம்
இடப்பெயர் - மைதானம், இந்தியா, ஈரற்பெரியகுளம்
காலப்பெயர் - மாரி, கோடை, கார்த்திகை
சினைப்பெயர் - ஈரல், தலை, பூ, இலை
குணம்/ பண்புப்பெயர் - கருமை, வெண்மை, வீரம். கோபம்.
தொழிற்பெயர் - ஆடுதல், பாடுதல், கொலை

## 3. II. மாற்றுப் பெயர்.

பெயர்ச் சொற்களுக்குப் பதிலாக வேறு சில பெயர்ச் சொற்களை மாற்றீடாகப் பயன்படுத்துகின்றோம். இவ்வாறு பயன்படுத்தும் சொற்களையே 'மாற்றுப் பெயர்கள்' என்பர்.

**மாற்றுப் பெயர்கள் சில** - நான், நாங்கள், நீ, நீங்கள், இவன், இது, தான். யார், எதுவோ, யாராவது.

**எடுத்துக் காட்டு :**
முகுந்தன் முரளியைப் பார்த்து நீ கொழும்புக்குப் போகவில்லையா எனக் கேட்டார்.

**விளக்கம் :**

இதில் வந்துள்ள மாற்றுப் பெயராகிய **'நீ'** முரளி என்னும் பெயர்ச் சொல்லுக்குப் பதிலாக் வந்துள்ளது.

- **தான்** என்னும் மாற்றுப் பெயரிற்குப் பதிலாக **அவன், அது,** என்கின்ற மாற்றுப் பெயர்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் ***பொருள் மயக்கம்*** ஏற்படுகின்றது.

**உ - ம்:** பாலா **தன்னுடைய** தந்தையைக் கண்டான்.
பாலா **அவனுடைய** தந்தையைக் கண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம் :**

முதலாவது வாக்கியத்தில் வந்த தன் (தான்) என்னும் மாற்றுப் பெயர் எழுவாய்ப் பெயராகிய பாலாவைச் குறிக்கிறது. இவ்வாக்கியத்தில் பொருள் மயக்கம் இல்லை.

ஆனால், இரண்டாது வாக்கியத்தில் வந்துள்ள அவன் எனும் மாற்றுப் பெயர் எழுவாய்ப் பெயராகிய பாலாவைக் குறிக்கிறதா அவனது நண்பனைக் குறிக்கிறதா? என்பதுவே பொருள் மயக்கம்.

## 3. III. ஆக்கப் பெயர்

பெயர்ச் சொற்களோடு அல்லது வினைச் சொற்களோடு ஆக்கப் பெயர் விகுதிகளை சேர்த்து ஆக்கப்படும் பெயர்ச் சொற்களையே 'ஆக்கப் பெயர்கள்' என்பர்.

**பெயர்ச் சொல் + ஆக்கப்பெயர் விகுதி ⟹ ஆக்கப் பெயர்**

| | |
|---|---|
| உழைப்பு + ஆளி = உழைப்பாளி | (பெயர் + ஆளி =ஆக்கப்பெயர்) |
| பாக்கியம் + சாலி = பாக்கியசாலி | (பெயர் + சாலி = ஆக்கப்பெயர்) |
| வேலை + காரன் = வேலைக்காரன் | (பெயர் + காரன் =ஆக்கப்பெயர்) |
| வேலை + காரி = வேலைக்காரி | (பெயர் + காரி =ஆக்கப்பெயர்) |
| வெற்றி + ஆளன் = வெற்றியாளன் | (பெயர் + ஆளன் =ஆக்கப்பெயர்) |

**வினைச்சொல் + ஆக்கப்பெயர் விகுதி ⟹ ஆக்கப்பெயர்**

| | |
|---|---|
| காண் + சி = காட்சி | (வினை + சி = ஆக்கப்பெயர்) |
| உயர் + ச்சி = உயர்ச்சி | (வினை + ச்சி = ஆக்கப்பெயர்) |
| கொல் + ஐ = கொலை | (வினை + ஐ = ஆக்கப்பெயர்) |
| தாழ் + வு = தாழ்வு | (வினை + வு = ஆக்கப்பெயர்) |
| திற + ப்பு = திறப்பு | (வினை + ப்பு = ஆக்கப்பெயர்) |
| வலி + மை = வலிமை | (வினை + மை = ஆக்கப்பெயர்) |
| பெறு + கை = பெறுகை | (வினை + கை = ஆக்கப்பெயர்) |
| தணி + க்கை = தணிக்கை | (வினை + க்கை = ஆக்கப்பெயர்) |
| தீர் + வை = தீர்வை | (வினை + வை = ஆக்கப்பெயர்) |

- **வினையின் ஈற்றுமெய் இரட்டிப்பதனால் தோன்றும் ஆக்கப்பெயர்**

  பேசு – பேச்சு (ஈற்றுமெய் **'ச்'** இரட்டித்துள்ளது)

  பாடு – பாட்டு (ஈற்றுமெய் **'ட்'** இரட்டித்துள்ளது)

  ஆடு – ஆட்டம் (ஈற்றுமெய் இரட்டித்து **அம்** சேரல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **குறில் நெடிலாவதனால் தோன்றும் ஆக்கப் பெயர்.**

பெறு - பேறு

படு - பாடு

சுடுபடு - சுடுபாடு

இடிபடு - இடிபாடு

## 3. IV. கூட்டுப் பெயர்

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் சேர்த்து உருவாக்கப்படும் பெயர்ச் சொற்களையே 'கூட்டுப் பெயர்கள்' என்பர்.

உ+ ம் மின்சாரம் - மின் + சாரம்

வைத்தியசாலை - வைத்தியம் + சாலை

கல்வித்திணைக்களம் - கல்வி + திணை+ களம்

- **பெயரோடு பெயர்சேர்ந்து உருவாகும் கூட்டுப் பெயர்**

| பெயர் + பெயர் | கூட்டுப் பெயர் |
|---|---|
| தேர் + ஓட்டி | தேரோட்டி |
| நூல் + ஆசிரியர் | நூலாசிரியர் |
| காடு + கோழி | காட்டுக்கோழி |
| வான் + ஒலி | வானொலி |

- **வினையோடு பெயர் சேர்ந்து உருவாகும் கூட்டுப் பெயர்**

| வினை + பெயர் | கூட்டுப் பெயர் |
|---|---|
| கொல் + களிறு | கொல்களிறு |
| சுடு + சோறு | சுடுசோறு |
| தாழ் + குழல் | தாழ்குழல் |
| கூட்டு + அமைப்பு | கூட்டமைப்பு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. V. தொழிற்பெயர்

தமிழில் வினையடியை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் பெயர்ச் சொற்களும் உள்ளன. வினையை அடியாகக் கொணடு செயல் நிகழ்வதனை அல்லது நிகழாமையைக் காட்டும் பெயர்ச் சொற்களே 'தொழிற்பெயர்கள்' எனப்படுகின்றன.

**காலங்காட்டா தொழிற்பெயர்**

ஓடல் - ஓடு + அல் = 'அல்' விகுதி
பாய்தல் - பாய் + தல் = 'தல்' விகுதி
} **வினை அடி + அல்/ தல்**

**காலங்காட்டும் தொழிற்பெயர்**

சென்றது - செல் + ற் + அது
செல்வது - செல் + வ் + அது
செல்கிறது- செல்+ கிறு + அது
} **வினை அடி + காலங்காட்டும் இடைநிலை + அது**

சென்றமை - செல் + ற் + அ + மை - **வினை அடி + காலங்காட்டும் இடைநிலை + பெயரெச்ச விகுதி + மை**

**எதிர்மறைத் தொழிற் பெயர்**

செல்லாமை - செல் + ஆ + மை
செல்லாதது - செல் + ஆத் + அது
} **வினையடி + எதிர் மறை இடைநிலை + மை / அது**

## 3. VI. வினையாலணையும் பெயர்

வினையடிகளைக் கொண்டு பிறந்து செயலையும், அதனைச் செய்யும் கருத்தாவையும் உணர்த்தி வரும் பெயர்களை 'வினையாலணையும் பெயர்கள்' என்பர்.

**உ - ம்: பார்த்தவன்.**

விளக்கம் :

'பார்த்தல்' என்னும் செயலைக் காட்டுகின்றது. அத்துடன், அச் செயலுக்குக் காரணமான கருத்தாவையும் காட்டகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வினையாலணையும் பெயரின் அமைப்பு | வினையடி | காலம் காட்டும் இடை நிலை | படர்க்கை இடப்பெயர் |
|---|---|---|---|
| உண்டவன் | உண் | ட் | அவன் |
| உண்டவள் | உண் | ட் | அவள் |
| உண்டவர் | உண் | ட் | அவர் |
| உண்டது | உண் | ட் | அது |
| உண்டவை | உண் | ட் | அவை |

**எதிர்மறை வினையாலணையும் பெயர் = வினையடி + எதிர்மறை இடைநிலை + படர்க்கை இடப்பெயர்**

உண்ணாதவன் = உண் + ஆத் + அவன்

## 3.VII ஆகுபெயர்.

ஒரு பொருளின் இயற்பெயர் அப்பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளுக்கு தொன்று தொட்டு ஆகி வருவது ஆகுபெயர் எனப்படும். ஆகுபெயர் பதினாறு வகையுடையதாகும்.

### *1. பொருளாகுபெயர்:*

மல்லிகை சூடினாள்

இங்கே மல்லிகை என்னும் முதற்பொருளின் பெயர் அதன் சினையாகிய மலருக்கு ஆகி வருவதனால் பொருளாகுபெயர் ஆகும்.

### *2. இடவாகுபெயர் :-*

காடு சத்தமிட்டது

இங்கே காடு என்னும் இடப் பெயர் அங்கே இருக்கின்ற விலங்குகளுக்கு ஆகிவருவதனால் இடவாகுபெயர் ஆகும்.

### *3. காலவாகுபெயர்*

காரறுத்தது

இங்கே கார் என்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வருவதனால் காலவாகுபெயர் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. *சினையாகுபெயர்*

வெற்றிலை நட்டான்
இங்கே வெற்றிலை என்னும் சினைப் பெயர் அதன் முதலாகிய கொடிக்கு ஆகி வருவதனால் சினைப் பெயர் ஆகும்.

### 5. *குணவாகுபெயர்*

நீலம் சூடினாள்
இங்கே நீலம் என்னும் நிறக் குணப்பெயர் அதனையுடைய குவளை மலருக்கு ஆகிவருவதனால் குணவாகுபெயர் ஆகும்.

### 6. *தொழிலாகுபெயர்*

பொங்கல் உண்டான்
இங்கே பொங்கல் என்னும் தொழிற்பெயர் அதனைப் பொருந்திய உணவுக்கு ஆகிவருவதனால் தொழிலாகுபெயர் ஆகும்.

### 7. *எண்ணலளவையாகுபெயர்*

காலாலே நடந்தான்
இங்கே கால் என்னும் எண்ணலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட உறுப்புக்கு ஆகிவருவதனால் எண்ணலளவை ஆகுபெயர் ஆகும்.

### 8. *எடுத்தலளவையாகுபெயர்*

இரண்டு வீசை தந்தான்
இங்கே வீசை என்னும் எடுத்தளவைப் பெயர் அவ்வளைவைக் கொண்ட பொருளுக்குஆகி வருவதனால் எடுத்தலளவையாகுபெயர் ஆகும்.

### 9. *முகத்தலளவையாகுபெயர்*

நாழி உடைந்தது
நாழி என்னும் முகத்தலளவைப் பெயர் அவ்வளவைக் கொண்ட கருவிக்கு ஆகிவருவதனால் முகத்தலளவை யாகுபெயர் ஆகும்.

### 10. *நீட்டலளவையாகுபெயர்*

கீழைத்தடி விளைந்தது
இங்கே தடி என்னும் நீட்டலளவைப் பெயர் அதனால் அளக்கப்பட்ட விளை நிலத்திற்கு ஆகி வருவதனால் நீட்டலளவையாகு பெயராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 11. சொல்லாகுபெயர்

இந்நூலுக்கு உரை செய்தான்
இங்கே உரை என்னும் சொல்லின் பெயர் அதன் பொருளுக்கு ஆகிவருவதனால் சொல்லாகு பெயர் ஆகும்.

### 12. தானியவாகுபெயர்

விளக்கு முறிந்தது
இங்கே விளக்கு என்னும் தானியின் (தானத்தில் உள்ளது) பெயர் அதற்குத் தானமாகி (இடம்) தண்டிற்கு ஆகிவருவதனால் தனியாகு பெயர் ஆகும்.

### 13. கருவியாகுபெயர்

திருவாசகம் ஓதினான்
இங்கே வாசகம் என்னும் கருவிப் பெயர் அதன் காரியமாகிய ஒரு நூலுக்கு ஆகிவருவதனால் கருவியாகுபெயர் ஆகும்.

### 14. காரியவாகுபெயர்

அலங்காரம் கற்றான்.
இங்கே அலங்காரம் என்னும் காரியத்தின் பெயர் அதனை உணர்த்தும் கருவியாகிய நூலுக்கு ஆகி வருவதனால் காரியவாகுபெயர் ஆகும்.

### 15. கருத்தாவாகுபெயர்

கம்பர் படித்தான்.
இங்கே கம்பர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் செய்யப்பட்ட நூலுக்கு ஆகி வருவதனால் கருத்தாவாகுபெயராகும்.

### 16. உவமையாகு பெயர்

பாவை ஆடினாள்.
இங்கே பாவை என்னும் உவமையின் பெயர் அதனை உடைமையாகக் கொண்ட பெண்ணுக்கு ஆகி வருவதனால் உவமையாகு பெயர் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. VIII. இடுகுறி, காரண, காரண இடுகுறிப்பெயர்கள்

**இடுகுறிப் பெயர் / இட்டகுறி**

காரணம் கருதாது பொருளை உணர்த்தி நிற்கும் பெயரே இடுகுறிப் பெயராகும்.

**உ - ம்:** மரம், மலை, கடல், சோறு

இவை காரணம் கருதாது வந்தமையினால் இடுகுறிப் பெயர்கள் ஆகும்.

**காரணப் பெயர்:**

யாதேனும் ஒரு காரணம் கருதி பொருளை உணர்த்தி நிற்கும் பெயர் 'காரணப் பெயர்' ஆகும்.

பறவை - பறப்பதால் பறவை ஆயிற்று

அணி - அணிவதனால் அணி ஆயிற்று

**காரண இடுகுறிப் பெயர்:**

காரணம் கருதிய பொழுது அக்காரணத்தையுடைய பல பொருள்களைக் குறிப்பதாயும், காரணம் கருதாது பொழுது இடுகுறி அளவாக நின்று ஒரு பொருளைக் குறிப்பதாகவும் அமையும் பெயர் காரண இடுகுறிப்பெயர் எனப்படும்.

முக்கணன், அந்தணன், கறங்கு, முள்ளி

***அந்தணன்*** - காரணம் கருதியபொழுது அழகிய தண்ணளி உடைய எல்லோரையும் குறிப்பதாகவும், காரணம் கருதாது போது பார்ப்பனை மட்டும் குறிப்பதாகவும் அமைவதனால் இது காரண இடுகுறி பெயராயிற்று

| **பொதுப் பெயர்** | - **சிறப்புப் பெயர்.** |
|---|---|
| இடுகுறிப்பொதுப்பெயர்-மரம், | இடுகுறிசிறப்பு - ஆல் |
| காரணப்பொதுப்பெயர்-பறவை | காரணசிறப்பு-காரி (கரிக்குருவி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. வேற்றுமை

பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை எனப்படும். வேற்றுமை உருபுகளை ஏற்பது பெயர்ச் சொல்லின் சிறப்பிலக்கணம் ஆகும். தமிழில் எட்டு வகையான வேற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால் நவீன இலக்கணகாரர் எட்டுக்கும் அதிகமாக வேற்றுமைகள் தற்காலத் தமிழில் வழங்கப்படுவதாகக் கூறுவர்.

## 4. I. முதலாம் வேற்றுமை/ எழுவாய் வேற்றுமை

முதலாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை. முதலாம் வேற்றுமையின் பொருள் எழுவாய் ஆகும். முதலாம் வேற்றுமை வினைப் பயனிலை, பெயர்ப் பயனிலை, வினாப்பயனிலை கொண்டதாக அமையும்.

ஜோதி வந்தாள் - வினைப் பயனிலை
ஜோதி அழகி - பெயர்ப் பயனிலை
ஜோதி யார்? - வினாப் பயனிலை

## 4. II. இரண்டாம் வேற்றுமை/ செயப்படு பொருள் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமையின் உருபு **"ஐ"** ஆகும். இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருளில் வருவதனால் செயப்படுபொருள் வேற்றுமை எனவும் அழைக்கப்படுகின்றது. இரண்டாம் வேற்றுமையின் பொருள்களாக ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்பன கொள்ளப்படுகின்றன.

**ஆக்கல்** - வீட்டைக் கட்டினாள்
**அழித்தல்** - வீட்டை இடித்தான்
**அடைதல்** - ஊரை அடைந்தான்
**நீத்தல்** - ஊரை நீங்கினான்
**ஒத்தல்** - இலக்குமியைப் போன்றவள்
**உடைமை** - பொன்னை உடையான்.

இங்கே வந்துள்ள ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை என்பன வினையின் பயன்கள். இவை வேற்றுமையின் பொருள்கள் அல்ல என்பது நவீன இலக்கண காரரின் கருத்து.

உ - ம் :
முகத்தைத் தடவினான்
கையை முறுக்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் வாக்கியத்தில் "ஐ" உருபேற்ற பெயர்ச் சொற்களாகிய முகம், கை என்பன மேற்கூறிய பொருளில் வரவில்லை. இங்கு இப்பெயர்ச் சொற்கள் செயப்படுபொருளாக வருகின்றன எனப்பொதுவாகக் கூறலாம்.

## 4. III. மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு என்பனவாகும் மூன்றாம் வேற்றுமையின் பொருள் கருவி, கருத்தா, உடனிகழ்ச்சி என்பனவாகும்.

**கருவிப்பொருள்** - கத்தியால் வெட்டினான் / கத்தியான் வெட்டினான்.
**கருத்தாப்பொருள்** - குயவனால் பானை வனையப்பட்டது.
**உடனிகழ்ச்சிப்பொருள்** - தாயோடு குட்டி சென்றது.

**ஆன்** உருபு தற்காலத்தில் பயன்படுத்தப்படுவதில்லை **கொண்டு, மூலம், உடன்** என்பன சொல்லுருபுகளாகத் தொழிற்படுகின்றன.

***கொண்டு*** - கத்தி கொண்டு வெட்டினான்.
***மூலம்*** - விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்குச் சென்றேன்.
***உடன்*** - தாயுடன் குட்டி சென்றது.

வாக்கியங்களில் **'ஒடு'** உருபு உடனிகழ்ச்சிப் பொருளில் மட்டுமன்றி வேறு பொருட்களிலும் வரக் காணலாம்.

**அடைமொழிப்பெயர்** - துரியோதனன் கர்வத்தோடு சிரித்தான்.
**கலப்புறுபொருள்** - உழுந்தோடு பயறு கலந்துள்ளது.
**கூட்டல்பொருள்** - ஒன்றோடு இரண்டைக் கூட்டினால் மூன்று
**வரையறைப்பொருள்** - இதுவரை கூறியதோடு உன் பேச்சைநிறுத்து.

**'ஆல்'** உருபு காரணப்பொருள், மூலப்பொருள் போன்ற பொருள்களிலும் வரக்காணலாம்.
**காரணப் பொருள்** - அவன் முகம் கோபத்தால் சிவந்திருந்தது.
**மூலப் பொருள்** - வெள்ளியால் செய்த பதக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. IV. நான்காம் வேற்றுமை

நான்காம் வேற்றுமையின் உருபு 'கு' ஆகும். நான்காம் வேற்றுமை கொடை, பகை, நட்பு, தகுதி, நிமிர்த்தம், முதல், முறை முதலிய பொருள்களில் வரும்.

**கொடை** - ஏழைக்குப் பொன் கொடுத்தான்.
**பகை** - பாலாவுக்குப் பகைவன் ராமு.
**நட்பு** - இராமனுக்கு நண்பன் குகன்.
**நிமிர்த்தம்** - கூலிக்கு வேலை செய்தான்.
**தகுதி** - அரசனுக்கு உரியது மணி முடி
**முதல்** - தாலிக்குப் பொன்
**முறை /உறவு** - தசரதனுக்கு மகன் இராமன்.

"கு" உருபு மேற்கூறிய பொருட்களில் மட்டுமன்றி வேறும் பல பொருள்களில் வரக்காணலாம்.

***எல்லைப்பொருள்*** - ஊருக்குக் கிழக்கே பெருங்கடல் உண்டு.
***காலக் குறிப்பு*** - வாரத்திற்கு இரண்டு நாள் சந்தை கூடும்.
***வீதம்*** - என் வகுப்பில் நூற்றுற்கு ஐம்பது பேரே பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியிருக்கிறார்கள்.

ஆக, பொருட்டு, நிமிர்த்தம் என்பன நான்காம் வேற்றமையின் சொல்லுருபுகளாகும்.

**ஆக** - கூலிக்**காக** வேலை செய்தான்.
**பொருட்டு** - கூலியின் **பொருட்டு** வேலை செய்தான்.
**நிமிர்த்தம்** - கூலியின் **நிமிர்த்தம்** வேலை செய்தான்.

## 4. V. ஐந்தாம் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை உருபுகள் ***இல், இன்*** என்பனவாகும். ஐந்தாம் வேற்றுமையின் பொருள் ***நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது*** என்பனவாகும்.

**நீங்கல்** - மலை**யில்** வீழ் அருவி
**ஒப்பு** - காளை**யில்** வலியான்
**எல்லை** - இலங்கை**யின்** வடக்கே இந்தியா உள்ளது.
**ஏது** - கல்வி**யில்** பெரியன் கம்பன்.

தற்கால வழக்கில் ***இருந்து*** என்கின்ற சொல்லுருபே நீங்கல் பொருளில் வரக்காணலாம்.

***இருந்து*** - புகையிரத நிலையத்தில**ிருந்து** புகைவண்டி புறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. Vi. ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமையின் உருபுகளாக அது, ஆது, அ என்பன கொள்ளப்படுகின்றன. ஆறாம் வேற்றுமையின் பொருள் கிழமைப் பொருள் ஆகும். கிழமைப் பொருள் தற்கிழமை, பிறிதின் கிழமை என இருவகைப்படும்.

**தற்கிழமை** - தன்னிலிருந்து பிரிக்கமுடியாத உறவு தற்கிழமையாகும்.

உ - ம் - என**து** கை, இராம**னது** கால்

**பிறிதின் கிழமை** - தன்னிலிருந்து பிரிக்கக் கூடிய உறவு பிறிதின் கிழமையாகும்.

என**து** வீடு, இராம**னது** அம்பு.

ஆறாம் வேற்றுமையின் சொல்லுருபாக ***'உடைய'*** கொள்ளப்படும்.

என்**னுடைய** வீடு, கண்ண**னுடைய** புத்தகம்.

***'இன்'*** உருபும் சில இடங்களில் ஆறாம் வேற்றுமையின் உடைமைப் பொருளில் வருகிறது.

கண்ண**னின** புத்தகம்.

## 4. VII. ஏழாம் வேற்றுமை / இட வேற்றுமை.

ஏழாம் வேற்றுமையின் உருபாக ***இல், உள், உழி, இடம், வயின், கண்*** முதலானவை கொள்ளப்படுகின்றன. ஏழாம் வேற்றுமையின் பொருள் இடப் பொருளாகும்.

மலைக்**கண்** கோவில் உண்டு

கூட்டில குருவி இருந்தது

அவரது பேச்சிலதத்துவக்கருத்துக்கள் உள்ளன.

## 4. VIII. எட்டாம் வேற்றுமை/ விளிவேற்றுமை

எட்டாம் வேற்றுமைக்குப் பொருள் இல்லை. அதன் பொருள் விளி ஆகும். விளிக்கப்படும் போது சில பெயர்ச் சொற்கள் மாற்றம் பெறுவதனைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இயல்பாதல்*** - நண்பன் வா
***ஈறு கெடுதல்*** - நண்ப படி
***'ஏ' மிகுதல்*** - மகனே பார்
***'ஓ' மிகுதல்*** - மகனோ கேள்.
***ஈறு திரிதல்*** - அன்னாய் வாராய்
***ஈற்றியல் திரிதல்*** - மக்காள் வாரீர்.

சில பெயர்ச் சொற்கள் வேற்றமை உருபை ஏற்கும் போது மாற்றங்கள் பெறுகின்றன.

எடுத்துக் காட்டு
நான் + ஐ - என் + ஐ - என்னை
நீ + ஐ - உன் + ஐ - உன்னை
தான் + ஐ - தன் + ஐ- தன்னை
தாம் + ஐ - தம் + ஐ - தம்மை.

## உருபு மயக்கம்

ஒரு வேற்றுமைக்குரிய உருபு நிற்க வேண்டிய இடத்திற்குப் பதிலாக பிறிதொரு வேற்றுமை உருபு நிற்பது உருபு மயக்கம் ஆகும்.

உ - ம் ***கிழங்கு மணற்கு ஈன்ற முளை***

**விளக்கம்**

இங்கு ***'மணல்'*** நான்காம் வேற்றுமை 'கு' உருபின் கோடற்பொருளாகாது ஏழாம் வேற்றுமை கண் உருபின் இடப் பொருளில் வருகின்றது. ஏழாம் வேற்றமையின் வேற்றுமையின் கண் உருபு நிற்கவேண்டிய இடத்தில் நான்காம் வேற்றுமையின் 'கு' உருபு நிற்பதனால் உருபு மயக்கமாகும்.

## பொருள் மயக்கம்

ஒரு வேற்றுமையின் பொருளானது பிறிதொரு வேற்றுமை உருபுடனும் தகுதியாக வருவது பொருள் மயக்கம் எனப்படும்.

***உ - ம்:*** *அரிசியால் சோறு ஆக்கினான்.*

**விளக்கம்**

செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமைக்குரிய **'ஐ'** உருபுடன் வரும். இங்கு அரிசியால் என்பதில் மூன்றாம் வேற்றுமையின் **'ஆல்'** உருபு செயப்படுபொருள் வந்துள்ளமையால் **"பொருள் மயக்கம்"** ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. வினைச் சொற்கள்

வினைச் சொற்கள் வேற்றுமை உருபை ஏற்பதில்லை. இவை காலத்தை உணர்த்தும் இயல்புடையன. வினைச் சொற்களைப் பலவாறாக வகைப்படுத்தலாம்.

## 5.I. தெரிநிலை வினையும் குறிப்பு வினையும்.

**தெரிநிலை வினை**

காலங்காட்டும் இடைநிலைகளைப் பெற்று, காலத்தை வெளிப் படையாகக் காட்டும் வினைகளே தெரிநிலை வினைகள் எனப்படும்.

உ - ம் - உண்டான் - உண் + ட் + ஆன்

உண்டான் என்பது 'ட்' என்னும் இறந்தகால இடைநிலை பெற்று இறந்தகாலத்தை வெளிப்படையாக உணர்த்துவதனால் இது தெரிநிலை வினை ஆயிற்று.

**குறிப்பு வினை**

காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினைகளைக் குறிப்பு வினை என்பர்.

உ - ம் : அவன் பொன்னன்

**விளக்கம்**

இதில் பொன்னன் என்பது நேற்றுப் பொன்னன், இன்று பொன்னன், நாளை பொன்னன் எனக் குறிப்பதால் காலம் உணர்த்துவதாகக் கூறப்படும். ஆனால் இங்கு பொன்னன் என்னும் பதம் காலங்காட்டாது, நேற்று, இன்று, நாளை என வரும் பதங்களே காலத்தைக் காட்டியுள்ளன. தற்காலத் தமிழில் குறிப்பு வினைப்பாகுபாடு அவசியமற்றதாகும். இன்று இவை பொதுவாக பண்பினை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் பெயர்ப் பயனிலைகளாகப் பயன்படக் காணலாம்.

உ- ம் அவன் நல்லவன்.

## 5. II. முற்று வினையும் எச்சவினையும்.

*முற்று வினை / வினை முற்று*

பால் காட்டும் விகுதிகளைக் கொண்டு முடிவடையும் வினையே - முற்றுவினை எனப்படும்.

படர்க்கை வினை முற்று - உண்டான், படித்தான்.

தன்மை வினை முற்று - உண்கிறேன், படிக்கிறேன்.

முன்னிலை வினை முற்று - உண்பாய், படிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எச்சவினை*

பால்காட்டும் விகுதியினைக் கொண்டு முடிவடையாது பெயரையோ வினையையோ கொண்டு முடியும் எச்சவினை ஆகும். எச்சவினைகள் பெயரெச்சம், வினையெச்சம் என இரண்டு வகைப்படுத்தலாம்.

**பெயரெச்சம்:** பால்காட்டும் விகுதியைக் கொண்டு அமையாது பெயரெச்ச விகுதியை உடையதாய் பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சமாகும்.

உ-ம். கற்ற மாணவன் கற்ற - கல் + ற் + அ

கற்ற ↓ பெயரெச்சம்; மாணவன் ↓ பெயர்; கல் - வினையடி; ற் - கா.காட்டும் இடைநிலை; அ - பெயரெச்ச விகுதி

படித்தமாணவன் - இறந்தகாலப் பெயரெச்சம்
படிக்கின்ற மாணவன் - நிகழ்காலப் பெயரெச்சம்
படிக்கும் மாணவன் - எதிர்காலப் பெயரெச்சம்
படிக்காத மாணவன் - எதிர்மறைப் பெயரெச்சம்.

***வினையெச்சம்:*** பால் காட்டும் விகுதியைக் கொண்டு அமையாது வினையெச்ச விகுதியை உடையதாய் வினையைக் கொண்டு முடிவது வினையெச்சமாகும்.

**உ-ம்:** கற்று முடித்தான் கற்று - கல் + ற் + உ

கற்று ↓ வினையெச்சம்; முடித்தான் ↓ வினை; கல் ↓ வினையடி; ற் ↓ கா.கா.இடைநிலை; உ ↓ வினையெச்ச விகுதி

**படிக்காது நின்றான்**
**படிக்காமல் நின்றான்** } எதிர்மறை வினையெச்சம்

## 5. III. உடன்பாட்டு வினையும் எதிர்மறை வினையும்

***உடன்பாட்டு வினை:***

வினை நிகழ்கின்றமையைக் காட்டுவது உடன்பாட்டு வினை ஆகும்.

**உ - ம்:**

காந்தன் பார்த்தான்.

**எதிர்மறை வினை:** வினை நிகழாமையைக் காட்டுவது எதிர்மறை வினை ஆகும்.

**உ-ம்:** அது வராது.
அவன் படித்தான்.
அவன் உண்ணமாட்டான்.
அவன் படிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. IV. ஏவல் வினையும் வியங்கோள் வினையும்.

**ஏவல் வினை:** முன்னிலையில் உள்ள வரை விளித்து ஒரு வினையை நிகழ்த்துமாறு ஏவுவதற்குப் பயன்படும் வினை ஏவல் வினை ஆகும்.

ஏவல் ஒருமை வினைமுற்று - கமலா புத்தகத்தை எடு.
எதிர்மறை ஏவல் ஒருமை வினை முற்று - அங்கே பார்க்காதே.
ஏவல் பன்மை வினை முற்று - விரைவாக எழுதுங்கள்.
எதிர்மறை ஏவல் பன்மை வினைமுற்று - என்னோடு பேசாதீர்கள்.

- ஏவல் வினை கடப்பாட்டு ஏவல், விருப்பு ஏவல் என இரண்டு வகைப்படுகிறது.

***கடப்பாட்டு ஏவல்:-*** இதனை பயன்படுத்துகின்றவர், கேட்பவர் ஏவலுக்கு ஏற்ப செயற்படவேண்டும் எனக் கட்டாயம் எதிர் பார்ப்பார். ஆதலால் இது கடப்பாட்டு ஏவல் எனப்படுகின்றது.

உ - ம் : எல்லோரும் எழும்புங்கள்
அங்கே செல்லாதீர்கள்.

***விருப்பு ஏவல்:-*** இந்த ஏவல் வினையைப் பயன்படுத்துபவரின் விருப்பத்தை வெளிப்படுத்தும் ஏவலே விருப்பு ஏவல் ஆகும். விருப்பு ஏவல் 'ஏன்' என்னும் விகுதி உடையதாக அமையும்.

உ - ம் : எங்கள் வீட்டுக்கு வாருங்களேன்.

***வியங்கோள் வினை:-*** க, இய, இயர் என்கின்ற வியங்கோள் விகுதி பெற்று வரும் வினைகளை வியங்கோள் வினைகள் என்பர்.

மணமக்களே வாழ்க - வாழ்த்துதல்
கொடிய போர் ஒழிக - வெறுப்பு
பின்வரும் பாடலின் பொருளை எழுதுக - வினயமாக வேண்டிக் கொள்ளுதல்

தற்கால வழக்கில் 'அட்டும்' வியங்கோள் வினை விகுதியாகக் கையாளப்படுகின்றது.

பகைவர்கள் ஒழியட்டும் - வெறுப்பு

## 5. V. தனிவினையும் கூட்டு வினையும்.

***தனிவினை:-*** தனிவினையடியைக் கொண்ட வினையே 'தனிவினை' எனப்படுகின்றது.

**உ - ம்** - உண்டான் - உண் + ட் + ஆன் - வினையடி - உண் ஆகும். இதனை (உண்) மேலும் பிரிக்க முடியாது. ஆதலால் தனி வினையடி எனப்படுகின்றது. இவ்வாறு தனிவினையடியைக் கொண்ட வினை தனி வினை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கூட்டு வினை:-*** கூட்டு வினையடியைக் கொண்ட வினைகளே கூட்டு வினை எனப்படும்.

உ-ம்: கைவிட்டான்.

**விளக்கம் :**

இதன் வினையடி 'கைவிடு' என்பதாகும். இதனை மேலும் கை + விடு எனப் பிரிக்கலாம். இத்தகைய வினையடி கூட்டு வினையடி எனப்படும். இவ்வாறு கூட்டு வினையடிகளைக் கொண்ட வினைகளே கூட்டு வினைகள் எனப்படுகிறது.

| பெயர் + வினை - கூட்டு வினை |
|---|
| தோல்வி + அடை- தோல்வியடை |
| கட்டளை+ இடு - கட்டளையிடு |
| கேள்வி + படு - கேள்விப்படு |

| வினை + வினை - கூட்டு வினை |
|---|
| சொல்லி + காட்டு - சொல்லிக்காட்டு |
| விட்டு + கொடு - விட்டுக்கொடு |
| எழுதி + கொள் - எழுதிக்கொள். |

| இடை + வினை - கூட்டு வினை |
|---|
| பின் + வாங்கு - பின்வாங்கு |
| சரி + கட்டு - சரிக்கட்டு |
| பின் + பற்று - பின்பற்று |

- ***யுத்தம் நடக்காவிட்டால் நாடு முன்னேறியிருக்கும் - எதிர் மறை நிபந்தனை வினையெச்சம்.***
- ***நீ பாடினால் நான் ஆடுவேன் - நிபந்தனை வினையெச்சம்***

## 5. VI. செயப்படுபொருள் குன்றிய வினையும் செயப்படுபொருள் குன்றாவினையும்

***செயப்படுபொருள் குன்றிய வினை:*** ஒரு வாக்கியத்தில் வரும் வினையானது செயப்படுபொருளை ஏற்று வராவிட்டால் அது செயப்படு பொருள் குன்றிய வினை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயப்படுபொருள் குன்றிய வினையை இனங்காணல்.

வந்த வினையானது எதை, யாரை என்னும் வினாவுக்கு விடை தராவண்ணம் அமையவேண்டும்.

உ+ம்: நான் கதிரையில் இருந்தேன்.

**விளக்கம் :**

இதில் 'இருந்தேன்' என்னும் வினை செயப்படுபொருளை ஏற்கவில்லை. எதை இருந்தேன்? யாரை இருந்தேன? என்னும் வினாவுக்கு விடை தரவில்லை. ஆகவே இது செயப்படுபொருள் குன்றிய வினை ஆகும்.

செயப்படுபொருள் குன்றிய வினைகள் சில - நடந்தான், இருந்தான், சிரித்தான்.

செயப்படுபொருள் குன்றிய வினையடிகள் சில - நட, இரு, சிரி

***செயப்படுபொருள் குன்றாவினை:-*** ஒரு வாக்கியத்தில் வருகின்ற வினையானது செயப்படுபொருளை ஏற்று வருமாயின் அது செயப்படுபொருள் குன்றாவினை எனப்படும்.

## செயப்படுபொருள் குன்றா வினையை இனங்காணல்.

வந்த வினை எனது எதை? யாரை? என்னும் வினாவுக்கு விடை தரும் வண்ணம் அமைய வேண்டும்.

உ-ம்: தம்பி பாடம் படித்தான்.

**விளக்கம் :**

இதில் 'படித்தான்' என்னும் வினை ***'பாடம்'*** என்னும் செயப்படுபொருளை ஏற்றுள்ளது. எதைப் படித்தான்? என்னும் வினாவுக்கு ***'பாடம்'*** என்பது விடையாக அமைந்துள்ளது. ஆகவே இது செயப்படுபொருள் குன்றா வினையாகும்.

**செயப்படுபொருள் குன்றாவினைகள் சில** - கடித்தான், உடைத்தான், பார்த்தான்.

**செயப்படுபொருள் குன்றாவினையடிகள் சில** - கடி, உடை, பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுவினைகள்

சில வினையடிகள் செயப்படுபொருள் குன்றியனவாகவும் செயப்படுபொருள் குன்றாதனவாகவும் தொழிற்படும். அவையே பொது வினைகள் எனப்படுகின்றன.

| பொதுவினை | செயப்படுபொருள் குன்றியவினை | செயப்படுபொருள் குன்றாவினை |
|---|---|---|
| எரி | எரிந்தான் | எரித்தான் |
| நனை | நனைந்தான் | நனைத்தான் |
| கரை | கரைந்தான் | கரைத்தான் |
| முறி | முறிந்தது. | முறித்தது |

## 5. VII. தன்வினையும் பிறவினையும்.

***தன்வினை:-*** ஒரு வினையின் பயன் எழுவாய்க் கருத்தாவை அடையும் வினையே தன் வினை ஆகும்.

**உ-ம்:** குமார் நிலத்தில் உருண்டான்

**விளக்கம் :**

இங்கு உருண்டான் என்பது தன்வினையாகும். அதாவது, இவ்வாக்கியத்தில் வந்துள்ள உருள்தல் எனும் வினையை நிகழ்த்தியவன் குமார் குமாரே. இவ் வினையின் கருத்தா, உருள்தல் என்கின்ற செயலுக்கு உட்பட்டவனும் குமார்.

**தன்வினைகள் சில:** உண்டான், நடந்தான், உருண்டான், திரும்பினான். உண்டான்.

- இவ்வினைகளை இயங்குவினைகள் என்றும் அழைப்பர்.

***பிறவினை:-*** ஒரு வினையின் பயன் எழுவாய்க் கருத்தாவை அன்றி பிறிதொன்றைச் சேருமாயின் அவ்வினை பிறவினை எனப்படும்.

உ - ம் குமார் உரலை நிலத்தில் உருட்டினான்.

**விளக்கம் :**

இவ்வாக்கியத்தில் உருட்டினான் என்பது பிறவினையாகும் அதாவது, இவ்வாக்கியத்தில் வினையை நிகழ்த்தியவன் (உருட்டியவன்) தம்பி. ஆனால் வினையின் பயன் அடைந்தது (உருண்டது) உரல். ஆகவே இது பிறவினையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிறவினைகள் சில:-** ஆட்டினான். நடத்தினான். உருட்டினான் திருப்பினான், ஊட்டினான்

◆பிறவினைகள் பொதுவாக செயப்படுபொருள் குன்றாவினைகளாக அமையும்.

◆பிறவினைகளை இயக்குவினைகள் என்றும் வழங்குவர்.

***காரணவினை:-*** ஒரு வினையைக் கருத்தா நிகழ்த்தாது பிறிதொருவரைக்கொண்டு நிகழ்த்தும் வினை காரணவினை எனப்படும். காரணவினைகள் வி, பி, விப்பி முதலிய விகுதிகளாலும், செய், வை, பண்ணு முதலிய துணைவினைகளைக் கொண்டு ஆக்கப்படும்.

உ-ம்: குமார் உரலை உருட்டுவித்தான்.

**விளக்கம் :**

இங்கு உருட்டுவித்தான் என்பது காரணவினையாகும். அதாவது, இவ்வாக்கியத்தில் வினையை நிகழ்தியவன் குமார் அல்லன், குமார் பிறிதொருவனைக் கொண்டு இவ்வினையை நிகழ்த்துகின்றான். இங்கு குமார் வினை நிகழ்த்துவதற்குக் காரணமாக இருப்பதனால் இது காரணவினை எனப்பட்டது.

**காரண வினைகள் சில** - ஆட்டுவித்தான், கட்டுவித்தான். படிப்பித்தேன், ஓட்டப்பண்ணினார், படிக்கவைத்தேன்.

| தன்வினை | பிறவினை | காரணவினை |
|---|---|---|
| ↓ | ↓ | ↓ |
| உருண்டான் | உருட்டினான் | உருட்டுவித்தான் |
| ↓ | ↓ | ↓ |
| வினையின் பயன் செய்தவனை அடைவது | வினையின் பயன் செய்தவனை அடையாது பிறிதொன்றை அடைவது | வினை நிகழக்காரணம் கருத்தா. வினையை நிகழ்த்துபவன் வேறொருவன். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. VIII. செய்வினையும் செயப்பாட்டு வினையும்

***செய்வினை :*** எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகளை செய்வினைகள் என்பர்.

**உ-ம்:** பூனை பாலைக் குடித்தது

**விளக்கம் :**

இங்கு, குடித்தது என்பது செய்வினை ஆகும். அதாவது, இவ்வாக்கியத்தில் குடித்தது என்னும் வினையில் எழுவாய், பூனை ஆகும். குடித்தது என்னும் வினையின் கருத்தாவாக அமைவது பூனை ஆகும். இவ்வாறு எழுவாயைக் கருத்தாவாகக் கொள்ளும் வினைகள் செய்வினைகள் எனப்படும்.

**செய்வினைகள் *சில-*** படித்தான், குடித்தான், பாடினாள், வெட்டினான்

***செயப்பாட்டு வினை*** : செய்வினையில் உள்ள செயப்படுபொருளை எழுவாயைக்கொள்ளும் வினை செயப்பாட்டு வினை ஆகும்.

**செய்வினை** - கண்ணன் சோற்றை உண்டான்.
**செயப்பாட்டுவினை** - கண்ணனால் சோறு உண்ணப்பட்டது.

***செய்வினை வாக்கியமொன்றை செயப்பாட்டுவினை ஆக்கும் முறை***

1. செய்வினையில் உள்ள செயப்படுபொருள்செயப்பாட்டு வினையில் எழுவாயாக மாறும்.
2. செய்வினையின் எழுவாய்செயப்பாட்டுவினையில் 3ஆம் வேற்றுமையின் **'ஆல்'** உருபை ஏற்கும்.
3. செய்வினையின் அடிச்சொல் செயப்பாட்டுவினையில் ***'செய்ய'*** என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாகும்.
4. செயப்பாட்டு வினையில் ***'படு'*** என்னும் துணைவினை பெறும்.

செய்வினை - ***கண்ணன்*** ↓ எழுவாய் | ***சோற்றை*** ↓ செயப்படுபொருள் | ***உண்டான்*** ↓ பயனிலை

↓ ஆல் (3ம் வேற்றுமை உருபு) | ↓ சோறு (எழுவாய்) | ↓ உண்ண + படு (வினையெச்சம் - துணைவினை)

செயப்பாட்டு வினை - ↓ ***கண்ணனால்*** | ↓ ***சோறு*** | ↓ ***உண்ணப்பட்டது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆செயப்படுபொருள் குன்றிய செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக்க முடியாது.

**செயப்பாட்டுவினைகள் சில** : படிக்கப்பட்டது, பிடிக்கப்பட்டது. தடுக்கப்பட்டது, காட்டப்பட்டது,

## 5. IX. முதல் வினையும் துணை வினையும்.

***முதல் வினை:*** வினையின் முதல் உறுப்பாக நின்று அடிப்படைப் பொருளைத் தருவதே முதல் வினை ஆகும்.

அவன் கதிரையில் இருந்தான்.

இருந்தான் என்பதில் இரு என்னும் வினை முதல் வினை ஆயிற்று.

***துணை வினை:*** கூட்டு வினையில் இரண்டாவது உறுப்பாக வந்து, தனது அடிப்படை பொருளைத் தராது வேறு பொருளைத் தரும் வினை துணைவினை ஆகும்.

**உ-ம்** : நண்பன் பாடசாலைக்கு வந்திருந்தான்.

**விளக்கம் :**

வந்திருந்தான் என்பதில் முதல் உறுப்பாகிய ***'வந்து'*** அடிப்படைப் பொருளில் வந்துள்ளது. இரண்டாம் உறுப்பாகிய ***'இரு'*** தன் அடிப்படைப் பொருளில் வராது முதல் உறுப்போடு சேர்ந்து வேறு பொருள் தருவதனால் துணை வினையாயிற்று.

**முதல் வினையையும் துணைவினையையும் இனங்காணல்.**

பார்த்தான்
↓
முதல்வினை

சொல்லிப்பார்த்தான்
↓
துணைவினை

**முதல் வினை**

**பார்** - நான் படம் பார்த்தேன்

**இரு** - குருவி மரத்தில் இருந்தது

**வை** - பானையை அடுப்பில் வைத்தாள்

**கட்டு** - தாத்தா ஆட்டைக் கட்டினார்

**விடு** - அவனை வெளியே விடு

**கொடு** - நான் நண்பனுக்குப் புத்தகம் கொடுத்தேன்.

**துணை வினை**

தம்பி விழப்பார்த்தான்

கலா கனடாவுக்குப் போயிருப்பாள்.

ஆசிரியர் எங்களைப் பாடவைத்தார்

இராணுவம் தீவிரவாதிகளை ஒழித்துக்கட்டியது.

நான் விடையைப் பார்த்துவிட்டேன்.

நான் நண்பனுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. அடைகள்

பெயர்ச்சொற்களின்/ வினைச்சொற்களின் பண்பை உணர்த்துவனவற்றையே அடைகள் என்பர். அடைகளைப் பெயரடை, வினையடை என இரண்டு வகைப்படுத்தலாம்

## 6. I. பெயரடை.

பெயர்ச் சொல்லின் பண்பை உணர்த்துவது 'பெயரடை' ஆகும்.

அழகிய ↓ பெயரடை    வீடு ↓ பெயர்

**விளக்கம் :**

வீடு என்னும் பெயர்ச் சொல்லின் பண்பினை விசேடிப்பது அழகிய ஆகும். ஆதலால், வீடு எனினும் பெயரின் அடை அழகிய என்பதாகும்.

**பெயரடையை இனங்காணல்.**

எப்படிப்பட்ட? / எப்படியான? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவன 'பெயரடைகள்' ஆகும்.

இனிய பேச்சு - **எப்படிப்பட்ட பேச்சு?** - இனிய (பெயரடை)
இனிமையான பேச்சு- **எப்படியான பேச்சு?** - இனிமையான (பெயரடை)

பெயரடைகள் தனிப்பெயரடை, ஆக்கப்பெயரடை என இரு வகைப்படும்.

### 6.I.i. தனிப் பெயரடை

***இய, -அ*** என்னும் விகுதிகளைக் கொண்ட பெயரடைகள் 'தனிப்பெயரடைகள்' ஆகும்.

**நல்ல** பையன்,
**வாடிய** மரம்

### 6.I.ii. ஆக்கப்பெயரடை

***ஆன, -உள்ள*** என்னும் விகுதிகளைக் கொண்ட பெயரடைகள் 'ஆக்கப்பெயரடைகள்' ஆகும்.

| பெயர்+ ஆன - ஆக்கப்பெயரடை |
|---|
| இனிமை+ ஆன - இனிமையான |
| அருமை+ ஆன - அருமையான |
| பண்பு + ஆன - பண்பான |

| பெயர் + உள்ள - ஆக்கப்பெயரடை |
|---|
| இனிமை+ உள்ள- இனிமையுள்ள |
| அருமை + உள்ள - அருமையுள்ள |
| பண்பு + உள்ள - பண்புள்ள |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. II. வினையடை

வினைச் சொல்லின் பண்பை உணர்த்துவது வினையடையாகும்.

**உ-ம்:** புகை வண்டி வேகமாக வருகிறது.

↓ வேகமாக – வினையடை ↓ வருகிறது – வினை

**விளக்கம் :**

'வருகிறது' என்னும் வினைச்சொல்லின் பண்பை விசேடிப்பது 'வேகமாக' ஆகும். ஆதலால் வருகிறது என்னும் வினையின் அடை **'வேகமாக'** ஆயிற்று.

### வினையடையை இனங்காணல்.

சிலவினைகள் அடிக்கடி, அங்கு, நேற்று, அருகில் முதலான வினை யடைகளைக் கொண்டிருக்கும். எப்படியாக? எப்படியாய்? என்னும் வினாவுக்கு விடையாக அமைவனவும் வினையடைகள் ஆகும்.

- வினையடைகளை தனிவினையடை, கூட்டு வினையடை என இருவகைப்படுத்தலாம்.

## 6. II.i. தனி வினையடை

அடிக்கடி, அங்கு, நேற்று, அருகில், காலையில், முன்னால் முதலியன தனி வினையடைகள் ஆகும்.

**உ-ம்:** நான் நண்பனுடன் **நேற்றுக்** கதைத்தேன்.

↓ நேற்றுக் – தனிவினையடை

**விளக்கம் :**

இதில் கதைத்தேன் என்னும் வினை நிகழ்ந்த காலத்தை 'நேற்று' என்னும் அடை உணர்த்துகினறது.

பாலா வட்டத்தின் 'நடுவில்' நின்றான் - இடம் உணர்த்தும் வினையடை
நான் அவனை 'இடைக்கிடை' பார்ப்பேன்- காலத்தொடர்ச்சி உணர்த்தும்
↓
வினைஅடை

**தனி வினையடைகள் சில**

நேற்று, இன்று, நாளை, பிறகு, காலையில், உள்ளே, முன்னர், அடிக்கடி இங்கு, மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. II.ii. கூட்டு வினையடை / ஆக்கவினையடை

பெயர்ச் சொற்களுடன் **-ஆக, -ஆய்** விகுதிகளை இணைத்து ஆக்கப்படும் வினையடை 'கூட்டுவினையடை' ஆகும்.

**உ-ம்:** பாடல் இனிமையாக இருந்தது.

கூட்டு வினையடை

**விளக்கம் :**

இனிமையாக என்பது கூட்டுவினையடை ஆகும். இனிமை +ஆக - பெயர்ச் சொல்லுடன் **'ஆக'** என்னும் வினையடை விகுதி வந்துள்ளது.

| பெயர் +ஆக - கூட்டு வினையடை |
|---|
| உயரம் +ஆக - உயரமாக |
| எளிமை + ஆக - எளிமையாக |
| அருமை+ ஆக - அருமையாக |

| பெயர் + ஆய் - கூட்டு வினையடை |
|---|
| உயரம் + ஆய் - உயரமாய் |
| எளிமை + ஆய் - எளிமையாய் |
| அருமை + ஆய் - அருமையாய் |

| பெயர் | ஆக்கப் பெயரடைகள் | ஆக்கவினையடைகள். |
|---|---|---|
| அழகு | அழகான | அழகாக |
| உயரம் | உயரமான | உயரமாக |
| வேகம் | வேகமான | வேகமாக |
| அருமை | அருமையான | அருமையாக |
| நீளம் | நீளமான | நீளமாக |
| பள்ளம் | பள்ளமான | பள்ளமாக |
| இனிமை | இனிமையான | இனிமையாக. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. இடைச்சொற்கள்

தனித்து நின்று பொருள் தராது பெயரையும் வினையையும் சார்ந்து நின்று இலக்கணப் பொருள் தரும் சொல்லே 'இடைச்சொல்' எனப்படும்.

◆புத்தகம், மேசை, பறவை, சிங்கம் - இவை பெயர்ச்சொற்கள். இவை தனித்து நின்று பொருளைத் தருகின்றன.

◆சிரி, ஓடு, தா, அழு -இவை வினைச் சொற்கள் இவை தனித்து நின்று பொருளைத் தருகின்றன.

◆ ஆனால்,

புத்தகங்கள் - **கள்** [பன்மை விகுதி]
புத்தகங்களை - **ஐ** [வேற்றுமை உருபு]
உண்டான் - ட் [இடைநிலை], – **ஆன்** [ பால் விகுதி]
✱ சென்றால் - **ஆல்** [நிபந்தனை விகுதி]

ஆகிய சொற்களில் வந்துள்ள பன்மை விகுதி, வேற்றுமை உருபு, இடைநிலை, பால்காட்டும் விகுதி, நிபந்தனை விகுதி என்பவை தனித்து நின்று பொருள் தரவில்லை. பெயர், வினை என்பவற்றுடன் சேர்ந்து நின்றே பொருள் தருகின்றன. இவையே 'இடைச் சொற்கள்' எனப்படுகின்றன.

## இடைச் சொற்களின் வகைகள்.

**1.வேற்றுமை உருபுகள்** - ஐ, ஆல், கு, இன், அது, கண் ............
**2.விகுதிகள்** - கள், அன், ஆன், அள், ஆள், அது, அ.
**3.இடைநிலைகள்** - த், ட், இன், கின்று கிறு, ப், வ் .......
**4.சாரியைகள்** - அம், அத்து .....
**5.உவமை உருபுகள்** - போல. அன்ன... புரைய, அன்ன, நேர
★**6.இணைப்பிடைச் சொற்கள்** - உம், ஆனால், ஆயினும், ஆகவே, எனினும்.
**7.தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள்** - ஏ, ஓ, உம், தான், மட்டும், கூட, என, ஆவது....

இரண்டு or மேற்பட்ட வாக்கியங்களை இணைப்பது



Eg:- தம்பியும் அண்ணாவும் கொழும்புக்கு போனார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தத்தம் பொருளை உணர்த்தும் இடைச் சொற்கள்

### "ஏகார இடைச் சொல்"

**தேற்றம்:** அறமே வெல்லும். இங்கு அறம் வெல்லும் என்பதற்கு ஐயமில்லை என்னும் தெளிவுப்பொருளைத் தருவதனால் தேற்றம் ஆகும்.

**வினா:** நீயே எடுத்தாய்
இங்கு நீயா எடுத்தாய் என்னும் வினாப் பொருளை தரும் போது வினா.

**எண்:** மாவே பலாவே, வாழையே
இங்கு மாவும், பலாவும், வாழையும் என்று பொருள்பட எண்ணி நிற்பதனால் எண்.

**எதிர் மறை:** நானே கதைத்தேன்.
இங்கு நான் கதைக்கவில்லை என்னும் பொருளைத் தரும் போது எதிர்மறை.

**இசைநிறை :** 'ஏயே யிவளொருத்தி பேடியே
இங்கு வேறு பொருளின்றிச் செய்யுள் இசை நிறைந்து நிற்றலால் இசை நிறை.

**ஈற்றசை:** 'என்று மேத்தி தொழுவோ மியாமே'
இங்கு வேறு பொருளின்றி இறுதியில் சார்த்தப்பட்டு நிற்றால் ஈற்றசை.

* தற்கால வழக்கில் ஏகார இடைச்சொல் **தேற்றப்பொருளிலேயே** அதிகம் வருகின்றது.
* ஒன்றினது **சுயமான இயக்கத்தினை** வெளிப்படுத்தவும் ஏகார இடைச்சொல் பயன்படுத்தப்படுகின்றது.

அவள் வரவே மாட்டாள்.
நான் என் காதாலேயே கேட்டேன். } தேற்றப்பொருள்
அவன் சென்ற கிழமையே பாடமாக்கிவிட்டான்.

காற்றாடி தானாகவே சுற்றுகிறது.
பெட்டி தானாகவே மூடப்பட்டது. } சுயமான இயக்கம்
குழந்தை தானாகவே விழுந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. ஓகார இடைச்சொல்

01 **ஒழியிசை:** படிக்கவோ வந்தாய்

இங்கு படிப்பதற்கன்று, விளையாடுவதற்கு வந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருவதனால் ஒழியிசை.

02 **வினா:** புலியோ? சிங்கமோ?

03 **உயர்வுச் சிறப்பு** : ஓ? ஓ? பெரியவன்.

இங்கு ஒருவனது பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குவதனால் உயர்வுச் சிறப்பு

04 **இழிவுச் சிறப்பு** : ஓ! ஓ! கொடியவன்.

இங்கு ஒருவனது கொடுமையாகிய இழிவின் மிகுதியை விளக்குவதனால் இழிவுச் சிறப்பு.

05 **எதிர்மறை** : அவனோ கதைத்தான்.

06 **தெரிநிலை** : களிறோ அதுவுமன்று, பிடியோ அதுவுமன்று.

இங்கு அத்தன்மையில்லாமையைத் தெரிவித்து நிற்பதனால் தெரிநிலை.

**கழிவு** : உறுதி யுணரா கெட்டாரை ஓ ஓ தமக்கோ ருறுதி யுணராரோ என்னுமிடத்துக் கழிவிரக்கப் பொருளைத் தருவதனால் கழிவு.

07. **பிரிநிலை** : அவர்களுள் இவனோ அழகன்.

**அசைநிலை** : "காணிய வம்மினோ"

- ※ தற்கால வழக்கில் ஓகார இடைச்சொல் **பிரிநிலைப் பொருளிலேயே** அதிகம் வருகிறது.
- ※ அத்துடன், ஓகார இடைச்சொல் **ஐயம், மிகை** முதலிய பொருள்களில் வரும்.

08 **ஐயம்** : நாளைக்குப் புயல் வருமோ

பேராசிரியர் நாளைக்கு லண்டனுக்குப் போவாரோ

※ வினா வாக்கியத்தின் இறுதியிலே ஓகார இடைச் சொல் வரும் போது

ஐய வாக்கியமாக மாற்றமடைகின்றது.

பிரதமர் எப்போது வருவார்? ( வினா)

பிரதமர் எப்போது வருவாரோ ( ஐயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இது அல்லது அது** : கவிதையோ கட்டுரையோ எழுதுங்கள்

**மிகை** : சுனாமியால் எத்தனையோ பொருட்கள் அழிக்கப்பட்டுவிட்டன.

*"உம் இடைச்சொல்"*

**எதிர்மறை** : களவெடுத்தாலும் பொய் சொல்லாதே.

இங்கு களவெடுக்காதே என்னும் பொருளைத் தருவதனால் எதிர்மறை.

**உயர்வுச்சிறப்பு** : அறிஞரும் போற்றும் கவிதை

**இழிவுச்சிறப்பு** : நாயும் தின்னாச் சோறு.

**ஐயம்** : புயல் வந்தாலும் வரும்.

**எச்சம்** : தலைவரும் வந்தார்.

(தலைவரும் வந்தார் என்பது ஏனையவர்கள் வந்துவிட்டார்கள் என்ற கருத்தில் வந்துள்ளது.)

**முற்று** : எல்லாரும் வந்தனர்

இங்கு எஞ்சாப் பொருளைத் தருவதனால் முற்று

**எண்** : மாவும், பலாவும் வாழையும்

**தெரிநிலை** : களிறுமன்று. பிடியுமன்று

**ஆக்கம்** : பாலுமாயிற்று

இங்கு அதுவே மருந்துமாயிற்று என்னும் பொருளைத் தருவதனால் ஆக்கம்.

**இணைப்பிடைச் சொல்** : தம்பியும் அண்ணாவும் கொழும்புக்குச் சென்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில இடைச் சொற்களும் அவற்றின் பொருளும்.

1. மோகன் தான் வந்தான் - என்பதில் தான் என்பது என்ன பொருளில் வந்துள்ளது?
*அழுத்தற்பொருள்.* உறுதிப்பொருள்

2. சானியாதான் விளையாடினாள். -
சானியா தானும் விளையாடுவதாகக் கூறினாள். - என்பதில் "தான்" எவ்வகைச் சொற்களாகக் கையாளப்பட்டுள்ளது?
*சானியாதான் விளையாடினாள். - இடைச் சொல்.*
*சானியா தானும் விளையாடுவதாகக் கூறினாள் - மாற்றுப்பெயர்*
ஒரு பெயருக்கு பதிலாக வருவது

3. நீங்களாவது எனக்காகக் கதையுங்கள் - என்பதில் "ஆவது" என்ன பொருளில் வந்துள்ளது?
*குறைந்த பட்சம்.*

4. கவிதையாவது கட்டுரையாவது எழுதுங்கள் - என்பதில் "ஆவது" என்ன பொருளில் வந்தள்ளது?
*இது அல்லது அது*

5. நான் எப்படியாவது வருவேன். - என்பதில் "ஆவது" என்ன பொருளில் வந்துள்ளது? *திடக் குறிப்பின்மை*

6. நீயாவது பல்கலைக்கழகம் செல்வதாவது- என்பதில் "ஆவது" என்ன பொருளில் வந்துள்ளத? *நடவாமை.*

7. எட்டாவது பெட்டியில் உள்ளது - என்பதில் "ஆவது" என்ன பொருளில் வந்துள்ளது? *வரிசைப் பொருள்*

8. இந்தக் கோயிலில் காலையில் மட்டும் பூசை நடைபெறுகின்றது - என்பதில் "மட்டும்" என்ன பொருளில் வந்துள்ளது?
*வரையறைப்பொருள்.*

9. என்னிடம் போக்குவரத்துக்குக்கூட பணமில்லை - "கூட" என்ன பொருளில் வந்துள்ளது? *குறைந்தபட்சம்.*

10. இந்த ஊரில் காகங்கூடப் பறக்காது - "கூட" என்ன பொருளில் வந்துள்ளது? *முற்றுப் பொருள்.*

11. உனக்கு சமைக்கக் கூடத் தெரியுமா? - "கூட" என்ன பொருளில் வந்துள்ளது? *எச்சம் தழுவிய எதிர் மறை*

12. கண்ணனா பாடினான்? "ஆ" என்ன பொருளில் வந்துள்ளது?
*வினாப் பொருள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. வாக்கியம்

சொற்கள் தொடர்ந்து நின்று கருத்தை தந்து முற்றுப் பெறுவதனை வாக்கியம் என்பர். வாக்கியங்களை தனிவாக்கியம், தொடர்வாக்கியம் என இரண்டு வகைப்படுத்தலாம்.

வாக்கியம்
↓ தனிவாக்கியம்
↓ தொடர்வாக்கியம்
↓ கூட்டுவாக்கியம்
↓ கலப்பு வாக்கியம்

## 8 .I. தனி வாக்கியம்

தனிவாக்கியத் தொடரால் அமைந்த வாக்கியத்தையே தனிவாக்கியம் என்பர். இது ஒரு எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டிருக்கும்.

கண்ணண் பாடசாலைக்குச் சென்றான் - தனிவாக்கியம்
(கண்ணண் ↓ எழுவாய்; சென்றான் ↓ பயனிலை)

## 8 .II. தொடர்வாக்கியம்

பல வாக்கியங்கள் அல்லது வாக்கியத் தொடர்கள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்டு உருவாக்கப்படும் வாக்கியத்தையே "தொடர் வாக்கியம்" என்பர். தொடர் வாக்கியங்களை கூட்டு வாக்கியம், கலப்பு வாக்கியம் என இரண்டு வகைப்படுத்தலாம்.

## 8.II.i. கூட்டு வாக்கியம்

சமநிலைத் தொடர்களால் இணைக்கப்படும் வாக்கியமே "கூட்டு வாக்கியம்" ஆகும். கூட்டுவாக்கியத்தில் சமநிலைத் தொடர்களே காணப்படும். ஒரு தொடரில் மற்றொரு தொடர் சார்ந்து இருக்காது. தனித்தனி நிகழ்வுகளையும் கூறும் சமதொடர்களே "சமநிலைத் தொடகள்" ஆகும்.

**உ - ம் :** தம்பியும் தங்கையும் பாடசாலைக்குச் சென்றார்கள்

**விளக்கம்:**

இது கூட்டு வாக்கியமாகும். இவ்வாக்கியத்தில் தம்பி பாடசாலைக்குச் சென்றான். தங்கை பாடசாலைக்குச் சென்றாள். என்கின்ற தொடர்களில் ஒன்றில் ஒன்று சார்ந்திருக்காத தனித்தனி நிகழ்வுகளைக்கூறும் சமநிலைத் தொடர்கள் இணைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுவாக்கியத்தின் அமைப்பு

கூட்டு வாக்கியங்களை சமநிலைத் தொடர்களை இணைத்து ஆக்கும் போது உம், அல்லது, ஆ, ஆனால், ஆகவே முதலிய இணைப் பிடைச்சொற்களும், வினையெச்சங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

நிமலன் பாடினான். கமால் பாடினான்.
**உ-ம்** : நிமாலும் கமாலும் பாடினார்கள்.

நான் உன் வீட்டுக்கு இன்று வருவேன். நான் உன் வீட்டுக்கு நாளை வருவேன்
**அல்லது** : நான் உன் வீட்டிற்கு இன்று அல்லது நாளை வருவேன்.

பானு உன் வீட்டுக்கு வாருவாளா? பானு உன் வீட்டுக்கு வரமாட்டாளா?
**ஆ** : பானு உன் வீட்டுக்கு வருவாளா? வரமாட்டாளா?

அது சிறிய வீடு. அது அழகான வீடு.

**ஆனால்** : அது சிறிய ஆனால் அழகான வீடு.

இன்று காற்று பலமாக வீசுகிறது. மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள்.

**ஆகவே** : அன்று காற்று பலமாக வீசுகின்றது ஆகவே மீனவர்கள் கடலுக்குச் செல்லமாட்டார்கள்.

வேலைக்காரி கடைக்குச் சென்றாள். வேலைக்காரி அரிசி வாங்கினாள்.
**"செய்து"- எச்சம்** : வேலைக்காரி கடைக்குச் சென்று **அரிசி** வாங்கினாள்

குயில் பாடியது மயில் ஆடியது
**"செய்ய"- எச்சம்** : குயில் பாட மயில் ஆடியது.

## 8.II.ii. கலப்பு வாக்கியம்.

ஒரு தலைமைத்தொடரோடு ஒரு சார்பு நிலைத் தொடரோஅல்லது பல சார்புத் தொடர்களோ இணைந்து வரும் வாக்கியம் கலப்பு வாக்கியம் ஆகும்.

***"மாணவர்கள் ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டும்"*** என்று அதிபர் கூறினார்.

↓ சார்புநிலைத் தொடர் (மாணவர்கள் ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டும்)
↓ நிரப்பித் தொடர் (என்று)
↓ தலைமைத் தொடர் (அதிபர் கூறினார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம் :**

அதிபர் கூறினார் - தலைமைத்தொடர், மாணவர் ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கவேண்டும் - சார்பு நிலைத் தொடர் தலைமைத் தொடர்களையும் சார்பு நிலைத் தொடர்களையும் இணைப்பதற்கு "என்று" கையாளப்படுகின்றது, ஆதலால் என்று நிரப்பித் தொடர் எனப்படுகின்றது.

## கலப்பு வாக்கியத்தின் அமைப்பு

எச்சவாக்கியத் தொடர்களாலும் நிரப்பித் தொடர்களாலும் கலப்பு வாக்கியங்கள் ஆகக்கப்படுகின்றன.

### < எச்ச வாக்கியத் தொடர்களால் அமையும் கலப்பு வாக்கியம்

***செய்ய எச்சத் தொடர்*** - ஆசிரியர் வகுப்பறைக்கு வர மாணவர்கள் கதைப்பதை நிறுத்தினர்.

**எச்சத் தொடர்** - ஆசிரியர் வகுப்பறைக்கு வர

**தலைமைத் தொடர்** - மாணவர்கள் கதைப்பதை நிறுத்தினர்.

***செய்து எச்சத் தொடர்*** - மணி அயராது உழைத்துப் பணக்காரன் ஆனான்.

**எச்சத் தொடர்** - மணி அயராது உழைத்து

**தலைமைத்தொடர்** - மணி பணக்காரன் ஆனான்.

*செய்தால் எச்சத் தொடர்/ நிபந்தனை எச்சத் தொடர்*

நீ கவனமாகனப் படித்தால் பரீட்சையில் சித்தி பெறுவாய்.

**எச்சத் தொடர்** - நீ கவனமாகப் படித்தால்

**தலைமைத்தொடர்** - நீ பரீட்சையில் சித்தி பெறுவாய்.

***பெயரெச்சத் தொடர்*** - நான் பயணம் செய்த புகைவண்டி தடம் புரண்டது.

**எச்சத் தொடர்** - நான் பயணம் செய்த புகைவண்டி

**தலைமைத் தொடர்** - புகைவண்டி தடம் புரண்டது.

### < நிரப்பித் தொடர் தொடர்களால் அமையும் கலப்பு வாக்கியங்கள்

சில துணைநிலை வாக்கியத் தொடர்கள் என்று, என்பது, என்ற, முதலான நிரப்பித் தொடர்களால் தலைமைத் தொடர்களோடு இணைக்கப்படுகின்றன. இவ்வாறு துணைநிலை வாக்கியத்தொடரை இணைக்கப் பயன்படும் என்று, என்பது. என்ற முதலான இடைச்சொற்களையே **நிரப்பித் தொடர்கள்** என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரப்புத் தொடர்களின் வகைகள்.

**என்று** - 'முயல் அந்தப்பக்கம் ஓடுகின்றது' **என்று** கௌரியம்மாள் கூறினாள்.

தலைமைத் தொடர் - கௌரியம்மாள் கூறினாள்.
துணைநிலைவாக்கியத் தொடர் - முயல் அந்தப்பக்கமாக ஓடுகிறது.
நிரப்பித் தொடர் - என்று

**என்பது** - நீ வீட்டுப்பாடம் செய்து வரவில்லை என்பது எனக்குத் தெரியும்

தலைமை. தொடர் - எனக்குத் தெரியும்
துணைநிலை வாக்கியத் தொடர் - நீ வீட்டுப் பாடம் செய்து வரவில்லை
நிரப்பிடைச் சொல் - என்பது

**என்ற** - சுனாமி வரும் என்ற அச்சம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.

தலைமைத் தொடர் - அச்சம் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை.
துணை நிலை வாக்கியத் தொடர் - சுனாமி வரும்
நிரப்பிடைச் சொல் - என்ற

**தொழிற்பெயர் வகைத் தொடர்** - விமானம் போய்க் கொண்டிருந்ததை நாங்கள் பார்த்தோம்.

தலைமைத் தொடர் - நாங்கள் பார்த்தோம்.
துணைநிலைவாக்கியத் தொடர் - விமானம் போய்க் கொண்டிருந்ததை
இதில் துணை நிலை வாக்கியத்தின் வினை முற்று தொழிற்பெயராக்கப்பட்டு தலைமை வாக்கியத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.

**ஆக** - இன்று கப்பல் புறப்படுவதாக நான் கேள்விப்பட்டேன்.

தலைமைத் தொடர் - நான் கேள்விப்பட்டேன்.
துணைநிலைவாக்கியத் தொடர் - இன்று கப்பல் புறப்படுவது.
நிரப்பித் தொடர் - ஆக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. மாதிரி வினாக்கள்

1] இதழ் குவிந்து பிறக்கும் உயிர் எழுத்துக்கள் யாவை?

.......................................................................................................

2] இதழ் குவியாது பிறக்கும் உயிர் எழுத்துக்கள் யாவை?

.......................................................................................................

3] பின்வரும் சொற்களில் **"இகரம்"** இரு வேறு விதமாக உச்சரிக்கப்படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச் சொற்களை வகைப்படுத்துக.

இறை, இல்லை, இவை, இறப்பு, இணைகரம், இசை.

.......................................................................................................

4] பின்வரும் சொற்களில் **"ஈ"** இரு வேறு விதமாக உச்சரிக்கப் படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச் சொற்களை வகைப்படுத்துக.

வீடு, வீதம், ஈரல், ஈட்டி, கீரி, பீடு.

.......................................................................................................

5] பின்வரும் சொற்களில் **"எகரம்"** இரு வேறு விதமாக உச்சரிக்கப்படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச் சொற்களை வகைப்படுத்துக.

பெருமை, வெல்லம், வெள்ளம், வெண்டி, நெடுமரம், நெல்லி.

.......................................................................................................

6] **க், ங், ப், ழ், ண், ட்** - இவற்றுள் வெடிப்பொலிகள்/ தடையொலிகள் எவை?

.......................................................................................................

7] **ய், ச், ண், ம், ழ் ன்** - இவற்றுள் மூக்கொலிகள் எவை?

.......................................................................................................

8] **ஜப்பான், புஷ்பம், ஸ்ரீபுராணம்** - இவற்றுள் இடம் பெற்றுள்ள கிரந்த எழுத்துக்களைக் குறிப்பிடுக.

.......................................................................................................

9] **ச், ய், த், ஞ், வ், ம்** - இவற்றுள் வந்துள்ள அரையுயிர்கள் யாவை?

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10] மெய் எழுத்தின் மாத்திரை யாது?

.............................................................................................................

11] எழுத்துக்குரிய இரு வடிவங்களும் எவை?

.............................................................................................................

12] தமிழ் எழுத்துக்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

.............................................................................................................

13] முதல் எழுத்துக்கள் எவை? அவற்றின் எண்ணிக்கை யாது?

.............................................................................................................

14] உயிர் எழுத்துகளிலே குறில் எழுத்துக்கள்/ குற்றெழுத்துக்கள் எவை?

.............................................................................................................

15] குறில் எழுத்தின் மாத்திரை யாது?

.............................................................................................................

16] உயிர் எழுத்துக்களிலே நெடில் எழுத்துக்கள்/ நெட்டெழுத்துக்கள் எவை?

.............................................................................................................

17] நெடில் எழுத்தின் மாத்திரை யாது?

.............................................................................................................

18] மெய்யெழுத்துக்களின் வகையினைக் குறிப்பிடுக.

.............................................................................................................

19] பின்வருவனவற்றில் இதழ் குவிந்த நிலையில் பிறக்கும் எழுத்துக்கள் எவை?

**ஐ, ஔ, உ, ஈ, ஓ, ஆ, அ**

.............................................................................................................

20] பின்வருவனவற்றுள் இதழ் குவியா நிலையில் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?

**எ, ஊ, ஒ, இ, ஈ, ஐ**

.............................................................................................................

21] பின்வரும் சொற்களில் **"ஏ"** இருவேறு விதமாக உச்சரிக்கப் படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச்சொற்களை வகைப்படுத்துக.

**கேணி, சேய், ஏன், ஏழ்மை, ஏடு, ஏது**

.............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22] பின்வரும் சொற்களில் **"ஈ"** இருவேறு விதமாக உச்சரிக்கப் படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச்சொற்களை வகைப்படுத்துக.

**கீறு, வீதம், கிரீடம், சீட்டு, ஈரல் , கீழ்**

..........................................................................................................

23] பின்வரும் சொற்களில் ***"சகரம்"*** இருவேறு விதமாக உச்சரிக்கப் படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச்சொற்களை வகைப்படுத்துக

**பாசம், மஞ்சள், தேசம், பஞ்சம், வஞ்சகம், காசி**

..........................................................................................................

24] பின்வரும் சொற்களில் ***"பகரம்"*** இருவேறு விதமாக உச்சரிக்கப் படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கு ஏற்ப அச்சொற்களை வகைப்படுத்துக

**சுலபம், பட்டு, பந்து, கபடம், பருதி, அபயம்**

..........................................................................................................

25] **ஆடு, உலகம், வாடு, கயிறு, புயல்** - இவற்றுள் உகரம் இதழ் குவிந்து உச்சரிக்கப்படும் சொற்களை இனங்கண்டு எழுதுக.

..........................................................................................................

26] அஃறிணை, கைது - இங்கு வந்துள்ள சார்பெழுத்துக்களை எழுதி, அவற்றின் வகையினைக் குறிப்பிடுக.

..........................................................................................................

27] **பசு, உண்மை, பாட்டு, காற்று, குரல்** - இவற்றுள் உகரம் இதழ் குவியாது உச்சரிக்கும் சொற்களைக் குறிப்பிடுக.

..........................................................................................................

28] பின்வரும் எழுத்துக்களுள் தற்காலத் தமிழில் சொல் இறுதியில் இடம் பெறாத உயிர் எழுத்துக்களைக் குறிப்பிடுக.

**ச், ய், ப், ஞ், ந், ம், வ், ண், க்**

..........................................................................................................

29] கீழ்வருவனவற்றுள் மாத்திரையிலிருந்து குறைந்து ஒலிக்கும் எழுத்துக்களைக் கொண்ட சொற்களை இனங்கண்டு எழுதுக.

**பஞ்சியாது, பாக்கு, சாந்தம், மனிதன், போது, அம்மா**

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30] பின்வருவனவற்றுள் தற்காலத் தமிழில் சொல் இறுதியில் இடம் பெறாத உயிர் எழுத்துக்களைக் குறிப்பிடுக.

**உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ. ஔ**

.......................................................................................................

31] **செந்நெறி, விண்கலம், பெண்மை, அன்னை, வட்டம்** - இவற்றுள் உடன்நிலை மெய்மயக்கமாக அமையும் சொற்களைக் குறிப்பிடுக.

.......................................................................................................

32] எனினும், அவள் முகத்தில் ஒரு மலர்ச்சியும், பேச்சில் ஒரு குதூகலமும் தான் தென்படுகிறது - இவ்வாக்கியத்தில் உள்ள ஆக்கப் பெயர்களை எடுத்துக் காட்டுக.

.......................................................................................................

33] கீழ்வருவனவற்றுள் பகுபதங்களை இனங்கண்டு, அவற்றைப் பகுத்து எழுதுக.

**போனார், நீலம், மணம், போனேன், அரசன், விலங்கு.**

.......................................................................................................

34] **கைவிடுவேன், குருவிக்கூடுகள்** - இவற்றைப் பகுத்து எழுதுக.

.......................................................................................................

35] கமலா அவளுடைய வீட்டுக்குச் சென்றாள். அங்கே தங்கை தனது வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். - இவ்வாக்கியங்களில் வந்துள்ள மாற்றுப் பெயர்களையும், அம்மாற்றுப் பெயர்களுக்குரிய பெயர்களையும் வேறுபடுத்துக.

.......................................................................................................

36] இது ***நம்முடைய*** ஆலயம். இது ***எங்களுடைய*** ஆலயம் - இவ்விரு வாக்கியங்களுக்கிடையிலான வேறுபாடு யாது?

.......................................................................................................

37] அந்த மரியாதைக்குக் களங்கம் ஏற்படாத முறையில் பரமன் வேறு விஷயம் எதுவும் பேசாது சென்றதே நல்லது என அவனுக்குப்பட்டது. - இவ்வாக்கியத்தில் வந்துள்ள எதிர்மறைப் பெயரெச்சத்தையும் எதிர்மறை வினையெச்சத்தையும் எடுத்துக்காட்டுக.

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38] கீழ்வரும் வாக்கியங்களில் ஆக்கப் பெயர்களை இனங்கண்டு எழுதுக.
***நோயாளி உடம்பை மூடிக்கொள்கிறான்.***
***முதலாளித்துவ நாடுகளில் பொருளியல் பற்றிச் சிறப்பாகப் பேசப்படும்.***

.....................................................................................................

39] **உலகு, உயரம், தடை, தட்டு** - இவற்றுள் பகுபதங்களை இனங்கண்டு பகுத்து எழுதுக.

.....................................................................................................

40] பல்கலைக்கழக மாணவர்கள் கடற்கரைக்குச் சென்றார்கள் - இங்கு வந்துள்ள கூட்டுப் பெயர்களை எழுதுக.

.....................................................................................................

41] **பழங்காய், கண்மணி, கருங்கூந்தல், சாய்கோபுரம்,** - இவை எவ்வகைத் தொகைகள்?

.....................................................................................................

42] **தா, வாழ்** - ஆகிய வினைச் சொற்களை ஒவ்வொன்றின் அடியாகவும் பிறக்கும் மூன்று பெயர்ச்சொற்களை தருக.

.....................................................................................................

43] **I** அது வேகமாக வந்தது.
**II** வேகமாக வந்தது கடித்தது. இவ்விரு வாக்கியங்களிலும் வந்துள்ள **"வந்தது"** என்னும் பதத்தின் வேறுபாடு யாது?

.....................................................................................................

44] **பொரி, வா** - இவ்வினையடிகளை வைத்து ஆக்கப்பெயர்களை எழுதுக.

.....................................................................................................

45] பின்வரும் வாக்கியங்களில் **"ஆல்"** உருபு எவ்வெப்பொருளில் வந்துள்ளது என்பதைக் குறிப்பிடுக.
***அ) குமார் கத்தியால் மரத்தை வெட்டினான்.***
***ஆ) மரத்தால் செய்த பெட்டி.***
***இ) கமலா உழைப்பால் உயர்ந்தவள்.***

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46] பின்வரும் வாக்கியங்களில் **"ஓடு"** உருபு எவ்வெவ்பொருளில் வந்துள்ளது என்பதைக் குறிப்பிடுக.

***அ) பயறோடு உழுந்து கலந்திருக்கிறது.***

***ஆ) நண்பன் பிச்சைக்காரனை இரக்கத்தோடு பார்க்கிறான்.***

***இ) நான் வீட்டை விட்டு வந்து இன்றோடு இரண்டு மாதங்கள் ஆகின்றன.***

..............................................................................................

47] பின்வரும் வாக்கியங்களில் "கு" உருபு எவ்வெப்பொருளில் வந்துள்ளது. என்பதைக் குறிப்பிடுக.

***அ) கிருஷ்ணாவுக்கு பண்டா நண்பன்.***

***ஆ) பாம்பு கதிரைக்குக் கீழே சுருண்டு படுத்திருக்கிறது.***

***இ) அவன் கூலிக்கு வேலைசெய்கிறான்.***

***ஈ) என் பட்டத்திற்கு ஏற்ற வேலை கிடைக்கவில்லை.***

..............................................................................................

..............................................................................................

48] **ஆசைப்பட்டான், முன்னேறினான், போனான், தந்தியடித்தான், தோல்வியடைந்தான், வருகிறான்** - இவ்வினைகளை வகைப்படுத்துக.

..............................................................................................

49] **எஞ்சியது, நிற்பான், உண்பேன், போனது** – பகுத்து எழுதுக.

..............................................................................................

50] கீழ்வரும் வாக்கியங்களில் வந்துள்ள வினைகளின் பயன்பாடுபற்றிக் குறிப்பிடுக.

***கல்வியமைச்சர் நாளைக்கு யாழ்ப்பாணத்திற்கு வருகிறார்.***

***நான் தினமும் அதிகாலையில் குளிப்பேன்.***

..............................................................................................

51] ***"எழுது"*** – என்னும் வினையை அடிப்படையாகக் கொண்டு, மூன்று தொடர்கால வினைமுற்றுக்களை எழுதுக.

..............................................................................................

52] போகும் புகைவண்டி அழகாயிருந்தது.

அழகான புகை வண்டி நாளை போகும் - இவ்விரு வாக்கியங்களிலும் வந்துள்ள "போகும்" எவ்வாறு கையாளப்பட்டுள்ளது?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53] பரதன் கூற இராமன் கேட்டான் - இவ்வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக்குக.

..........................................................................................

54] நீ இனிய பாடலைப் பாடினால் நான் நன்றாக ஆடுவேன் - இவ்வாக்கியத்தில் வந்துள்ள எச்சத்தை எழுதி, அவ்வெச்சம் எவ்வகை என்பதையும் குறிப்பிடுக.

..........................................................................................

55] **வரவு, அப்பு, கொடு, சாவு, ஏடு** இவற்றுள் குற்றியலுகரம் அல்லாதனவற்றைக் குறிப்பிடுக.

..........................................................................................

56] பாந்தள், நிலன், பந்தர், ஈரல் - இவற்றுள் போலி எழுத்து இடம் பெறும் சொற்களைக் குறிப்பிடுக.

..........................................................................................

57] பாண்டவர் - இச் சொல்லிலுள்ள எழுத்துக்களின் மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.

..........................................................................................

58] **இலங்ங்கு** - இதிலுள்ள சார்பெழுத்துக்களை அவற்றின் வகை சுட்டி எழுதுக.

..........................................................................................

59] **தந்தனன், உற்றான், கஃறீது** - இவற்றினைச் சந்தி பிரித்து எழுதுக.

..........................................................................................

60] **முள் + தீது** - இதனை இரு வேறு விதமாக புணர்த்தி எழுதுக.

..........................................................................................

61] நகுலன் சிரித்தான்
நகுலன் கடித்தான் - இவ்வாக்கியங்களில் வரும் ***"சிரித்தான்"***, ***"கடித்தான்"*** ஆகியவை எவ்வகை வினைகள்?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62] நான் வயலை உழுதேன்.
இசை நிகழ்ச்சியில் பாடகர்கள் பல பாடல்களை இனிமையாகப் பாடினார்கள்.
இவ்விரு வாக்கியங்களையும் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

.................................................................................................

63] **புளி, கடி, விடு, நனி, நனை** - இவற்றுள் ஏவல் வினையடிகள் யாவை?

.................................................................................................

64] கடிமாலை, கடியரண் - இங்கு ***"கடி"*** என்னும் உரிச்சொல் எவ்வெப்பொருளில் வந்துள்ளது?

.................................................................................................

65] காண், தா - ஆசிய வினைச்சொற்கள் ஒவ்வொன்றின் அடியாகப் பிறக்கும் இவ்விரு பெயர்ச்சொற்கள் தருக.

.................................................................................................

66] பின்வரும் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பிரித்துக்காட்டுக.
வன விலங்குகளைப் பாதுகாக்கவும் இயற்கைச் சமநிலையைப் பேணவும் காடுகளைப் பாதுகாப்பது அவசியமானதாகும்.

.................................................................................................

67] **அவன் கரைந்தான். அவன் கரைத்தான்** - இவ்விரு தொடர்களிலும் இடம் பெறும் வினைகள் எவ்வகையைச் சார்ந்தவை?

.................................................................................................

68] **வை, இரு** – ஆகியவை முதல் வினையாகவும், துணை வினையாகவும் வரும் வகையில் வாக்கியங்கள் எழுதுக.

.................................................................................................

69] **செய்வித்தான், மருண்டான், விழுத்தினான், உருகினான், கரைத்தான், உருட்டுவித்தான்** - இவற்றுள் தன்வினைகள் யாவை?

.................................................................................................

70] **செம்மை, அல்லி, விரல், வட்டம், வெஞ்சினம்** - இவற்றுள் பண்புப் பெயர்கள் யாவை?

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71] **என்னுயிர், மழைக்கரம், இன்னமுது, வருபுனல்** - இவை எவ்வகைத் தொகைகள் என்பதனைக் குறிப்பிடுக.

..............................................................................................

72] அவர்களுள் இவனே கொலைஞன். உண்டே பிறப்பு - இங்கே ***"ஏ"*** காரம் எவ்வெப்பொருள்களில் வந்துள்ளது?

..............................................................................................

73] எல்லோரும் சென்றனர். பாலும் ஆயிற்று - இங்கு ***"உம்"*** இடைச்சொல் எவ்வெப்பொருள்களில் வந்துள்ளது?

..............................................................................................

74] கற்றதனாலாய பயனென்கொல் - இங்கே ***"கொல்"*** என்ன பொருளில் வந்துள்ளது?

..............................................................................................

75] பாலன் மரத்தில் ஏறினான்.
மரத்தில் ஏறியவன் விழுந்தான்.
இங்கு ஏறினான், ஏறியவன் ஆகியவற்றுக்கிடையிலான இலக்கண வேறுபாடு யாது?

..............................................................................................

76] **நட, பாடு, சிரி, இரு, எழுது, சொல்** - இவற்றுள் செயப்படுபொருள் குன்றாவினையடிகள் யாவை?

..............................................................................................

77] புதிய முதியோர் பராமரிப்பு இல்லத் தலைவர் கருத்தை முன்வைத்தார். இவ்வாக்கியத்தில் வந்துள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக்காட்டுக.

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78] ஒரு நிரப்பித் தொடரைப் பயன்படுத்திப் பின்வரும் தனி வாக்கியங்களை ஒரு கலப்பு வாக்கியமாக அமைத்துக் காட்டுக.

(i) சத்தியமே வெல்லும்

(ii) சிந்தனைவாதி ஒருவர் மேடையில் கூறினார்.

..........................................................................................................

79] அவன் நன்றாக நித்திரை செய்கிறான் - இது என்ன வாக்கியம்?

..........................................................................................................

80] பின்வரும் வாக்கியத்திலுள்ள இலக்கண வழுக்களை சுட்டிக்காட்டித் திருத்துக?

இந்த வைத்தியசாலையிலுள்ள ஒவ்வொரு நோயாளிகளும் தங்கள் நலனில் அக்கறை காட்ட வேண்டும்.

..........................................................................................................

81] **பாட்டியாத்தனர், இன்மை** - இங்கு இகரங்களின் வகைகளைச் சுட்டி, அவற்றின் மாத்திரை அளவுகளை எழுதுக.

..........................................................................................................

82] **கற்றான், போயினன், விட்டான், சென்றான், தொட்டான்** - இவற்றுள் பகுதி இரட்டித்துக்காலம் காட்டியுள்ள பதங்கள் யாவை?

..........................................................................................................

83] **முக்குணம், விடுகணை, தசரதன்மைந்தன், கற்பகவள்ளல்** இவை எவ்வெத் தொகைகள் என்பதைக் குறிப்பிடுக.

..........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84] பின்வரும் வாக்கியங்களில் **"ஆல்"** என்னும் இடைச்சொல் எவ்வெப் பொருளில் வந்துள்ளது?

**I. கோபத்தால் முகம் சிவந்தது.**

**II. பிரம்பால் அடித்தார்.**

**III. நீ பாடினால் நான் ஆடுவேன்.**

..............................................................................................

85] மரத்தில் - இங்கு வந்துள்ள புணர்ச்சி அகப்புணர்ச்சியா? புறப்புணர்ச்சியா? எனக் கூறி, சந்தி பிரித்து எழுதுக.

..............................................................................................

86] கல் லாதவொருவ னெம்ம ருகினிற் கின்றான் - இவ்வாக்கியத்தில் உள்ள சொற்களைத் தற்கால வழக்குப்படி பிரித்து எழுதுக.

..............................................................................................

87] கோழி + குஞ்சு - இச் சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.

..............................................................................................

88] கொண்டான் - இச் சொல்லை முறையாகப் பகுத்து எழுதுக.

..............................................................................................

89] பயறில்லை கடலலை - இங்கு வந்துள்ள புணர்ச்சிகள் எவ்வகையானவை?

..............................................................................................

90] கீழ்வரும் புணர்ச்சிகள் எவ்வகையான விகாரங்கள் எனக் குறிப்பிடுக.

i. சொல்லில் :-..............................................................

ii. இந்தப்படம் :-..............................................................

iii. படகில் :-..............................................................

iv. பழங்கள் :-..............................................................

v. பாட்டில் :-..............................................................

vi. தந்தான் :-..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91] **இருமு, அன்பு, கருமை, அரவு, பாடு, பந்து, உதவி** - இவற்றுள் முற்றியலுகரங்கள் இடம் பெற்றுள்ள சொற்களை எழுதுக.

.............................................................................................................

92] உழுந்து - இங்கு வந்துள்ள உகரங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

.............................................................................................................

93] **உண்மை, படு, பாடு** - இங்கு வந்துள்ள உகரங்களின் மாத்திரையளவுகளைக் குறிப்பிடுக.

.............................................................................................................

94] கீழ்வரும் குற்றியலுகரங்கள் எத்தொடர் குற்றியலுகரங்கள் எனக்கூறுக.

i. அன்பு :-..........................................................................

ii. போடு :-..........................................................................

iii. அஞ்சு :-..........................................................................

iv. சால்பு :-..........................................................................

v. அம்பு :-..........................................................................

vi. கடிது :-..........................................................................

vii. எ்.கு :-..........................................................................

viii. இனிது :-..........................................................................

ix. விறகு :-..........................................................................

x. வித்து :-..........................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95] குருவி + கூடு - இச் சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.

.................................................................................................

96] முன்னிலை ஒருமைப் பெயர் நான்காம் வேற்றுமை உருபை ஏற்கும் போது பெறும் வடிவத்தை எழுதுக.

.................................................................................................

97] ***"நான்"*** என்னும் தன்மைப் பெயர் ***"ஆல்"*** உருபு பெறும்போது பெறும் வடிவம் யாது?

.................................................................................................

98] அப்பாவோடு நான் கோயிலுக்குச் சென்றபோது பூனையொன்று குறுக்கே பாய்ந்தது - இவ்வாக்கியத்தில் உடன்படுமெய் தோன்றிய இடங்களைச் சுட்டிக்காட்டுக.

.................................................................................................

99] அமெரிக்காவும் ஜேர்மனியும் ஒன்றிணைந்து கூறியும் வடகொரியா அடங்காது எதையும் செய்யத் துணிந்து விட்டது. - இதில் ***"உம்"*** முற்றுப்பொருளில் வந்துள்ள பகுதியை எழுதுக.

.................................................................................................

100] நான்தான் உன்னை இங்கு வரச் சொன்னேன். இங்கு "தான்" இடைச்சொல் என்ன பொருளில் வந்துள்ளது?

.................................................................................................

101] முன்னர் நான் அங்கு வரும்போதெல்லாம் நீ மலர்ச்சியாக இருப்பாய். - இவ்வாக்கியத்தில் வந்துள்ள வினையடைகளை எழுதுக.

.................................................................................................

102] பண்பான குடும்பத்தில் பிறந்த நீ பண்பாகப் பேசவேண்டும். இங்கு வந்துள்ள "பண்பான, பண்பாக" எவ்வகைச் சொற்கள் என எழுதுக.

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

103] அடிக்கடி கோப்பி குடித்தேன். இனிமையாக இருந்தது. இங்கு வந்துள்ள தனிவினையடையையும், கூட்டு வினையடையையும் எழுதுக.

.........................................................................................................

104] கரிய முகிற்கூட்டம் வானில் உண்டு. கருமையான யானைக் கூட்டம் காட்டில் உண்டு. இவ்வாக்கியங்களில் வந்துள்ள ஆக்கப்பெயரடை, தனிப்பெயரடை என்பவற்றை எழுதுக.

.........................................................................................................

105] **எ.்.கு, க.்.றீது, ப.்.றொடை** - இங்கு வந்துள்ள ஆய்தங்களின் மாத்திரையளவுகளை எழுதுக.

.........................................................................................................

106] கீழ்வருவன எவ்வகையான மெய்ம்மயக்கங்கள் எனக் கூறுக.

i. உயர்வு :-.................................... iv. எண்ணம் :-....................
ii. செல்வம் :-.................................... v. பத்திரிகை:-.................
iii. பச்சை :-.................................... vi. அம்பு :-...................

107] ***"உண்மை, சான்ம்"*** - இச் சொற்களில் உள்ள எழுத்துக்களின் மாத்திரையளவுகளை எழுதுக.

.........................................................................................................

108] உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் - இத்தொடரிலுள்ள முதலெழுத்துக்களை எழுதுக.

.........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

109] கீழ்வரும் பதங்களைப் புணர்த்தி எழுதுக.

i. முள் + தொல்லை :-..........................................................................

ii. வில் + நன்று :-..........................................................................

iii. நெய் + மணம் :-..........................................................................

iv. மெய் + மயக்கம் :-..........................................................................

v. புல் + தொகை :-..........................................................................

vi. வாள் + நலம் :-..........................................................................

110] **போனான், துஞ்சியது, இறங்கியது, ஓடின, தருவான்**- இப்பகுபதங்களில் வந்துள்ள காலங்காட்டும் இடை நிலைகளைக் குறிப்பிடுக.

..........................................................................................................

111] **பெற்றான், கற்றான்** - இவ்விரு பதங்களுக்கிடையிலுள்ள இலக்கண அடிப்படையிலான வேறுபாட்டினைக் கூறுக.

..........................................................................................................

112] **கீதம், ஈதல், வீடு, மீன், கீழ்** - இவற்றுள் ஈகாரம் இடை உயிர்களாக உச்சரிக்கும் சொற்கள் எவை?

..........................................................................................................

113] **இனிப்பு, இணைகரம், இளகு, இலவசம், இன்பம்** - இவற்றுள் "இகரம்" முன்னுயிர்களாக உச்சரிக்கும் சொற்கள் எவை?

..........................................................................................................

114] **க், ங், ய், ம், ர், ந்** - இவற்றுள் மூக்கொலிகள் எவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115] "ஆனால்" என்னும் இணைப்பிடைச்சொல்லைப் பயன்படுத்திக் கீழ்வரும் தனிவாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.
குமார் படித்த பையன்.
குமார் இரக்கமற்ற பையன்.

.............................................................................................

116] **கழி, களி** - சொற்களின் பொருள் விளங்கும் வகையில் வாக்கியங்கள் ஆக்குக.

.............................................................................................

117] தெவ்வர், அன்னை, வாய், இஞ்சி, பங்கு - இவற்றுள் அரையுயிர்கள் வந்துள்ள சொற்கள் எவை?

.............................................................................................

118] **கொழுநன்** - இச் சொல்லிலுள்ள எழுத்துக்களின் மாத்திரை அளவுகளை எழுதுக.

.............................................................................................

119] **அஃகான், முஃடீது** - இங்கு வந்துள்ள ஆய்தங்களின் வேறுபாடு யாது?

.............................................................................................

120] **செருக்களம், முல்லை, முதுமை, காடு, கயிறு** – ஆகியவற்றுள் உகரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படும் சொற்களைக் குறிப்பிடுக.

.............................................................................................

121] **சுடு, சூடு, தேக்கு, மறு, கழு** - இவற்றுள் முற்றியலுகரங்கள் இடம் பெற்றுள்ள சொற்களைக் குறிப்பிடுக.

.............................................................................................

122] **பாட்டியாத்தனர், வாடிவீடு, சென்மியா** - இங்கு வந்துள்ள இகரங்களின் மாத்திரையளவுகளை எழுதுக.

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

123] **விரும்பு** - இச்சொல்லில் வந்துள்ள உகரங்களின் மாத்திரை அளவுகளை எழுதுக.

..........................................................................................

124] **ஆடு, பாலாறு, காது, சால்பு, பயறு, அன்பு** - இவற்றுள் உயிர்த் தொடர்குற்றியலுகரங்கள் இடம் பெற்றுள்ள சொற்களை எழுதுக.

..........................................................................................

125] கீழ்வருவன எத்தொடர்க்குற்றியலுகரங்கள் எனக் குறிப்பிடுக.

I. **படகு :-** .......................

II. **கன்று:-** .......................

III. **ஏடு :-** .......................

IV. **ஆடு :-** .......................

V. **மஞ்சு:-** .......................

VI. **காது:-** .......................

VII. **எஃகு:-** .......................

VIII. **காற்று:-** .......................

IX. **பாக்கு:-** .......................

X. **சால்பு:-** .......................

126] **படு, பாடு, பட்டு, பெறு, பேறு, அரவு, காவு** - இவற்றுள் முற்றியலுகரங்கள் இடம்பெறும் சொற்கள் எவை?

..........................................................................................

127] **விடு, வீடு** - இங்கு வந்துள்ள உகரங்களின் வேறுபாடுகளைக் கூறுக.

..........................................................................................

..........................................................................................

128] **காலம், போன்ம்** - இங்கு வந்துள்ள மகரங்களின் மாத்திரையளவுகளை எழுதுக.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129] **பாக்கு, குரல்** - இச் சொற்களில் வந்துள்ள உகரங்களின் வேறுபாடு யாது?

..........................................................................................

130] **புதன், காற்று, உழு, புழுதி, காசு** – ஆகியவற்றுள் உகரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படும் சொற்களை எழுதுக.

..........................................................................................

131] **குடும்பம், சாப்பாடு, உடு, விறகு, சாக்கு** – ஆகியவற்றுள் உகரம் இதழ் குவியாது உச்சரிக்கப்படும் சொற்களை எழுதுக.

..........................................................................................

132] யகரம் நெட்டெழுத்துக்களுடன் சேர்ந்து மொழி முதல் வருவதற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

..........................................................................................

133] பின்வரும் எழுத்துக்களுள் தற்காலத் தமிழில் மொழிக்கு இறுதியில் வராத எழுத்துக்கள் எவை?

***இ, ஞ், எ, ண், ஒ, வ், அ***

..........................................................................................

134] பின்வருவனவற்றுள் உடனிலை மெய்மயக்கம் இடம் பெற்றுள்ள சொற்கள் எவை?

**வாத்து, கன்று, மந்தி, ஒட்டகம், குரங்கு**

..........................................................................................

135] பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்மயக்கம் இடம் பெற்றுள்ள சொற்கள் எவை?

**கட்டில், மருந்து, தண்ணீர், பருத்தி, பருந்து, பன்றி**

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136] **கடலை, தீயணைந்தது, கண்ணழகு, பலவாடு, செய்ந்நன்றி** - இவற்றுள் உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்துள்ள புணர்ச்சிகள் எவை?

........................................................................................................

137] இஸ்ரேல் இராப்பகலாக ஏவிய ஏவுகணைகள் முதியோரில்லத்தில் வீழ்ந்து வெடித்தன. இவ்வாக்கியத்தில் உள்ள தொகைகளை இனங்கண்டு, அவை எவ்வகைத் தொகைகள் எனக் குறிப்பிடுக.

........................................................................................................

138] **மழைக்கரம், சதுரப்பலகை, மாரிகாலம், பால்பழம், மழைத்துளி** - இவை எவ்வகைத் தொகைகள் எனக் கூறுக.

........................................................................................................

139] **செத்தான், படித்தான்** - பகுபத அடிப்படையில் இவ்விரு பகுபதங்களுக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

........................................................................................................

140] **சிங்கக்குட்டிகளை** - இதில் வந்துள்ள பகுதியினை எழுதுக.

........................................................................................................

141] **புறாக்குஞ்சுகள்** - இதில் புறாக்குஞ்சு எவ்வகைப்பட்ட பகுதி?

........................................................................................................

142] தன்மை ஒருமைப்பெயர் ஆறாம் வேற்றுமை **அது** என்னும் உருபு பெறும் வடிவத்தை எழுதுக.

........................................................................................................

143] **புக்கான், கற்றான், விட்டான், நடந்திலன், உண்டான்-** இவற்றுள் இறந்தகால இடைநிலைகளைக் கொண்ட பதங்கள் எவை?

........................................................................................................

144] **அறி, அரசு, படி, கூத்து, வலை-** இவற்றுள் "இ" என்னும் பெண்பால் விகுதி பெற்று வராத பகுதிகள் எவை?

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145] இந்தக் காட்டில் இந்த மனிதன் இரண்டு சிறுத்தைகளையும் கண்டான் - இங்கு வந்துள்ள அடைகளை எழுதி, அவை எவ்வகையான அடைகள் எனக் குறிப்பிடுக.

.......................................................................................................

146] **நான் கூறியும் நீ அதைக் கேட்கவில்லை** – இவ் வாக்கியத்தில் வந்துள்ள மாற்றுப் பெயர்களைக் குறிப்பிடுக.

.......................................................................................................

147] **கையை, எட்டுப்பெட்டி, பூவால்-** இங்கு வந்துள்ள சந்திகளை இனங்கண்டு எழுதுக.

.......................................................................................................

148] **வருவான், கண்டேன், சென்றது, ஓடின** - இவற்றைப் பகுத்து எழுதுக.

.......................................................................................................

149] அச்சுதன் தன்னுடைய அறைக்குச் சென்றான்.
அச்சுதன் அவனுடைய அறைக்குச் சென்றான்.
இவ்விரு வாக்கியங்களுள் பொருள் மயக்கம் தரும் வாக்கியங்களைக் குறிப்பிட்டு, பொருள் மயக்கத்தைச் சுட்டிக் காட்டுக.

.......................................................................................................

150] அருந்ததி தான் பிரபல பாடகி என்று கூறினாள். இவ் வாக்கியத்தில் வந்துள்ள மாற்றுப் பெயரைக் கூறுக.

.......................................................................................................

151] **குமாரின் தம்பி** - இங்கு வந்துள்ள வேற்றுமை உருபினை எழுதி, அது உணர்த்தும் பொருளையும் குறிப்பிடுக.

.......................................................................................................

152] வவுனியாவுக்கு வடக்கே யாழ்ப்பாணம் உண்டு. இவ்வாக்கியத்தில் வந்துள்ள உருபினையும் அது தரும் பொருளினையும் குறிப்பிடுக.

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153] ஆசிரியர் தடி எடுத்தார்
ஆசிரியர் தடியை எடுத்தார் - இவ்விரு வாக்கியங்களிலும் வந்துள்ள **தடி, தடியை** என்பன எவ்வகைப் பெயர்கள் எனக் கூறுக.

..........................................................................................

154] நண்பன் பரிவோடு கேட்டார்- இவ் வாக்கியத்தில் வந்துள்ள உருபினையும் அது தரும் பொருளினையும் குறிப்பிடுக.

..........................................................................................

155] விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்குச் செல்லலாம் - இங்கு **'மூலம்'** என்னும் சொல்லுருபு தரும் பொருள் யாது?

..........................................................................................

156] எனது புத்தகத்தை தம்பி எடுத்து மேசையில் வைத்தான். - இவ் வாக்கியத்தில் வந்துள்ள வேற்றுமை உருபுகளைக் குறிப்பிடுக.

..........................................................................................

157] அவர்களுள் இவனே என்மகன் - இதில் **'ஏகாரம்'** எப் பொருளில் வந்துள்ளது?

..........................................................................................

158] பின்வரும் வாக்கியங்களுள் **'தான்'** மாற்றுப் பெயராக இடம் பெறும் வாக்கியம் எது என்பதையும், இடைச் சொல்லாக இடம் பெறும் வாக்கியம் எது என்பதையும் எடுத்துக் காட்டுக.

I. குருவிக்குஞ்சு தானாகப் பறந்தது.

II. குருவிக்குஞ்சு தான் அழகான பறவை என்று நினைத்தது.

III. குருவிக்குஞ்சு தான் பறந்தது.

..........................................................................................

159] நான்கு விண்வெளி வீரர்களும் தயாரானார்கள்- இதில் **'உம்'** என்ன பொருளில் வந்துள்ளது?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160] அதிபரும் ஆசிரியர்களும் மாணவர்களும் பேராதனைக்குச் சென்றார்கள்- இவ் வாக்கியத்தில் **'உம்'** இடைச்சொல் எவ்வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

.................................................................................................

161] போரினால் எத்தனையோ பொருட்கள் நாசமாக்கப்பட்டன. இதில் **'ஓகாரம்'** என்ன பொருளில் வந்துள்ளது?

.................................................................................................

162] நான் உதைபந்தும் விளையாடுவேன்- இதில் **'உம்'** என்ன பொருளில் வந்துள்ளது?

.................................................................................................

163] காகம் தந்திரமான பறவை.
காகம் நரியைத் தந்திரமாக ஏமாற்றியது. - இவ் வாக்கியத்தில் இடம் பெறும் **தந்திரமான, தந்திரமாக** ஆகியவை எவ்வகைச் சொற்கள் என்பதைக் குறிப்பிடுக.

.................................................................................................

164] கடலிலே வேகமாகச் சென்ற படகு பலமான காற்று வீசியமையால் கடலின் நடுவில் தள்ளாடியது - இவ் வாக்கியத்தில் வந்துள்ள வினையடைகளை எழுதி, அவை எவ்வகையான வினையடைகள் எனக் குறிப்பிடுக.

.................................................................................................

165] இளவரசன் கட்டுவித்த புதிய அரண்மனையிலே அழகான ஓவியங்கள் பார்ப்பவர்களின் கண்களை மயக்கும் விதத்தில் நேர்த்தியாக வரையப்பட்டுள்ளன. இவ் வாக்கியத்தில் வந்துள்ள பெயரடைகளை எழுதி, அவை எவ்வகையான பெயரடைகள் எனக் குறிப்பிடுக.

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166] இரண்டு கால்களும் சோர்ந்தன.
இளைய தலைமுறையினர் ஒழுக்கங்களைப் பேண வேண்டும். நீ தந்த மாம்பழம் சுவையாக இருந்தது. இங்கு வந்துள்ள அடைகளை எழுதி, அவை எவ்வகையான அடைகள் எனக் கூறுக.

.................................................................................................

167] **மீட்சி, விலை, ஆட்சி, மலர்ச்சி** - ஆகிய பதங்களின் பகுதிகளைக் குறிப்பிடுக.

.................................................................................................

168] **அரவு, கழிவு, கனிவு, பரவு, தாழ்வு** - இவற்றுள் பகுபதங்களை இனங்கண்டு பகுத்து எழுதுக.

.................................................................................................

169] திறமைசாலிகளான நீங்கள் பொறுமை, என்றுமே தளராத முயற்சி, வாழ்க்கையில் விரக்தியின்மை உடையவர்களாக இருக்க வேண்டும். இவ் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வினையடியாகப் பிறந்த பெயர்ச் சொற்களைத் தருக.

.................................................................................................

170] **எழுத்து, எழுதல், எழுவைதீவு, எழுச்சி, எழுந்தவன்** - இவை எவ்வகையான பெயர்ச் சொற்கள் எனக் கூறுக.

.................................................................................................

171] **'பார்'** என்னும் வினையடியை அடிப்படையாகக் கொண்ட ஆக்கப் பெயர் ஒன்றை ஆக்கி, உதாரண வாக்கியம் ஒன்றை எழுதுக.

.................................................................................................

172] பின்வருவனவற்றுள் வினையடியில் உள்ள ஈற்றுமெய் இரட்டித்துத் தோன்றிய ஆக்கப் பெயர்கள் எவை?

**அலைச்சல், பாட்டு, பேச்சு, எரிச்சல், இருக்கை**

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

173] வானொலி கேட்டுக்கொண்டிருந்த நண்பன் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் விரக்தியடைந்தான். இவ் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள கூட்டுப் பெயர்கள் எவை?

..........................................................................................

174] அரசாங்க அதிபர், பொலிஸ் அதிகாரிகள் மூலம் விதானையாருக்கு எச்சரிக்கை வந்தது- இவ் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வினையடியாகப்பிறந்த பெயர்ச் சொல்லைக் குறிப்பிடுக.

..........................................................................................

175] அவள் வேர்க்கடலையை கொட்டிய போது அதனோடே ஒரு கவர் விழுந்தது - இங்கு வந்த கூட்டுப் பெயரைத் தருக.

..........................................................................................

176] **பாம்பு + புற்று** - இது இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு எடுத்துக் காட்டு வாக்கியங்கள் தருக.

..........................................................................................

..........................................................................................

177] பின்வருவனவற்றில் இலக்கண விதிப்படி புணர்ந்துள்ள புணர்ச்சிகள் எவை?

**கன்நெஞ்சம், கடலலை, செய்ந்நன்றி, மெய்மயக்கம்**

..........................................................................................

178] மகர ஈற்றுப் பெயர்ச் சொல் வேற்றுமை உருபு ஏற்கும் போது **அத்துச்** பெறுவதற்கு எடுத்துக்காட்டு வாக்கியம் ஒன்று தருக.

..........................................................................................

179] நீ தந்தியடி, நண்பன் வருவான். அதுவரையில் நீ என்வீட்டில் காத்திரு. - இத் தொடர்களில் வந்துள்ள தனிவினை, கூட்டுவினை என்பவற்றை எழுதுக.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

180] **போனோம், ஓடின, அஞ்சியது, கற்றான்-** ஆகிய சொற்களில் இடம் பெற்றுள்ள இறந்தகால இடைநிலைகளைத் தருக.

..............................................................................................

181] **பாடினாய், கற்றேன், கொண்டோம், சொன்னாள்** - இப் பதங்களை சந்தி பிரித்து எழுதுக.

..............................................................................................

182] நான் நாடகங்கள் பார்த்தேன். இப்பொழுது திரைப்படம் பார்க்கிறேன். ஆனால் நான் எப்பொழுதுமே தமிழ் மொழியைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கிறேன் - இத் தொடர்களில் வந்துள்ள **தொடர்காலம்** உணர்த்தும் வினைச் சொல் யாது?

..............................................................................................

183] தீமைகள் ஏற்படுத்தும் விலங்குகளை ஒழி.
தீமைகள் யாவையும் ஒழியட்டும்.
இவ்விரு வாக்கியங்களிலும் வந்துள்ள பயனிலைகள் எவ்வகைப்பட்ட வினைகள்?

..............................................................................................

184] இலக்கியப் புத்தகத்தை தாருங்களேன். - இவ் வாக்கியத்தில் வந்துள்ள பயனிலை **கடப்பாட்டு ஏவலா? விருப்பு ஏவலா?**

..............................................................................................

185] **"பாயும்"** என்னும் வினை பெயரெச்சமாகவும், ஒன்றன் பால், பலவின்பால், வினைமுற்றுக்களாகவும் வரும் வகையில் வாக்கியங்கள் ஆக்குக.

..............................................................................................

..............................................................................................

186] **நின்ற மான் மருண்டு ஓடியது** - இத் தொடரில் வந்துள்ள பெயரெச்சத்தில் காலங்காட்டும் உறுப்பு எது?

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

187] தா, ஓடு – ஆகிய வினையடிகளை **'செய்து'** என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சமாக மாற்றி வாக்கியங்கள் ஆக்குக.

..................................................................................................

188] சொல்லிவிடு, பாடுகின்றான், சித்திரிக்கிறார், எழுதிக்கொள் இவற்றுள் கூட்டு வினைகள் எவை?

..................................................................................................

189] முகுந்தன் பெட்டியிலிருந்து புத்தகத்தை எடுத்துக்கொண்டான். இவ்வாக்கியத்தில் வந்துள்ள பயனிலையில் காணப்படும் முதல் வினை, துணைவினை என்பவற்றை எடுத்துக் காட்டுக

..................................................................................................

190] "தள்ளு" என்னும் வினையடி முதல் வினையாகவும் துணைவினையாகவும் வர வாக்கியங்கள் ஆக்குக.

..................................................................................................

191] **பார்வை போனது, பார்த்துவைத்தான், கைவைத்தான், வைத்திருந்தான், படுக்கவை** - இவற்றுள் "வை" துணை வினையாக வந்துள்ள வினைகள் எவை?

..................................................................................................

192] **"பார்"** எனும் வினையடியைக் கொண்டு பெயரெச்சம், வினையெச்சம், என்பவற்றை ஆக்கி வாக்கியங்கள் ஆக்குக.

..................................................................................................

..................................................................................................

193] **"பார்"** முதல் வினையாகவும் துணைவினையாகவும் வர வாக்கியங்கள் ஆக்குக.

..................................................................................................

..................................................................................................

194] நல்லம்மாவின் காற்சங்கிலி மணலுக்குள் விழப்பார்த்தது. இங்கு வந்துள்ள பயனிலையில் காணப்படும் துணைவினை எது?

..................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95] **"கொள்"** முதல் வினையாகவும், துணைவினையாகவும் வரவாக்கியங்கள் ஆக்குக.

.................................................................................................

.................................................................................................

96] இம்ரான் மயங்கினான்
இம்ரான் மயக்கினான்- இவ்விரு வாக்கியங்களிலும் வந்துள்ள வினைகளின் வேறுபாட்டைக் கூறுக.

.................................................................................................

.97] **பறி, செல், நில், விரி, சிரி, தா-** இவற்றுள் செயப்படுபொருள் குன்றா வினையடிகள் யாவை?

.................................................................................................

.98] **விழுத்தினான், ஆடினான், உருட்டினான், படுத்தான், வளைத்தான்** - இவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினைகள் எவை?

.................................................................................................

99] **அடி, வளை, எரி, அறி, அலை, மருட்டு** - இவற்றுள் பொது வினைகள் எவை?

.................................................................................................

00] **இரு, பார், அழு, திருப்பு** - இவற்றுள் செயப்படுபொருள் குன்றிய வினையடிகள் யாவை?

.................................................................................................

01] **கரை, முறி -** ஆகிய வினையடிகள் செயப்படுபொருள் குன்றிய வினையாகவும், செயப்படுபொருள் குன்றா வினையாகவும் வர வாக்கியங்கள் ஆக்குக.

.................................................................................................

02] நாங்கள் ஒரு குருவியைப் பிடித்தோம். இவ்வாக்கியத்தைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

203] அமைச்சரால் புதிதாக அமைக்கப்பட்ட ஒரு நெடுஞ்சாலை திறந்து வைக்கப்பட்டது. இவ் வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

.............................................................................................

204] தமிழ் மன்றம் எழுத்தாளரைக் கௌரவித்தது. எழுத்தாளர் பாராட்டப்பட்டார். எழுத்தாளர் தன் எழுத்து வரலாற்றைக் கூறினார். - இவற்றுள் செய்வினை வாக்கியங்களையும் செயப்பாட்டுவினை வாக்கியங்களையும் வேறுபடுத்துக.

.............................................................................................

205] **இடை, கடை, பரி, பறி, பிசை, ஆசை-** இவற்றுற் ஏவல் வினையடிகள் யாவை?

.............................................................................................

206] **முறி, விரை, மயங்கு, நனை** - இவற்றுள் தன்வினையாகவும் பிறவினையாகவும் பயன்படும் வினையடிகள் யாவை?

.............................................................................................

207] **திருந்தினான், இருத்தினான், ஆட்டியது, உருண்டது-** இவற்றுள் தன் வினைகள் யாவை?

.............................................................................................

208] தாய்க்குருவி தன் குஞ்சுக்கு இரை ஊட்டியது- இவ்வாக்கியத்தின் பயனிலை தன்வினையா? பிறவினையா?

.............................................................................................

209] தலைமறைவாகிய நடிகையின் தங்கை என்னோடு படித்தாள்- இவ்வாக்கியத்தில் காணப்படும் பொருள் மயக்கத்தைச் சுட்டிக் காட்டுக.

.............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

210] பின்வரும் வாக்கியங்களுள் காரண வினையைக் கொண்ட வாக்கியம் எது?
அபர்ணா கலங்கினாள்
அபர்ணா கலக்கினாள்
அபர்ணா கலக்குவித்தாள்

........................................................................................................

211] **ஆடியது, கலைத்தது, உருட்டியது, பாடியது** - இவற்றுள் இயங்குவினைகள் எவை?

........................................................................................................

212] **உயர்த்தினான், நனைத்தான், குடித்தான், பிடித்தான்**- இவற்றுள் இயங்குவினைகள் எவை?

........................................................................................................

213] பருந்தைக் கண்டதும் கோழிக்குஞ்சு புல்லுக்குள் மறைந்தது. இவ்வாக்கியத்தின் பயனிலை இயங்குவினையா? இயக்குவினையா?

........................................................................................................

214] விபத்தைப்பார்த்து அதிர்ச்சியிலே மயங்கியவனை கட்டிலிலே படுத்தினோம். இவ்வாக்கியத்தின் பயனிலை இயங்குவினையா? இயக்குவினையா?

........................................................................................................

215] அரசன் மாளிகைகளைக் கட்டுவித்தான்- இவ்வாக்கியத்தின் பயனிலை தன்வினையா? பிறவினையா? காரணவினையா?

........................................................................................................

216] அழகான பாடகன் மிகவும் இனிமையாகப் பாடுகிறான். இவ்வாக்கியத்தில் வந்துள்ள தலைமை உறுப்புகள் எவை?

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

217] நீ பாடியதை நான் கேட்டேன் - இவ்வாக்கியத்தை தனிவாக்கியங்களாக்குக.

................................................................................................

................................................................................................

218] நான் கதிரையில் இருந்தேன்.
நான் வாழைப்பழம் சாப்பிட்டேன். - இவை எவ்வகை வாக்கியங்கள் எனக்கூறுக.

................................................................................................

219] நாங்கள் பந்தடித்து விளையாடிக்கொண்டிருக்கும் போது தானும் எங்களோடு விளையாடப்போவதாக பாலா கூறினான். - இவ்வாக்கியத்தில் **"தான்"** என்னும் தற்சுட்டுப் பெயர் சுட்டிநிற்கும் பெயர் யாது?

................................................................................................

220] எனது புத்தகத்தைக் காணவில்லை.
மரத்திற்குப் பக்கத்தில் உள்ள புல்லுக்குள் பெரியபாம்பு.
அந்தப் பாட்டை இனிமையாகப் பாடுவேன்.
இவற்றுள் அறியா எழுவாயைக் கொண்ட வாக்கியம் எது?

................................................................................................

221] "நாங்கள் நாளை சிரமதானம் செய்வோம்" இது என்ன வாக்கியம்?

................................................................................................

222] காந்தனும் கஸ்தூரியும் படகில் ஏறினர் - இவ்வாக்கியத்தில் காணப்படும் சமனிலை வாக்கியத் தொடர்கள் எவை?

................................................................................................

223] கீழ்வரும் தனிவாக்கியங்களை "உம்" இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்திக் கூட்டுவாக்கியம் ஆக்குக.

I. ஆனந்தன் மரக்கறி சாப்பிட்டான்.

II. ரொனால்டோ இறைச்சி சாப்பிட்டான்.

................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

224] ஜெயகாந்தன் சிறுகதை அல்லது நாவல் எழுதுவார். இது எவ்வகை வாக்கியம்?

225] ஆவது, ஆனால், அல்லது, ஆகவே ஆகிய இடைச் சொற்களுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைக்குக.

I. இந்தோனிசியாவில் சுனாமி ஏற்பட்டது.

II. நாட்டில் பேரழிவுகள் ஏற்படவில்லை.

226] காமாட்சியும் முருகேசனும் வயலில் வேலை செய்கிறார்கள். - இவ்வாக்கியத்தில் ***"உம்"*** இடைச்சொல் எவ்வகையில் பயன்பட்டுள்ளது எனக்குறிப்பிடுக.

227] ஆனால், ஆகவே, அல்லது ஆகிய இடைச்சொற்களுள் பொருத்தமானதைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைக்குக.

அடைமழை விடாது பொழிகிறது.

மேட்டூர் அணையின் நீர் மட்டம் உயரும்.

228] தாய் தாலாட்டினாள்.
குழந்தை தூங்கியது - இவ்விரு தனிவாக்கியங்களையும் செய்ய வினையெச்ச இணைப்பைப் பயன்படுத்தி கூட்டு வாக்கியம் ஆக்குக.

229] எனக்கு அவனோடு செல்ல விருப்பமில்லை - இவ்வாக்கியம் தனிவாக்கியமா? கூட்டுவாக்கியமா? கலப்பு வாக்கியமா?

230] நான் உன்னைக்கண்டு ஒரு வருடம் ஆகிறது - இவ்வாக்கியத்தின் தலைமைத் தொடர் யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

231] நண்பன் தாயைப் பார்க்க வைத்தியசாலைக்குச் சென்றான்- இக்கலப்பு வாக்கியத்தில் வந்துள்ள தலைமை வாக்கியத்தையும், சார்புநிலைத் தொடரையும் எழுதுக.

..........................................................................................

..........................................................................................

232] நான் படம் பார்த்து விட்டுச் சாப்பிடுகிறேன் - இவ்வாக்கியத்தின் பிரதான தொடர் யாது?

..........................................................................................

233] அச்சுதன் சாப்பிட்டுக் கொண்டு படம் பார்க்கிறான் - இக்கூட்டு வாக்கியத்தில் காணப்படும் தலைமை வாக்கியத்தையும், துணைநிலைத் தொடரையும் எடுத்துக் காட்டுக.

..........................................................................................

234] கீழ் வரும் வாக்கியங்களை இணைக்குக.

நான் மாளிகையில் ஒரு நாள் தங்கினேன். அந்த மாளிகை என்னைக் கவர்ந்தது.

..........................................................................................

235] பின்வரும் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாக்கியங் களைப் பிரித்துக் காட்டுக.

ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சிக்கும் பொருளாதார தன்னிறைவுக்கும் சமாதானச் சூழல் நிலவுவது அவசியம் வேண்டியதாகும்.

..........................................................................................

..........................................................................................

236] எமது மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் சமாதானம் வேண்டிப் பிராத்தனை செய்யப்படுகின்றன. - இவ் வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

237] சுனாமியால் ஏற்பட்ட அனர்த்தங்களை பதில் யாழ் மாவட்ட அரச அதிபர் பார்வையிட்டார்- இவ் வாக்கியத்திலுள்ள வழுவினை எடுத்துக் காட்டி திருத்துக.

.......................................................................................

238] மாணாக்கன் பல வளுக்களைக் கொண்ட கட்டுரையொன்றை எழுதிக் கிளித்திருப்பதை ஆசிரியர் கண்டார்- இவ் வாக்கியத்தை திருத்தி எழுதுக.

.......................................................................................

239] உனது நடிப்பு காட்சிக்கு நன்றாயிருக்க, அவனது பேச்சு வாழ்க்கைக்கு அவசியமாக இருந்தது- இவ் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வினையடியாகப் பிறந்த பெயர்ச் சொற்களைத் தருக.

.......................................................................................

240] பெண்ணியம் பற்றிப் பேசும் எந்தப் பேச்சாளனும் தன் குடும்பத்தை ஒரு கணம் எண்ணிப் பார்ப்பது புத்திசாலித்தனம்- இவ் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள பெயரடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்களைத் தருக.

.......................................................................................

241] விழுது, விழுப்புரம், விழுதல், விழுந்தவன்- இவை எவ்வகைப் பெயர்கள் எனக்குறிப்பிடுக.

.......................................................................................

242] பேசு, நில் ஆகிய வினைச் சொற்கள் ஒவ்வொன்றின் அடியாகவும் பிறக்கும் இவ்விரு பெயர்ச் சொற்களைத் தருக.

.......................................................................................

.......................................................................................

.......................................................................................

243] மீட்சி, தடை, தேட்டம், வீச்சு, தருகை - இவற்றில் வந்துள்ள அடிச் சொற்கள் எவை?

.......................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

244] வனிதா நூலகத்திற்குச் சென்று இலக்கியமும் இலக்கணமும் படித்தாள்- இக் கூட்டு வாக்கியங்களை தனி வாக்கியங்கள் ஆக்குக.

......................................................................................................

......................................................................................................

245] விண்வெளி வீரர் சந்திரனில் தரையிறங்கினார். விண்செளி வீரர் அழகிய காட்சிகளைக் கண்டார். விண்வெளிவீரர் வியப்படைந்தார்- இம் மூன்று வாக்கியங்களையும் இணைத்து ஒரு கூட்டு வாக்கியம் ஆக்குக.

......................................................................................................

246] விஞ்ஞான ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து தாவரக்கலத்தையும் விலங்குக் கலத்தையும் வரைந்தார்- இக் கூட்டுவாக்கியத்தை தனி வாக்கியங்களாக்குக.

......................................................................................................

......................................................................................................

247] கல்விப் பணியாளர் எமது பாடசாலையின் நூலகத்தைப் பார்வையிட்டார். கல்விப் பணியாளர் எமது பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடத்தைப் பார்வையிட்டார். கல்விப் பணிப்பாளர் தன் அலுவலகத்திற்குச் சென்றார்- இம் மூன்று வாக்கியங்களையும் இணைத்து ஒரு வாக்கியமாக்குக.

......................................................................................................

......................................................................................................

248] மாணவர்கள் அவதானமாகவும் விரைவாகவும் விடையெழுதப் பழகவேண்டும். இவ் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பிரித்துக் காட்டுக.

......................................................................................................

......................................................................................................

......................................................................................................

249] நாகம்மாள் கூடையைத் தூக்கி எறிந்தாள்
நாகம்மாள் கூடையை தன்னருகே வைத்துக்கொண்டாள்
இவ்வாக்கியங்களுள் தனிவாக்கியம் எது என்பதைக் குறிப்பிடுக

......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250] கலாவும் ரூபனும் நண்பர்கள்
கலா பாடசாலைக்கும் ரூபன் சந்தைக்கும் சென்றார்கள்.
கலா பாடசாலைக்குச் சென்றாள் என்று ரூபன் கூறினான்- இவ் வாக்கியங்களுள் கூட்டுவாக்கியம் எது என்பதைக் குறிப்பிடுக.

..............................................................................................

251] செல்லையாவும் நல்லம்மாவும் கோயிலை வலம் வந்தார்கள் இவ் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாககியங்களைப் பிரித்துக் காட்டுக.

..............................................................................................

..............................................................................................

252] "கமலம் அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா" இது எவ்வகை வாக்கியம்.

..............................................................................................

253] "நாளைக்குக் காப்பிப் பொடி இல்லை, அதெவச்சு வாங்கி வாருங்களேன்" இது கடப்பாட்டு ஏவலா? விருப்பு ஏலவா?

..............................................................................................

254] கோரைப்பாய் நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக்கொண்டிருந்தது" இவ் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பிரித்துக் காட்டுக.

..............................................................................................

255] "இது என்ன பூவென்று இதை நித்தியம் வாக்கித் தலையில் வைத்துக் கொள்கிறாய்?" - இதில் வந்துள்ள சுட்டுப் பெயரையும் வினைப் பெயரையும் தருக.

..............................................................................................

256] காக்கரட்டான் பூவைத் தலையில் வைத்துக் கொள்கிற பெண்களுடைய வாழ்க்கைப் போக்கும் அப்டித்தான் இருக்கும்- இதில் மூன்று மெய்கள் மயங்கும் பதம் எது?

..............................................................................................

..............................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257] சோழ நாட்டுக் கிராமத்து பெரிய பண்ணையின் மகள்- இ வாக்கியத்தில் **"இன்"** உருபு எப் பொருளில் வந்துள்ள என்பதைக் குறிப்பிடுக.

.......................................................................................................

258] பின்வரும் வாக்கியங்களில் இடம் பெறும் எதிர்மறை பெயரெச்சங்களை எடுத்துக்காட்டுக.

i. இந்தப் படிக்காத பெண் தன்னுடன் பேசியதுதான் அவனுக்கு குழப்பத்தை உண்டாக்கி விட்டது.

ii. அப்படியிருக்க, நவநாகரிக முறையில் ஆண்களுடன் பழகுவ என்பதே அறியாத இடத்தில் பிறந்து வளர்ந்த பெண் வே ஆடவனுடன் பேசுவதென்றால், அது ராமுவுக் விபரீதமாகப்பட்டது.

.......................................................................................................

259] பின்வரும் வாக்கியங்களில் வரும் ஆக்கவினையடைகள எடுத்துக்காட்டுக.

சந்தைக் கூட்டம் மெதுவாகக் கலைய ஆரம்பித்தது.

விற்பதற்குப் பரப்பியிருந்த பண்டங்களையும் பரபரப்பாக எடுத்தன

.......................................................................................................

260] பின்வரும் வாக்கியத்தில் வரும் தனிப்பெயரடையையும், கூட்டு பெயரடையையும் குறிப்பிடுக.

ஊரைச்சுற்றிப் பூத்துக்குலுங்கும் பசுமையான மரங்கள் கண்ணுக் இனிய காட்சிகளே நாலாபக்கங்களிலும் நிறைந்திருந்தன.

.......................................................................................................

261] அது என்ன? எதை மறந்துவிட்டாள் என்பதைக் கூடக் கேட்காமலே இரண்டொருத்தி "ஆமாம்" என்று ஆமோதித்தனர்- இதிலுள் வினாப் பெயர்களையும், சுட்டுப் பெயரையும் எழுதுக.

.......................................................................................................

262] அதைக் கேட்கவும் நாகம்மா கூடச் சிரித்து விட்டாள் - இதி **"கூட"** என்ன பொருளில் வந்துள்ளது.?

.......................................................................................................

.......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

263] பட்டியிலும், களத்திலும், காட்டிலும், பெரியவர்களும், சின்னவர்களும் பொங்கலைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். இவ் வாக்கியத்தில் அழுத்தப் பொருளில் (தேற்றம்) இடம் பெற்றுள்ள இடைச் சொல்லையும். வாக்கிய இணைப்புக்குக் கையாளப்பட்டுள்ள இடைச்சொல்லையும் குறிப்பிடுக.

......................................................................................................

264] பின்வரும் வாக்கியத்தில் "ஆல்" உருபு எப் பொருளில் வந்துள்ளது என்பதைக் குறிப்பிடுக.
கால் வலியினால் செயலற்றுப் போனது-

......................................................................................................

265] நிர்மலானந்தர் மறைந்தார்.
நிர்மலானந்தர் மறைத்தார் - இவ்விரு தொடர்களிலும் இடம் பெற்றுள்ள வினைகள் எவ்வகையைச் சார்ந்தவை?

......................................................................................................

266] அது வரையில் அவளுடைய முகத்தைப் பார்க்கக் கூட அவனுக்குத் துணிவு வரவில்லை - இதில் அவளுடைய முகம் என்பது தற்கிழமையா? பிறிதின் கிழமையா என்பதைக் குறிப்பிடுக.

......................................................................................................

267] "சாரதா வீட்டு வேலைகளைச் செய்து முடித்தாள்" இவ் வாக்கியத்தைச் செயப்பாட்டு வினை வாக்கியமான மாற்றுக.

......................................................................................................

268] சட்டங்கள் பேணப்படாமையால் ஒவ்வொரு நாடுகளிலும் வன்முறைகள் வெடிக்கின்றது- இவ் வாக்கியத்தை திருத்தி எழுதுக.

......................................................................................................

269] சின்னப்பன் ஊரிலிருந்து வந்தான் - இதில் சொல்லுருபு" உணர்த்தும் பொருள் யாது?

......................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

270] அவன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ராமாயி. எப்படியோ, ஏதோ எனக் கலங்கினாள் - இவ்வாக்கியத்தில் வந்துள்ள ஆக்கப்பெயரைக் குறிப்பிடுக.

....................................................................................................

271] நீ இங்கு இருந்ததால் பாடம் சொல்லித்தருகிறேன்.
நீ இங்கு இருந்தால் பாடம் சொல்லித்தருகிறேன்.
இவ்விரு வாக்கியங்களிலும் "ஆல்" எவ்வாறு கையாளப்பட்டுள்ளது?

....................................................................................................

272] இரவு பகல் வித்தியாசம் இன்றி நினைத்த நேரத்தில் அடுப்பு மூட்டுவாள் - இதில் குற்றியலுகரம் இடம் பெற்ற சொல்லையும் முற்றியலுகரம் இடம் பெற்ற சொல்லையும் எழுதுக.

....................................................................................................

273] முதலில் சுவாசம் பலமாகிப் பின் மெதுவாக அடங்கிற்று - இவ்வாக்கியத்தில் பயனிலை தன்வினையா? பிறவினையா? எனச் குறிப்பிடுக.

....................................................................................................

274] பச்சைக் குழந்தையை எத்தனை நாட்களாய் ஏமாற்றி விட்டாள்? - இவ்வாக்கியத்தின் பயனிலை தன்வினையா? பிறவினையா? எனக் குறிப்பிடுக.

....................................................................................................

275] மகாத்மாகாந்தி அறநெறிப்பாடசாலை ஒன்றைக் கட்டுவித்தார். - இங்கு வந்துள்ள பயனிலை தன்வினையா? பிறவினையா? காரணவினையா? எனக் குறிப்பிடுக.

....................................................................................................

276] **கலை, களை** ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்பட அவற்றை வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

....................................................................................................

....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

277] கெட்டியப்பன் கையிலிருந்த தடியால் வேலியை ஓங்கி ஒரு தட்டத் தட்டினான். - இதில் வந்துள்ள "ஆல்" உருபு தரும் பொருள் யாது?

.................................................................................................

278] நான் என் நண்பண் வீட்டுக்கு அடிக்கடி செல்வது எவருக்குமே தெரியாது. - இவ்வாக்கியத்தில் வந்தள்ள தொழிற்பெயர் எது?

.................................................................................................

279] **எடு, நடு** – ஆகிய வினைச் சொற்கள் ஒவ்வொன்றின் அடியாகவும் பிறக்கும் இவ்விரு பெயர்ச்சொற்களைத் தருக.

.................................................................................................

280] பின்வரும் வாக்கியங்களில் **"ஓடு"** என்னும் உருபு எவ்வெப்பொருளில் கையாளப்பட்டுள்ளது எனக் கூறுக.

1. கெட்டியப்பன் சின்னப்பனோடு சேர்ந்துவிட்டான்.
2. தம்பியோடு தங்கை சென்றாள்.
3. நான் கவலையோடு இருக்கின்றேன்.

.................................................................................................

.................................................................................................

281] **வழி, வலி** – ஆகிய சொற்களில் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

.................................................................................................

.................................................................................................

282] காலில்லை. கல்லில்லை. கடலலை, வீட்டுச்சுவர், மான்குட்டி - இவற்றுள் இயல்புப் புணர்ச்சிகளை எடுத்துக் காட்டுக.

.................................................................................................

283] **ஆ, ற், ஞ், த், ப்** - ஆகிய இடை நிலைகள் வரத்தக்க முறையில் பகுபதங்களை எழுதுக.

.................................................................................................

.................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

284] மரத்தில் இருந்த புளியங்காய்கள் சிலவற்றைப் பிடிங்கினான் - இத் தொடரில் வந்துள்ள சாரியைகளை எழுதுக.

........................................................................................................

285] வெள்ளிப் பதக்கம், புலவர் நல்லதம்பி. கறிசோறு. கமலக்கண் - என்பன என்ன தொகைகள்?

........................................................................................................

........................................................................................................

286] **வா, ஓடு**- ஆகிய வினையடிகள் பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் வரும் வகையில் வாக்கியங்கள் எழுதுக.

........................................................................................................

287] இந்த வகுப்பறையில் நான் தந்த கட்டுரை எழுதாத மாணவர்கள் எவரும் நிற்கக்கூடாது- இவ் வாக்கியத்தில் வந்துள்ள எதிர்மறைப் பெயரெச்சம் யாது?

........................................................................................................

288] உண்மை, சான்ம் - இதிலுள்ள சார்பெழுத்துக்களை எழுதி அவற்றின் மாத்திரை அளவுகளை எழுதுக.

........................................................................................................

289] எழுத்தாளன் மேடையில் ஏறி பெண்ணியம் பற்றிப் பேசியது எனக்கு எரிச்சலாக இருந்தது - இதில் வந்துள்ள ஆக்கப் பெயர்களையும். தொழிற் பெயர்களையும் குறிப்பிடுக.

........................................................................................................

290] ராமாயி சந்தைக்குப் போகும் போது தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சென்றாள் - இவ் வாக்கியத்தின் பயனிலை தன்வினையா? பிறவினையா? எனக் கூறுக.

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

291] பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக வருபவை எவை
**எறிகயிறு, பாடசாலை, முன்னேறு, வெற்றிபெறு. கருணையை**

..........................................................................................

292] ஓடினான். பெற்றான் - ஆகிய இரு பதங்களுக்கிடையில் காலங்காட்டும் முறையை அடிப்படையாகக் கொண்ட வேறுபாட்டினைக் கூறுக.

..........................................................................................

..........................................................................................

293] நான் பின்னால் பார்க்கும் போது அடிக்கடி என்னை மிரட்டும் உயரமான மனிதன் வந்து கொண்டிருந்தான். இதில் வந்துள்ள ஆக்கப்பெயரடையையும். தனி வினையடையையும் தருக.

..........................................................................................

294] **'அல்லது'** என்கின்ற இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைக்குக.

I. நீ வாசித்த கவிதையைப் பற்றி எனக்குக் கூறு.

II. நீ எழுதிய கவிதையைப் பற்றி எனக்குக் கூறு.

..........................................................................................

295] பண்டிதர் வீரகத்தி "மாணவர்களாகிய நீங்கள் தாய் மொழியிலும் நன்கு தேர்ச்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். " என்று கூறினார். - இவ்வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள நிரப்பித்தொடரைக் குறிப்பிடுக.

..........................................................................................

..........................................................................................

296] முதியோர்களும், பெரியோர்களும், புலவர்களும், நாய்களும் இருந்தனர். இக் கூட்டு வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக்குக.

..........................................................................................

..........................................................................................

297] இந்தச் சந்தை வாரத்திற்கு மூன்று நாள் கூடும் -இவ் வாக்கியத்தில் வந்துள்ள உருபையும் அது தரும் பொருளையும் குறிப்பிடுக.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

298] அதற்கு, காட்டிற்கு – ஆகிய சொற்கள் புணர்ந்துள்ளவற்றைச் சந்தி பிரித்து எழுதுக.

.....................................................................................................

299] கெஞ்சியது, போனோம் - இவற்றைச் சந்தி பிரித்து எழுதுக.

.....................................................................................................

300] "செல்லும்" என்ற சொல் முற்றாகவும் எச்சமாகவும் வர வாக்கியங்கள் ஆக்குக.

.....................................................................................................

.....................................................................................................

301] உயிர் எழுத்துக்களில் வரும் குற்றெழுத்துக்களிலே இதழ் குவிந்து பிறக்கும் உயிர் எழுத்துக்கள் எவை?

.....................................................................................................

302] உயிர் எழுத்துக்களிவ் வரும் நெட்டெழுத்துக்களிலே இதழ் குவிந்து பிறக்கும் உயிர் எழுத்துக்கள் எவை?

.....................................................................................................

303] 'இகரம்' மொழிக்கு இறுதியில் வருவதற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

.....................................................................................................

304] அரண்மனை - இச் சொல்லிலுள்ள முதலெழுத்துக்களை அவற்றின் வகை சுட்டி எழுதுக.

.....................................................................................................

305] ஸ், ஜ் – ஆகிய கிரந்த எழுத்துக்கள் அகர உயிருடன் மொழி முதல் வர எடுத்துக்காட்டுகள் தருக.

.....................................................................................................

306] ம், ந், வ், ச் - ஆகிய மெய்கள் ஐகாரத்துடன் மொழி முதலாக வர எடுத்துக்காட்டுகள் தருக.

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07] ஙகரம் உடனிலை மெய்ம்மயக்கமாகவும் வேற்று நிலை மெய்ம்மயக்கமாகவும் வர இரு வேறு எடுத்துக்காட்டுகள் தருக.

.............................................................................................................

08] **பூனை + குட்டி** இச் சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.

.............................................................................................................

09] தரும் வள்ளல் - இங்கு வந்துள்ள சார்பெழுத்துக்களை வகைசுட்டி எழுதுக.

.............................................................................................................

10] அஃறிணை, போண்ம் - இச்சொற்களில் அரைமாத்திரையிலும் குறைத்து ஒலிக்கும் சார்பெழுத்துக்களை வகை சுட்டி எழுதுக.

.............................................................................................................

11] **அற்று, அப்புறம், அன்று, அவை, எது** - இவற்றுள் அகச்சுட்டினையும் புறச் சுட்டினையும் எடுத்துக் காட்டுக.

.............................................................................................................

12] மகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையுருபுகளை ஏற்கும் போது சாரியை பெறுவதற்கு எடுத்துக் காட்டு தருக.

.............................................................................................................

13] புயல், கற்பு- இங்கு வந்தள்ள உகரங்களின் வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

.............................................................................................................

14] வருவேன், போனது, போயினள், பாடியது- ஆகிய சொற்களில் இடம் பெற்றள்ள காலங்காட்டும் இடை நிலைகளை எழுதுக.

.............................................................................................................

15] **ண், த், ர், ய், ந், ள்** - இவற்றுள் இலக்கணகாரர் மொழி இறுதியில் வராது எனக் கூறப்பட்ட எழுத்துக்கள் சில தற்காலத் தமிழில் வருகின்றன. அவற்றைக் குறிப்பிடுக.

.............................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

316] பின்வருவனவற்றுள் வகர மெய் இடைநிலை எழுத்தாக வந்துள்ள சொற்களைத் தருக.

**வெள்ளி, வயல், அவைகள், அவனி, வலித்தது**

........................................................................................................

317] பின்வருவனவற்றுள் உகரம் இடைநிலை எழுத்தாக வந்துள்ள சொற்களைத் தருக.

**பழுத்தன, உண்மை, குயில், குருதி, உறுதி, பயறு**

........................................................................................................

318] அவன் என்ன நடந்தாலும் பின்வாங்கான். இவ் வாக்கியத்தில் வந்துள்ள கூட்டுப்பகுதியை எடுத்துக் காட்டுக.

........................................................................................................

319] எங்களுடைய தமிழாசிரியருக்கு இரக்கப்பண்பு உள்ளது - இவ்வாக்கியத்தில் வந்துள்ள கூட்டுப்பகுதியை எடுத்துக் காட்டுக.

........................................................................................................

320] உவர் ஊரிலுள்ள எத்தனை மக்களை ஏமாற்றி விட்டார் கடைசியில் அவ்வூரிலுள்ளவர்களே பாடம் புகட்டினார்கள்- இத்தொடரில் காணப்படும் அகச்சுட்டியையும், புறச்சுட்டியையும் எடுத்துக் காட்டுக.

........................................................................................................

321] எனது புத்தகத்தை இந்தக் கூட்டத்திலே யாராவது எடுத்திருந்தால் தாருங்களேன் - இத் தொடரில் வந்துள்ள மாற்றுப் பெயர்களைக் குறிப்பிடுக.

........................................................................................................

322] மாணவர் காலையில் படிப்பது மிகவும் நல்லதாகும். இவ் வாக்கியத்தில் வந்துள்ள தொழிற்பெயரை எழுதுக.

........................................................................................................

323] அதிகாலை வேளையில் பறவைகள் பறந்தன, இதை குரங்கொன்று பார்த்துக்கொண்டிருந்தது - இதில் வந்துள்ள செயப்படுபொருள் குன்றிய வினையை எடுத்துக் காட்டுக.

........................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

324] மகாகவியின் **படைப்புக்களின்** சாதியப் பிரச்சினை காணப்படுகின்றது - இதில் படைப்பு என்பது எவ்வகையான ஆகுபெயர் எனக் கூறுக.

..........................................................................................

325] நான் எனது **ஊருக்குச்** சென்றேன். - இங்கு "ஊர்" என்பது இயற்பெயரா? ஆகுபெயரா எனக் கூறுக.

..........................................................................................

326] அரி, அறி – ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

..........................................................................................

327] **வீடு + தோட்டம்** இச் சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.

..........................................................................................

328] பரிவு, அன்பு, அழகு, பரிசு, தோடு - இவற்றுள் உயிர்த்தொடர்க்குற்றியலுகரங்கள் எவை?

..........................................................................................

329] பின்வரும் பகுபதங்களில் வரும் விகுதிகள் எவ்வகை விகுதிகள் எனக் குறிப்பிடுக.
பொன்னி, பாடி, ஒழிக, நடந்தனன், சென்றேன்.

..........................................................................................

330] கண்டுகொள்வோம் - இப் பகுபதத்தின் பகுதியை எழுதுக.

..........................................................................................

331] **கேட்டான், நட்டான்** - இப்பகுபதங்களைப் பகுத்துக் காட்டுக.

..........................................................................................

332] **போனோம்** - இச் சொல்லிலுள்ள பகுபதவுறுப்புக்களை இனங்கண்டு எழுதுக.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

333] **புகு, படி, விடு, உறு, கல்** - இவற்றுள் பகுதி இரட்டித்துக் காலங்காட்டக்கூடிய பகுதிகள் எவை?

..........................................................................................

334] **கடியுண்டான், எழுதியிருந்தான், சொல்லப்பட்டது, சொல்லிப்பார்த்தேன், பாய்ந்துகாட்டினார்** - இவற்றுள் செயப்பாட்டு வினை முற்றுக்கள் எவை எனக் குறிப்பிடுக.

..........................................................................................

335] **மலரடி, நீலக்கடல், விளைபுன்னகை, தாய்சேய்** - என்பன என்ன தொகை?

..........................................................................................

336] பின்வரும் வாக்கியத்தில் உள்ள இலக்கண வழுவைச் சுட்டி காட்டித் திருத்துக.

தான்தோன்றிக்கவிராயர் நாடகங்களை எழுதியதுடனமையாது பல கவிதைகளை எழுதியுள்ளார்.

..........................................................................................

337] மலையில் வீழ் அருவி.

மலையில் கோவில் இருந்தது.

இவ்விரு வாக்கியங்களில் "இல்" உருபு எவ்பொருளில் வந்துள்ளது?

..........................................................................................

338] **பெருமை, கண்ணன், பச்சை, கோபம், கார்த்திகை** - இவற்றுள் பண்புப் பெயர்கள் எவை?

..........................................................................................

339] குயில் இனிமையாகக் கூவியது.

குயில் கூவியது இனிமையாக இருந்தது.

இதில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயர் யாது?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

340] தம்பி மேடையில் இனிமையாகப் பாடினார்.
பாடியவன் மேடையை விட்டுக் கீழே இறங்கினான்.
இதில் **"பாடினான்"** என்பதற்கும் **"பாடியவன்"** என்பதற்கும் உள்ள இலக்கண வேறுபாடு யாது?

.....................................................................................................

341] **பருத்தித்துறை, பருத்தியிலை** - இவை எவ்வகைப் பெயர்கள் எனக் கூறுக.

.....................................................................................................

342] இரண்டு நாய்கள் காலையில் அழகான முயலைத் துரத்திக்கொண்டு வேகமாக ஓடின. - இவ்வாக்கியத்தில் வந்துள்ள தனிவினையடை யாது?

.....................................................................................................

343] மாடு தன் வாலை ஆட்டியது. - இவ்வாக்கியத்தில் பயனிலை தன்வினையா? பிறவினையா? எனக் கூறுக.

.....................................................................................................

344] பின்வரும் வாக்கியங்களுள் பொருள் மயக்கம் தரும் வாக்கியத்தைக் குறிப்பிட்டு, பொருள் மயக்கம் என்ன என்பதை விளக்குக.
ராமு மணியை அவனுடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்றான்.
ராமு மணியைத் தன்னுடைய வீட்டுக்குக் கூட்டிச் சென்றான்.

.....................................................................................................

345] பிரபு அவனுடைய வீட்டுக்குச் சென்றான்.
தாய்ப்பசு அதனுடைய குட்டிக்குப் பால் கொடுத்தது.
அகிலா தான் அழகி என நினைக்கிறாள்.
இவ்வாக்கியங்களுள் வந்துள்ள மாற்றுப் பெயர்களை எழுதுக.

.....................................................................................................

346] தம்முடைய எதிர்காலத்தைப் பற்றி சிறிதும் சிந்திக்காக மாணவர்களைத் திருத்தமுடியாது. இவ்வாக்கியத்தில் வந்துள்ள எதிர்மறைப் பெயரெச்சத்தைக் குறிப்பிடுக.

.....................................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

347] பின்வரும் வாக்கியத்தில் வந்துள்ள பெயரெச்சத்தை இனங்கண்டு, அதில் வந்துள்ள இடைநிலையை எழுதுக.
பாடசாலைக்கு போன மாணவர்களுள் ஒரு மாணவனை காணவில்லை.

..........................................................................................

348] **விளை, விழை** ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்பட இரு வாக்கியங்கள் ஆக்குக.

..........................................................................................

349] நானும் கண்ணனும் லண்டனில் உள்ள வங்கி ஒன்றுக்குச் சென்றோம். வங்கிக் கதவு தானாகவே திறந்தது. இவ்வாக்கியத்தில் சுய இயக்கப் பொருளில் வந்துள்ள இடைச் சொல்லை எடுத்துக்காட்டுக.

..........................................................................................

350] "ஆனால்" என்னும் இணைப்பிடைச்சொல்லைப் பயன்படுத்திக் கீழ்வரும் தனிவாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்குக.
குமார் படித்த பையன்.
குமார் இரக்கமற்ற பையன்.

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10.விடைகள்

1) உ, ஊ, ஒ, ஓ, ஔ

2) அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ

3) இல்லை இறை
இவை இறப்பு
இசை இணைகரம்

4) வீடு வீதம்
ஈட்டி ஈரல்
பிடு கீரி

5) பெருமை வெள்ளம்
வெல்லம் வெண்டி
நெல்லி நெடுமரம்

6) க, ப், ட்

7) ண், ம், ன்

8) ஜ, ஷ், ஸ்ரீ

9) ய், வ்

10) அரை மாத்திரை

11) i. ஒலி வடிவம்
ii. வரி வடிவம்

12) i. முதல் எழுத்து
ii. சார்பெழுத்து

13) i) உயிர் எழுத்துக்கள்- 12
ii) மெய் எழுத்துக்கள்- 18
30

14) அ, இ, உ, எ, ஒ

15) ஒரு மாத்திரை

16) ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

17) இரண்டு மாத்திரை

18) i. வல்லினம் - க், ச், ட், த், ப், ற்
ii. மெல்லினம் - ங், ஞ், ண், ந், ம், ன்
iii. இடையினம் - ய், ர், ல், வ், ழ், ள்

19) ஔ, உ, ஓ

20) எ, இ, ஈ , ஐ

21) சேய் கேணி
ஏன் ஏழ்மை
ஏது ஏடு

22) வீதம் கீறு
கிரீடம் சீட்டு
ஈரல் கீழ்

23) பாசம் மஞ்சள்
தேசம் பஞ்சம்
காசி வஞ்சகம்

24) சுலபம் பட்டு
கபடம் பந்து
அபயம் பருதி

25) உலகம். புயல்

26) அஃறிணை
ஃ - ஆய்தக் குறுக்கம்
றி – உயிர் மெய்
ணை ஐகாரக்குறுக்கம்
கைது
கை – ஐகாரக் குறுக்கம்
து – குற்றியலுகரம்

27) பசு, பாட்டு. காற்று

28) ஞ், ந், வ்

29) பஞ்சியாது, பாக்கு, போது

30) எ, ஒ, ஔ

31) செந்நெறி, அன்னை, வட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32) மலர்ச்சி, பேச்சு

33) போனார் - போ + ன் + ஆர்

போனேன் - போ + ன் + ஏன்

அரசன் - அரசு + அன்

34) கைவிடுவேன் - கைவிடு + வ் + ஏன்

காட்டு யானைகள் - காட்டு யானை + கள்

35) மாற்றுப் பெயர் - அவள்

மாற்றுப் பெயர் - கமலா/ கமலாவின் நண்பி

எழுவாய்ப் பெயர் - தங்கை

36) நம்முடைய - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

எங்களுடையவர் - உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

37) எதிர் மறை பெயரச்சம் - ஏற்படாத

எதிர்மறை வினையெச்சம் - பேசாது

38) நோயாளி, முதலாளித்துவம், பொருளியல்

39) உயரம் - உயர் + அம் தடை - தடை- தட + ஐ

40) பல்கலைக் கழகம், கடற்கரை

41) பழங்காய் - உம்மைத்தொகை

கண்மணி - பண்புத் தொகை

கருங்கூந்தல் - பண்புத் தொகை

சாய்கோபுரம் - வினைத்தொகை

42) தா- தருகை, தருதல், தந்தவன்.

வாழ் - வாழ்வு, தாழ்வு, வாழ்ந்தான்.

43) முதவாம் வாக்கியத்தில் உள்ள வந்தது - வினைமுற்று

இரண்டாம் வாக்கியத்தில்உள்ள வந்தது- வினையாலணையும் பெயர்

44) பொரி - பொரியல் வா - வருகை

45) அ. கருவிப்பொருள்

ஆ. மூலப். பொருள்

இ. காரணப்பபொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46) அ. கலப்புறு பொருள்

ஆ. அடைமொழிப் பொருள்

இ. வரையறைப்பொருள்

47) அ. நட்புப் பொருள்

ஆ. எல்லைப் பொருள்

இ. தகுதிப் பொருள்.

48) தனிவினை - போனான், வருகிறான்

கூட்டுவினை - ஆசைப்பட்டான், முன்னேறினான், தந்தியடித்தான், தோல்வியடைந்தான்.

49) எஞ்சியது - எஞ்சு + இ + அது

நிற்பேன் - நில் + ப் + ஆன்

உண்பேன் - உண் + ப் + ஆன்

போனது - போ + ன் + அது

50) முதல் வாக்கியத்தின் வருகிறார் எனினும் வினை நிகழ்கால வடிவில் இருந்தாலும் எதிர்காலப் பொருளில் வருகிறது.

இரண்டாம் வாக்கியத்தில் குளிப்பேன் எனினும் வினை எதிர்கால வடிவில் இருந்தாலும் வழமையான நிகழ்வைக் காட்டுகின்றது.

51) நான் நேற்று இருந்தோம் சிறுகதையொன்று எழுதிக் கொண்டிருந்தேன்.

நான் - இப்பொழுது சிறுகதையொன்றை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

நான் நாளை இந்நேரம் சிறுகதையொன்று எழுதிக் கொண்டிருப்பேன்.

52) முதல் வாக்கியத்தில் வந்துள்ள போகும் - எச்சவினை

இரண்டாம் வாக்கியத்தில் வந்துள்ள போகும் - முற்றுவினை

53) பரதன் கூறினான்

இராமன் கேட்டான்.

54) பாடினால் - நிபந்தனை வினையெச்சம்

55) வரவு, கொடு. சாவு

56) நிலன், பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57) பா - 2 மாத்திரை

ண் - ½ மாத்திரை

ட - 1 மாத்திரை

ர் - ½ மாத்திரை

58) இலங்ங்கு

ங்ங் - ஒற்றளபெடை

கு - குற்றியலுகரம்

ல - உயிர் மெய்

59) தந்தனன் - தா + த் (ந்) + த் + அன் + அன்.

உற்றான் - உறு + ஆன்

க.:.றீது - கல் + தீது

60) மு.:.டீது , முட்டீது

61) முதலாம் வாக்கியம் - செயப்படு பொருள் குன்றிய வினை

இரண்டாம் வாக்கியம் - செயப்படு பொருள் குன்றா வினை

62) என்னால் வயல் உழப்பட்டது.

இசை நிகழ்ச்சியில் பாடகர்களால் பல பாடல்கள் இனிமையாகப் பாடப்பட்டன.

63) கடி, விடு, நாளை

64) வாசம், பாதுகாப்பு

65) காண் - காட்சி, காணல், கண்டவன்

தா - தருகை, தருதல், தந்தவன்.

66) வனவிலங்குகளைப் பாதுகாக்க காடுகளைப் பாதுகாப்பது அவசியமானதாகும். இயற்கைச் சமநிலையைப் பேண காடுகளைப் பாதுகாப்பது அவசியமானதாகும்.

67) அவள் கரைத்தாள் - செயப்படு பொருள் குன்றிய வினை / தன்வினை

அவள் கரைத்தாள் - செயப்படு பொருள் குன்றா வினை / பிறவினை

68) முதல் வினை - வை - பாட்டி குடத்தை நிலத்திலே வைத்தாள்

இரு - என்னிடம் ஒரு புத்தகம் தான் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69) மருண்டான், உருகினான்.

70) செம்மை, வட்டம். வெஞ்சினம்

71) என்னுயிர் - வேற்றுமைத் தொகை
மழைக்காலம் - உவமைத் தொகை
இன்னமுது - பண்பத் தொகை
வருபுனல் - வினைத் தொகை

72) அ) பிரிநிலை ஆ) தேற்றம்

73) அ) முற்றும்மை ஆ) ஆக்கம்

74) அசை நிலை

75) விழுந்தான் என்பது உயிர்திணை ஆண்பால் ஒருமை படர்க்கை இறந்தகால வினை முற்று
விழுந்தவன் 'விழு' என்னும் வினையடியிலிருந்து பிறந்த வினையாலணையும் பெயர்

76) பாடு, எழுது, சொல்

77) இங்கு முதியவர்கள் புதியவர்களா? முதியோர் பராமரிப்பு இல்லம் புதியதா? முதியோர் இல்லத் தலைவர் புதியவரா? என்பதுவே பொருள் மயக்கம்

78) "சத்தியமே வெல்லும்" என்று சிந்தனைவாதி ஒருவர் மேடையில் கூறினார்.

79) அவள் நன்றாக நித்திரை செய்கிறான் - கூற்று வாக்கியம்.

80) ஒவ்வொரு என்பது ஒருமைப் பெயர். நோயாளிகளும் என்பது பன்மைப் பெயர் தங்கள் என்பது பன்மைப் பெயர் தங்கள் என்பது பன்மைப் பெயர் ஆகவே ஒவ்வொரு என்பதன் பின் நோயாளியும் தனது/ தத்தமது என வரவேண்டும். இந்த வைத்தியசாலையிலுள்ள ஒவ்வொரு நோயாளியும் தனது/ தத்தமது நலனில் அக்கறை காட்டவேண்டும்.

81) பாட்டியார்த்தனர் - முற்றியலுகரம் - ½ மாத்திரை
இனிமை - இகரம் - 1 மாத்திரை

82) விட்டான், தொட்டான்

83) முக்குணம்- பண்புத் தொகை
விடுகணை - வினைத்தொகை
தசரதன் மைந்தன் - வேற்றுமைத் தொகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84) காரணப் பொருள்
கருவிப் பொருள்
நிபந்தனைப் பொருள்

85) அகப் புணர்ச்சி

86) கல்லாத + ஒருவன் + எம் + மருங்கில் + நிற்கின்றான்.

87) இயல்புப் புணர்ச்சி - கோழி குஞ்சைப் பார்த்தது.
விகாரப் புணர்ச்சி- கோழிக்கஞ்சு புதருக்கள் மறைந்தது.

88) கொள் + ட் + ஆன்

89) பயறில்லை - விகாரப் புணர்ச்சி
கடலலை - இயல்புப் புணர்ச்சி

90) i. தோன்றல் vi. திரிதல்
ii. தோன்றல் v. கெடுதல்
iii. கெடுதல் vi. திரிதல்.

91) இருமு, கருமை, அரவு. உதவு

92) 3

93) உண்மை - 1 மாத்திரை ( மு. உ)
படு - 1 மாத்திரை ( மு. உ)
பாடு - ½ மாத்திரை (கு.உ)

94) i. மென்றொடர் குற்றியலுகரம்
ii. நெடில் தொடர்க் குற்றியலுகரம்.
iii. மென்தொடர் குற்றியலுகரம்.
vi. இடைத் தொடர்க் குற்றியலுகரம்.
v. மென்றொடர்க் குற்றியலுகரம்.
vi. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்
vii. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.
viii. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்.
ix. உயிர்த் தொடர் குற்றியலுகரம்.
x. வன்றொடர்க் குற்றியலுகரம்.

95) இயல்புப் புணர்ச்சி - குருவி கூடு கட்டிது.
விகாரப் புணர்ச்சி - குருவிக் குடு அழகானது.

96) நீ + கு - உன் + கு = உனக்கு

97) நான் + ஆல் - என் + ஆல் + என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98) அப்பாவோடு (வ்), பூனையொன்று ( ய்)

99) எதையும்

100) அழுத்தப்பொருள்.

101) முன்னர், அங்கு, மலர்ச்சியாக,

102) பண்பான - பெயரடை

பண்பாக - வினையடை

103) அடிக்கடி - தனிவினையடை

இனிமையாக - கூட்டு வினையடை

104) கருமையான - ஆக்கப் பெயரடை

கரிய - தனிப் பெயரடை

105) எ.்.கு - ½ மாத்திரை

க.்.றீது, ப.்.றொடை - ¼ மாத்திரை

106) i. வேற்றுமை நிலை மெய்மயக்கம்

ii. உடன் நிலை மெய் மயக்கம்

iii. வேற்றுநிலை மெய்மயக்கம்.

vi உடன் நிலை மெய்மயக்கம்

v. உடன் நிலை மெய்மயக்கம்

vi. வேற்றுநிலை மெய்மயக்கம்.

107) உ - 1 மாத்திரை சா - 2 மாத்திரை

ண் - ½ மாத்திரை ன் - ½ மாத்திரை

மை -1 மாத்திரை (ஐ கு) ம் - ¼ மாத்திரை

108) உ, ர், த், ல், அ, ன், ண், ம்

109) i. மட்டொல்லை மெய்ம்மயக்கம்

ii. வின்னன்று புற்றொகை

iii. நெய்ம்மணம். வாணலம்.

110) ன், கி, இன். வ்

111) பெற்றான் - பகுதி இரட்டித்துக் காலங்காட்டுகிறது (புகு + ஆன்)

கற்றான் - இடைநிலையால் காலங்காட்டுகின்றது (கல் + ற் + ஆன்)

112) வீடு, கீழ்

113) இனிப்பு, இலவசம், இன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114) ங், ம், ந்

115) குமார் படித்த ஆனால் இரக்கமற்ற பையன்

116) கழி - தம்பி பத்திலிருந்த ஆறைக் கழித்தான்

களி - நாம் திருவிழாக் காட்சியைக் கண்டு களிப்படைந்தோம்.

117) தெவ்வர், வாய்

118) 1) கொ - 1 மாத்திரை
2) ழு - 1 மாத்திரை
3) ந - 1 மாத்திரை
4) ன் - ½ மாத்திரை

119) i. அ∴கான் - இங்கு வந்துள்ள ஆய்தம் முற்றாய்தம் ஆகும். (மாத்திரை 1)

ii. மு∴டீது - இங்கு வந்துள்ள ஆய்தம் ஆய்தக்குறுக்கம் ஆகும். (மாத்திரை 1/2)

120) முல்லை, முதுமை

121) சுடு, மறு, குழு

122) i. பாட்டியாத்தனர் - ½ மாத்திரை
ii. வாடி வீடு - மாத்திரை
iii. சென்மிலா - ½ மாத்திரை

123) i. ரு - 1 மாத்திரை
ii. பு - ½ மாத்திரை

124) போகாது, பயறு

125) i. படகு - உயிர்த் தொடர்க்குற்றியலுகரம்
ii. கன்று - மென்றொடர்க்குற்றியலுகரம்
iii. எ∴கு - ஆய்தத் தொடர்க்குற்றியலுகரம்
vi. சால்பு - இடைத் தொடர்க்குற்றியலுகரம்
v. பாக்கு - வன்றொடர்க்குற்றியலுகரம்

126) படு, பெறு, அரவு, காவு

127) i. விடு - முற்றியலுகரம்
ii. வீடு - குற்றியலுகரம்

128) i. காலம் - இங்கு வந்துள்ள மகரத்தின் மாத்திரை -½
ii. போன்ம் - இங்கு வந்துள்ள மகரத்தின் மாத்திரை -¼



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129) i. பாக்கு - இங்கு வந்துள்ள உகரம் குற்றியலுகரம்
ii. குரல் - இங்கு வந்துள்ள உகரம் முற்றியலுகரம்

130) புதன், உழு, புழுதி

131) சாப்பாடு, விறகு, சாக்கு

132) யாகம், யூகம், யோகம், யௌவனம்

133) ஞ், எ, ஒ, வ்

134) வாத்து, ஒட்டகம்

135) மருந்து, பருந்து, பன்றி

136) தீயணைந்தது, பலவாடு

137) i. இராப்பகல் - உம்மைத் தொகை
ii. ஏவுகணை – வினைத்தொகை
iii. முதியோரில்லம் - வேற்றுமைத் தொகை

138) i. மழைக்கரம் - உவமைத் தொகை
ii. சதுரப்பலகை – பண்புத் தொகை
iii. மாரிகாலம் - பண்புத் தொகை
iv. பால்பழம் - உம்மைத் தொகை
v மழைத்துளி – வேற்றுமைத் தொகை

139) i. செத்தான் - பகுதி விகாரப்பட்டுள்ளது (சா - செ)
ii. படித்தான் -பகுதி விகாரப்படவில்லை

140) சிங்கக்குட்டி

141) கூட்டுப்பகுதி

142) நான் அது – என் + அது = எனது

143) கற்றான், உண்டான்

144) அறி, படி

145) எந்த - வினை அடை
இந்த - சுட்டு அடை
இரண்டு - எண் அடை

146) நான் நீ அது

147) ய், ப், வ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129) i. பாக்கு - இங்கு வந்துள்ள உகரம் குற்றியலுகரம்

ii. குரல் - இங்கு வந்துள்ள உகரம் முற்றியலுகரம்

130) புதன், உழு, புழுதி

131) சாப்பாடு, விறகு, சாக்கு

132) யாகம், யூகம், யோகம், யௌவனம்

133) ஞ், எ, ஒ, வ்

134) வாத்து, ஒட்டகம்

135) மருந்து, பருந்து, பன்றி

136) தீயணைந்தது, பலவாடு

137) i. இராப்பகல் - உம்மைத் தொகை

ii. ஏவுகணை – வினைத்தொகை

iii. முதியோரில்லம் - வேற்றுமைத் தொகை

138) i. மழைக்கரம் - உவமைத் தொகை

ii. சதுரப்பலகை – பண்புத் தொகை

iii. மாரிகாலம் - பண்புத் தொகை

iv. பால்பழம் - உம்மைத் தொகை

v மழைத்துளி – வேற்றுமைத் தொகை

139) i. செத்தான் - பகுதி விகாரப்பட்டுள்ளது (சா - செ)

ii. படித்தான் -பகுதி விகாரப்படவில்லை

140) சிங்கக்குட்டி

141) கூட்டுப்பகுதி

142) நான் அது – என் + அது = எனது

143) கற்றான், உண்டான்

144) அறி, படி

145) எந்த - வினா அடை

இந்த - சுட்டு அடை

இரண்டு - எண் அடை

146) நான் நீ அது

147) ய், ப், வ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148) வருவான் - வா + வ் + ஆன்
கண்டேன் - காண் + ட் + ஏன்
சென்றது - செல் + ந் + அது
ஓடின - ஓடு + இன் + அ

149) பொருள் மயக்கம் தரும் வாக்கியம்
அச்சுதன் அவனுடைய அறைக்குச் சென்றான். அவனுடைய அறை என்பது பொருள் மயக்கம் தருகிறது. அறை அச்சுதனுடையதா வேறொருவருடையதா என்பதுவே பொருள் மயக்கம் ஆகும்.

150) தான்

151) உருபு - இன் பொருள் - உடைமைப் பொருள்.

152) உருபு- கு பொருள் - எல்லை

153) தடி- குறிப்பிலாப் பெயர் தடியை- குறிப்புப் பெயர்

154) உருபு- ஓடு பொருள்- அடைமொழிப் பொருள்

155) கருவிப் பொருள்

156) அது, ஐ, இல்

157) பிரிநிலைப் பொருள்

158) மாற்றுப் பொருள் - குருவிக் குஞ்சு தான் அழகான பறவை என்று நினைத்தது
இடைச் சொல் - குருவிக் குஞ்சு தான் பறந்தது

159) முற்றும்மை

160) இணைப்பிடைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

161) மிகைப் பொருள்

162) எச்சம்/ அடங்கல் பொருள்

163) தந்திரமான- பெயரடை தந்திரமாக- வினையடை

164) வேகமாக- கூட்டு வினையிடை / ஆக்கவினையிடை
நடுவில்- தனி வினையிடை

165) புதிய- தனிப் பெயரடை
அழகான- கூட்டுப் பெயரடை/ ஆக்கப் பெயரடை

166) இரண்டு - எண்ணும் பெயரடை
இளைய - தனிப் பெயரடை
சுவையாக - கூட்டு/ ஆக்கப் பெயரடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

167) மீட்சி - மீள் ஆட்சி - ஆள்
விலை - வில் மலர்ச்சி - மலர்

168) கழிவு- கழி+ வு
கனிவு - கனி + வு

169) பொறுமை, முயற்சி, வாழ்க்கை

170) எழுத்து - ஆக்கப் பெயர் எழுச்சி - ஆக்கப் பெயர்
எழுதல் - தொழிற் பெயர்
எழுவை தீவு - இடப் பெயர்
எழுந்தவன் - வினையாலணையும் பெயர்

171) பார்- பார்வை.
அவனுக்குப் பார்வை போனது.

172) அலைச்சல், பாட்டு, பேச்சு, எரிச்சல், இருக்கை

173) வானொலி, மின்சாரம்.

174) எச்சரிக்கை

175) வேர்க் கடலை

176) இயல்புப் புணர்ச்சி:- பாம்பு புற்றிலிருந்தது.
விகாரப் புணர்ச்சி :- பாம்புப் புற்றை அழித்தோம்.

177) கடலலை, செய்ந்நன்றி

178) மரத்தை - மரம் + அத்து + ஐ ∴ மரத்தை வெட்டினான்.

179) தனிவினை - வருவான்
கூட்டுவினை - தந்தியடி, காத்திரு

180) ன், இன், இ, ற்

181) பாடினாய் - பாடு + இன் + ஆய்
கற்றேன் - கல் + ற் + ஏன்
கொண்டோம் - கொள் + ட் + ஓம்
சொன்னாள் - சொல் + ன் + ஆள்

182) சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்.

183) ஒழி - ஏவல் வினை
ஒழியட்டும் - வியங்கோள் வினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

184) விருப்பு ஏவல்

185) பெயரெச்சம் - பாயும் புலி

பலவின்பால் வினை முற்று - புலிகள் பாயும்.

186) இறந்தகால இடை நிலை - ந் ( நில் + ந் + அ)

187) தா - தந்து - சுப்பிரமணியம் என்னிடம் வாங்கிய பணத்தைத் தந்து முடித்தார்.

ஓடு - ஓடி - தம்பி - ஓடிச் சென்றான்.

188) சொல்லி விடு, எழுதிக் கொள்.

189) முதல் வினை - எடுத்து

துணை வினை - கொள்

190) முதல் வினை - சிறுவன் மேசையைத் தள்ளினான்.

துணைவினை - வேலைக்காரன் மரங்களை வெட்டித்தள்ளினான்.

191) பார்த்து வைத்தான், படுக்கவை

192) பெயரெச்சம் - நான் நேற்றுப் பார்த்த படம் நன்றாக இருந்தது

வினையெச்சம் - மாணவன் புத்தகத்தைப் பார்த்து எழுதுகிறார்

193) முதல் வினை- நான் படம் பார்த்தேன்.

துணை வினை - குருவி கூட்டிலிருந்து ஓடப்பார்த்தது

194) பார்

195) முதல் வினை- இந்த நீர் தாங்கி ஆயிரம் லீற்றர் நீர் கொள்ளும்.
மன்னன் உயிர்கள் மீது இரக்கம் கொண்டுள்ளான்.

துணை வினை- நான் ஒவ்வொரு நாளும் செய்தி கேட்டுக் கொள்வேன்.
அப்பா வேட்டியைக் கட்டிக் கொண்டார்.

196) மயங்கினான் - செயப்படு பொருள் குன்றிய வினை / தன்வினை

மயக்கினான் - செயப்படு பொருள் குன்றாவினை/ பிறவினை

197) பறி, விரி, தா

198) ஆடினான், படுத்தான்.

199) வளை, எரி, அலை

200) இரு, அழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201) கரை- செயப்படு பொருள் குன்றிய வினை – சீனி நீரில் கரைந்தது

செயப்படு பொருள் குன்றா வினை- சீனியை நீரில் கரைத்தான்.

முறி- செயப்படு பொருள் குன்றிய வினை -அவன் விழுந்து முறிந்தான்.

செயப்படு பொருள் குன்றா வினை - அவன் மரக்கிளையை முறித்தான்.

202) எங்களால் ஒரு குருவி பிடிக்கப்பட்டது

203) அமைச்சர் புதிதாக அமைத்த நெடுஞ்சாலையைத் திறந்து வைத்தார்.

204) செயப்பாட்டு வினை வாக்கியம் - எழுத்தாளர் பாராட்டப்பட்டார்

205) கடை, பறி, பிச்சை

206) முறி, நனை

207) திருத்தினான், உருண்டது

208) பிறவினை

209) தலைமறைவானவர் நடிகையா? அல்லது அவரது தங்கையா? என்பது பொருள்மயக்கம்.

210) அபர்ணா கலக்குவித்தாள்.

211) ஆடியது, பாடியது

212) உயர்த்தினான், நனைத்தான்

213) இயங்குவினை

214) இயக்குவினை

215) காரணவினை

216) பாடகன், இடுகிறான்

217) நீ பாடினாய், அதை நான் கேட்டேன்

218) நான் கதிரையில் இருந்தேன் - செயப்படுபொருள் குன்றிய வாக்கியம்

நான் வாழைப்பழம் சாப்பிட்டேன் - செயப்படுபொருள் குன்றா வாக்கியம்.

219) எழுவாய்ப் பெயர் - (பாலா)

220) எனது புத்தகத்தைக் காணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221) நாங்கள் நாளை சிரமதானம் செய்வோம் என்பது கூற்றுவாக்கியம்.

222) காந்தன் படகில் ஏறினான்

கஸ்தூரி படகில் ஏறினாள்.

223) ஆனந்தன் மரக்கறி சாப்பிட்டான்.

ரொனால்டோ இறைச்சி சாப்பிட்டான்.

224) கூட்டு வாக்கியம்

225) இந்தோனிசியாவில் சுனாமி ஏற்பட்டது. ஆனால் நாட்டில் பேரழிவுகள் ஏற்படவில்லை.

226) "உம்" இணைப்பிடைச் சொல்லாகப் பயன்பட்டுள்ளது.

227) அடைமழை விடாது பொழிகிறது ஆகவே மேட்டூர் அணையின் நீர் மட்டம் உயரும்.

228) தாய் தாலாட்ட குழந்தை தூங்கியது.

229) கலப்பு வாக்கியம்

230) ஒரு வருடம் ஆகிறது.

231) தலைமை வாக்கியம் - நண்பன் வைத்தியசாலைக்குச் சென்றான்

சார்புநிலைத் தொடர் - தாயைப் பார்க்க

232) நான் சாப்பிடுகிறேன்

233) தலைமை வாக்கியம் - அச்சுதன் படம் பார்க்கிறான்.

துணைநிலைத் தொடர் – அச்சுதன் சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறான்

234) நான் ஒரு நாள் தங்கியிருந்த அந்த மாளிகை என்னைக் கவர்ந்தது.

235) ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சிக்குச் சமாதானச் சூழல் நிலவுவது அவசியம் வேண்டியதாகும்.

ஒரு நாட்டின் பொருளாதாரத் தன்நிறைவுக்குச் சமாதானச் சூழல் நிலவுவது அவசியம் வேண்டியதாகும்.

236) எமது மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் சமாதானம் வேண்டிப் பிரார்த்தனை செய்யப்படுகின்றது

237) சுனாமியால் ஏற்பட்ட அனர்த்தங்களை யாழ்மாவட்ட பதில் அரச அதிபர் பார்வையிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

238) மாணாக்கன் பல வழுக்களைக் கொண்ட, கட்டுரையொன்றை எழுதிக் கிழித்திருப்பதை ஆசிரியர் கண்டார்.

239) நடிப்பு, காட்சி, பேச்சு, வாழ்க்கை

240) பெண்ணியம், பேச்சாளர், புத்திசாலித்தனம்

241) விழுது- பொருட் பெயர்
விழுப்புரம்- இடப் பெயர்
விழுதல்- தொழிற் பெயர்
விழுந்தவர்- வினையாலணையும் பெயர்

242) பேசு- பேச்சு, பேசுதல், பேசியவன்
நில்- நிலை, நிற்றல், நின்றவன்

243) மீள், தடு, தேடு, வீச்சு, தா

244) வனிதா நூலகத்திற்குச் சென்றாள்
வனிதா இலக்கியம் படித்தான்
வனிதா இலக்கணம் படித்தள்

245) விண்வெளி வீரர்கள் சந்திரனில் தரையிறங்கி அழகிய காட்சிகளைக் கண்டு வியப்படைந்தார்கள்

246) விஞ்ஞான ஆசிரியர்வகுப்பறைக்கு வந்தார்
விஞ்ஞான ஆசிரியர் தாவரக்கலத்தை வரைந்தார்
விஞ்ஞான ஆசிரியர் விலங்குக் கலத்தை வரைந்தார்.

247) கல்விப்பணிப்பாளர் எமது பாடசாலையின் நூலகத்தையும். விஞ்ஞான ஆய்வு கூடத்தையும் பார்வையிட்டுத் தன் அலுவலகத்திற்குச் சென்றார்.

248) மாணவர்கள் அவதானமாக விடையெழுத வேண்டும்.
மாணவர்கள் விரைவாக விடையெழுதவேண்டும்.

249) நாகம்மா கூடையை தன்னருகே வைத்துக் கொண்டாள்.

250) கலா பாடசாலைக்கும் ரூபன் சந்தைக்கும் சென்றார்கள்.

251) செல்லையா கோயிலை வலம் வந்தான்
நல்லம்மா கோயிலை வலம் வந்தாள்.

252) ஏவல் லாக்கியம்

253) விருப்பு ஏவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

254) கோரைப் பாய் நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்தது
கோரைப் பாய் ஒரு கோடியில் மட்டிலும் ஒட்டிக் கொண்டிருந்தது

255) சுட்டுப் பெயர்- இது
வினைப் பெயர்- என்ன

256) வாழ்க்கை

257) உடைமைப் பொருள்

258) படிக்காத, அறியாத

259) மெதுவாக, பரபரப்பாக

260) தனிப் பெயரடை - இனிய
கூட்டுப் பெயரடை – பசுமையான

261) வினா பெயர்கள்- என்ன, எது
சுட்டுப் பெயர்- அது

262) எச்சம் தழுவிய எதிர் மறை

263) அழுத்தப் பொருள் (தேற்றம்) – ஏகாரம்
இணைப்பிடைச் சொல்- உம்

264) காரணப் பொருள்

265) மறைந்தார்- செயப்படுபொருள் குன்றிய வினை/ தன் வினை
மறைத்தார்- செயப்படுபொருள் குன்றா வினை/ பிறவினை

266) தற்கிழமை

267) சாரதாவால் வீட்டு வேலைகள் செய்து முடிக்கப்பட்டன.

268) சட்டங்கள் பேணப்படாமையால் ஒவ்வொரு நாட்டிலும் வன்முறைகள் வெடிக்கின்றன.

269) நீங்கல் (பருப்பொருள் சார்ந்த இடம்)

270) வருகை

271) முதலாவது வாக்கியத்தில் வந்துள்ள "ஆல்" வேற்றுமையுருபு
இரண்டாவது வாக்கியத்தில் வந்துள்ள "ஆல்" நிபந்தனை வினைவிகுதி

272) குற்றியலுகரம் - அடுப்பு
முற்றியலுகரம் - இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

273) தன்வினை

274) பிறவினை

275) காரணவினை

276) கலை - ராமு காகங்களையும் கிளிகளையும் கலைத்தான்.
களை - சின்னப்பன் வயலை உழுதமையால் களைப்படைந்தான்.

277) கருவிப்பொருள்

278) செல்வது

279) எடு - எடுப்பு, எடுத்தல், எடுத்தவன்
நடு - நடுகை, நடுதல், நட்டவன்

280) முதலாவது வாக்கியம் - கலப்புறுபொருள்
இரண்டாவது வாக்கியம் - உடனிகழ்ச்சிப்பொருள்
மூன்றாவது வாக்கியம் - அடைமொழிப்பொருள்

281) வழி - சிறுவன் போத்தலின் அடியில் இருந்த தேனை வழித்தான்
வலி - நீண்ட தூரம் நடந்தமையால் கால்கள் வலித்தன.

282) காலில்லை, கடலலை. மான் குட்டி

283) ஆ - (எதிர் மறை இடைநிலை) செல்லாது. உண்ணாது
ற் - (இறந்தகால இடை நிலை) கற்றான் சென்றது
ஞ் - (பெயரிடைநிலை) அறிஞன், கவிஞன்
த் - (இறந்தகால இடை நிலை) படித்தான், மடித்தான்
ப் - (எதிர்கால இடை நிலை) படிப்பான். கடிப்பான்

284) அத்து (மரத்தில்) அம் (புளியங்காய்)
அற்று (சிலவற்றை) அன் (பிடுங்கினன்)

285) வெள்ளிப் பதக்கம், :- வேற்றுமைத் தொகை
புலவர் நல்லதம்பி. :- இரு பெயரொட்டுப் பண்புத் தொகை
கறிசோறு. :- உம்மைத் தொகை
கமலக்கண் :- உவமைத் தொகை

286) வா - வந்த மாடு கன்றைப் பார்த்தது.
ஓடு - ஓடிய கன்று துள்ளியது. } பெயரெச்சம்
வா - தம்பி ஊருக்கு வந்து சென்றான்
ஓடு கன்று தாயிடம் ஓடிச் சென்றது. } வினையெச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

287) எழுதாத

288) மை - 1 மாத்திரை (ஐகாரக் குறுக்கம்)
சா - 2 மாத்திரை (உயிர் மெய்)
ம - ¼ மாத்திரை (மகரக் குறுக்கம்)

289) ஆக்கப் பெயர்கள் - எழுத்தாளன், பெண்ணியம்
தொழிற் பெயர் - பேசியது

290) பிறவினை

291) எறிகயிறு, பாடசாலை

292) ஓடினான் - இறந்தகால இடை நிலை (இன்) வந்து காலம் காட்டுகின்றது
பெற்றான் - பகுதி இரட்டித்துக் காலம் காட்டுகின்றது

293) ஆக்கப் பெயரடை - உயரமான
தனிவினையடை - பின்னால், அடிக்கடி

294) நீ வாசித்த அல்லது எழுதிய கவிதையைப் பற்றி எனக்குக் கூறு

295) என்று

296) முதியோர்கள் இருந்தனர்
பெரியோர்கள் இருந்தனர்
புலவர்கள் இருந்தனர்
நாய்கள் இருந்தன.

297) உருபு - கு பொருள் - காலக் குறிப்பு

298) அதற்கு - அது + ற் + கு
காட்டிற்கு - காடு + இன் + கு

299) கெஞ்சியது - கெஞ்சு + இ + அது
போனோம் - போ + ன் + ஓம்

300) முற்று - மாடுகள் இந்த வழியாகத்தான் செல்லும்
எச்சம் - இந்த வழியாகச் செல்லும் மாடுகள் பலம் மிகுந்தன.

301) உ, ஒ

302) ஊ, ஓ, ஔ

303) பதி. குவி, பாசி, சட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

304) அ - உயிர் எழுத்து
ண் - மெய் எழுத்து

305) ஸ் - ஸர்ப்பம்
ஜ் - ஜனாதிபதி

306) ம் - மையம்
ந் - நைட்டிகன்
வ் - வைகறை
ச் - சைகை

307) உடனிலை மெய்மயக்கம் - இங்ஙனம்
வேற்றுநிலை மெய்மயக்கம் - பங்கு

308) இயல்பு - பூனைக் குட்டியைப் பார்த்தது
விகாரம் - பூனைக் குட்டி பார்த்தது

309) த, ரு, வ, ள – உயிர் மெய்
ம் - மகரக் குறுக்கம்

310) ∴ - ஆய்தக் குறுக்கம்
ம் - மகரக் குறுக்கம்

311) அகச் சுட்டு - அவை
புறச் சுட்டு - அப்புறம்

312) மரம் + ஆல் - மரம் + அத்து + ஆல் - மரத்தால்

313) புயல் - முற்றியலுகரம்
கற்பு - குற்றியலுகரம்

314) வ், ன், இன், இ

315) த், ற்

316) அவைகள். அவனி

317) பழுத்தன, குயில், குருதி, உறுதி

318) பின்வாங்கு

319) தமிழ் ஆசிரியர்

320) அகச்சுட்டு - உவர்
புறச் சுட்டு - அவ்வூர்

321) நான், யாராவது

322) படிப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

323) பறந்தது

324) முதலாவது வாக்கியத்தில் வந்த காஷ்மீர்–ஆகுபெயர் (இடவாகு பெயர்)

இரண்டாவது வாக்கியத்தில் வந்த காஷ்மீர்- இடப்பெயராகும்

325) இயற்பெயர்

326) அரி :- தச்சன் பலகையை அரிந்தான்.

அறி :- நான் துறைமுகத்திற்குப் போகும் வழியை அறிந்தேன்.

327) இயல்புப் புணர்ச்சி வீடு தோட்டத்திற்கு அண்மையில் உள்ளது. விகாரப் புணர்ச்சி : எமது வீட்டுத் தோட்டம் அழகானது.

328) அழகு, பரிவு

329) பொன்னி - இ பெண்பால் விகுதி, பாடி - இ வினையெச்சவிகுதி, ஒழிக - க வியங்கோள் விகுதி, நடந்தனன் - அன் ஆண்பால் விகுதி, சென்றேன் + ஏன் தன்மை ஒருமை விகுதி

330) கண்டு கொள்

331) கேள் + ட் + ஆன்

நடு + ஆன்

332) போ + ன் + ஓம்

பகுதி இடைநிலை விகுதி

333) புகு, விடு, உறு

334) கடியுண்டான், சொல்லப்பட்டது.

335) மலரடி - உவமைத் தொகை, நீலக்கடல் - பண்புத் தொகை, விளைபுன்னகை - வினைத் தொகை, தாய்சேய் - உம்மைத் தொகை

336) தான்தோன்றிக்கவிராயர் நாடகங்களை எழுதியதுடனமையாது பல கவிதைகளையும் எழுதியுள்ளார்.

337) மலையில் வீழ் அருவி - நீங்கல் பொருள்

மலையில் கோவில் இருந்தது - இடப் பொருள்.

338) பெருமை, பச்சை, கோபம்.

339) இரண்டாவது வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள கூவியது

340) பாடினான் - உயர் திணை ஆண்பால் ஒருமை படர்க்கை இறந்தகால வினை முற்று

பாடியவர் - 'பாடு' என்னும் வினையடியிலிருந்து பிறந்த வினையாலணையும் பெயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

341) பருத்தித் துறை - இடப் பெயர்
பருத்தியிலை - சினைப் பெயர்

342) காலையில்

343) பிறவினை

344) ராமு மணியை அவனுடைய வீட்டிற்குக் கூட்டிச் சென்றான் - அவனுடைய என்பது - ராமுவுடைய அல்லது மணியினுடைய அல்லது ராமு, மணி தவிர்ந்த வேறு ஒருவருடைய எனவும் பொருள் தரலால் மயக்கம் உடையதாக உள்ளது.

345) அவள், அது, தான்.

346) சிந்திக்காத

347) பெயரெச்சம் - போன
இடைநிலை - ன்.
விளை - நெல் நன்றாக விளைந்தது
விழை - சிறுவன் மேடையில் தமிழின் பெருமையைக் கூற விழைந்தான்

348) ஏகாரம்.

349) பிரதமர் எமது பாடசாலைக்கான புதிய மாடிக்கான அடிக்கல்லை நாட்டினார்

350) குமார் படித்த ஆனால் இரக்கமற்ற பையன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11.பயிற்சி வினாக்கள்

1. வழி, வலி - ஆகிய சொற்களில் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

2. காலில்லை. கல்லில்லை. கடலலை, வீட்டுச் சுவர், மான் குட்டி - இவற்றுள் இயல்புப் புணர்ச்சிகளை எடுத்துக் காட்டுக.

3. ஆ. ந். ஞ். த், ப் - ஆகிய இடை நிலைகள் வரத்தக்க முறையில் பகுபதங்களை எழுதுக.

4. மரத்தில் இருந்த புளியங்காய்கள் சிலவற்றைப் பிடிங்கினான் - இத் தொடரில் வந்துள்ள சாரியைகளை எழுதுக.

5. வெள்ளிப் பதக்கம், புலவர் நல்லதம்பி. கறிசோறு. கமலக்கண் - என்பன என்ன தொகைகள்?

6. வா, ஓடு- ஆகிய வினையடிகள் பெயரெச்சமாகவும், வினையெச்சமாகவும் வரும் வகையில் வாக்கியங்கள் எழுதுக.

7. இந்த வகுப்பறையில் நான் தந்த கட்டுரை எழுதாத மாணவர்கள் எவரும் நிற்கக் கூடாது- இவ் வாக்கியத்தில் வந்துள்ள எதிர் மறைப் பெயரெச்சம் யாது?

8. எழுத்தாளன் மேடையில் ஏறி பெண்ணியம் பற்றிப் பேசியது எனக்கு எரிச்சலாக இருந்தது - இதில் வந்துள்ள ஆக்கப் பெயர்களையும். தொழிற் பெயர்களையும் குறிப்பிடுக.

9. ராமாயி சந்தைக்குப் போகும் போது தன் குழந்தையைத் தூக்கிக் கொண்டு சென்றாள் - இவ் வாக்கியத்தின் பயனிலை தன்வினையா/ பிற வினையா? எனக் கூறுக

10. பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக வருபவை எவை?
எறிகயிறு, பாடசாலை, முன்னேறு, வெற்றிபெறு. கருணையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஓடினான். பெற்றான் - ஆகிய இரு பதங்களுக்கிடையில் காலங்காட்டும் முறையை அடிப்படையாகக் கொண்டு வேறுபாட்டினைக் கூறுக.

12. நான் பின்னால் பார்க்கும் போது அடிக்கடி என்னை மிரட்டும் உயரமான மனிதன் வந்து கொண்டிருந்தான் - இதில் வந்துள்ள ஆக்கப் பெயரடையையும். தனிவினை யடையையும் தருக.

13. 'அல்லது' என்கின்ற இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி பின்வரும் வாக்கியங்களை இணைக்குக.
நீ வாசித்த கவிதையைப் பற்றி எனக்குக் கூறு
நீ எழுதிய கவிதையைப் பற்றி எனக்குக் கூறு

14. பின்வரும் வாக்கியங்களுள் தனிவாக்கியம் எது என்பதைக் குறிப்பிடுக
தொழிலாளி கழுதையுடன் வந்தான்
நண்பனும் நண்பியும் வந்தார்கள்
மாணவன் காலையில் எழுந்து படித்தான்

15. முதியோர்களும் பெரியோர்களும். புலவர்களும், நாய்களும் இருந்தனர் இக் கூட்டு வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக்குக.

16. இந்தச் சந்தை வாரத்திற்கு மூன்று நாள் கூடும் -இவ் வாக்கியத்தில் வந்துள்ள உருபையும் அது தரும் பொருளையும் குறிப்பிடுக.

17. அதற்கு, காட்டிற்கு - ஆகிய சொற்கள் புணர்ந்துள்ளவற்றைச் சந்தி பிரித்து எழுதுக.

18. கெஞ்சியது, போனோம் - இவற்றைச் சந்தி பிரித்து எழுதுக.

19. செல்லும் என்ற சொல் முற்றாகவும் எச்சமாகவும் வர வாக்கியங்கள் ஆக்குக.

20. அரவு, கயிறு, அ்.து, பள்ளு - இவற்றுள் குற்றியலுகரம் இடம் பெறும் சொற்களைக் குறிப்பிடுக.

21. கொடு, குழு, கொலு, ஏடு, வீசு - இவற்றுள் குற்றியலுகரம் இடம் பெறும் சொற்களைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. மகர மெய் குற்றுயிர்களுடன் சேர்ந்து மொழி முதல் வருவதற்கு நான்கு எடுத்துக் காட்டுகள் தருக.

23. தகர மெய் குற்றுயிர்களுடன் சேர்ந்து மொ்ழி முதல் வருவதற்கு நான்கு எடுத்துக் காட்டுகள் தருக.

24. அன்பு, அப்பு, அற்றம், அற்புதம்- ஆகியவற்றில் வேற்று நிலை மெய் மயக்கம் இடம் பெற்றுள்ள சொற்களைத் தருக.

25. "துய்ப்பதூஉம்" இதிலுள்ள சார்பெழுத்துக்களை அவற்றின் வகை சுட்டி எழுதுக.

26. தூரம் - இச் சொல்லில் வரும் எழுத்துக்களின் மாத்திரையளவைக் குறிப்பிடுக.

27. வந்தன- இச் சொல்லிலுள்ள பகுபத உறுப்புக்களை இனங் கண்டு எழுதுக.

28. பினவரும் சொற்களில் "இ" இரு வேறு விதமாக உச்சரிக்கப்படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டுக்கேற்ப அச் சொற்களை வகைப்படுத்துக.
இலவசம், இளங்கன்று, இணையம், இனிமை, இடை, இசை

29. பின்வரும் சொற்களில் ஈற்று மெய் இரட்டித்துத் தோன்றியுள்ள ஆக்கப் பெயர்களைக் குறிப்பிடுக.
கழுத்து, வீச்சு, நட்டம், தும்மல், பாட்டு

30. உண்மை, மாது - இவற்றிலுள்ள உகரத்தின் மாத்திரை என்ன?

31. அத்தாள், அற்று, உது, உக்கிரம் - அகச்சுட்டினையும் புறச்சுட்டினையும் எடுத்துக் காட்டுக.

32. நீ நேற்று இங்கு வந்தது நல்லது. காட்டு யானை அசைந்து வந்தது. இதில் இடம் பெற்றுள்ள தொழிற் பெயர் யாது?

33. காடு + பன்றி இச் சொற்கள் இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு உதாரண வாக்கியங்கள் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. குடும்பம், வண்டு, வில்லு, குடுமி, குழு ஆகியவற்றுள் உகரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படும் சொற்களைக் குறிப்பிடுக.

35. குழி, குளி ஆகிய சொற்களின் பொருள் வேறுபாடு புலப்படும் வகையில் அவற்றை வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

36. பாந்தள், பந்தர், குடர், ஐயன் - இவற்றுள் போலி எடுத்து இடம் பெறும் சொற்களைக் குறிப்பிடுக.

37. "வானங் கொட்டுமிவ் வெட்டொலி யேன்கொணர்ந்தாய்" இதிலுள்ள வினாவெழுத்தையும் சுட்டெழுத்தையும் குறிப்பிடுக.

38. அவன் வெடிச்சத்தங்கேட்டு ஓடினான். வெடிச்சத்தங்கேட்டு ஓடியவன் விழுந்து படுத்தான். இதில் "ஓடினான்", என்பதற்கும் "ஓடியவன்" என்பதற்குமுள்ள வேறுபாடு யாது?

39. *நாரணன் நடந்தான்*
*நாரணன் வாங்கினான்* - இவ் வாக்கியங்களில் வரும் நடந்தான், வாங்கினான் ஆகியவை எவ்வகை வினைகள்?

40. பின்வருவனவற்றுள் தற்காலத் தமிழில் சொல் இறுதியில் பெறாத உயிர் எழுத்துக்களைக் குறிப்பிடுக.

*ஆ, ஈ, எ, ஐ, ஒ, ஔ*

41. போவேன், கூவின, வண்ணாத்தி, போனது, சென்றனள் - ஆகிய சொற்களில் இடம் பெற்றுள்ள இடைநிலைகளைத் தருக.

42. பார், தா – ஆகிய வினைச் சொற்கள் ஒவ்வொன்றின் அடியாகவும் பிறக்கும் இவ்விரு பெயர்ச் சொற்கள் தருக.

43. அழி, தேய் ஆகியவை செயப்படுபொருள் குன்றிய வினைகளாகவும் செயப்படுபொருள் குன்றாவினைகளாகவும் வரும் வகையில் வாக்கியம் எழுதுக.

44. லண்டனிலிருந்து வந்தவர் இலங்கைத்தீவின் அழகைக் கண்டு களித்தார் - இவ்வாக்கியத்தில் "வந்தவர்" என்ற சொல் வினை முற்றா, தொழிற்பெயரா, வினையாலணையும் பெயரா எனக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. பொற்றோர், முண்முனை, கன்னெஞ்சம், பொருணயம் - பின்வருவனவற்றைத் தற்கால மொழி நடைக்கேற்ப சந்தி பிரித்து எழுதுக.

46. எழுவை தீவு, எழுதல், எழுச்சி - இவை எவ்வகைப் பெயர்கள்

47. கொள், காட்டு- ஆகியவை முதல் வினையாகவும், துணைவினையாகவும் வரும் வகையில் வாக்கியங்கள் எழுதுக.

48. ஒட்டகம் தலையை உயர்த்தியது – வாக்கியத்தின் பயனிலை தன்வினையா? பிறவினையா? காரணவினையா? எனக் குறிப்பிடுக.

49. பின்வரும் வாக்கியங்களில் இடம் பெற்றுள்ள வினையடைகளைக் குறிப்பிடுக.
*எங்கள் வீட்டில் உள்ள பெரிய மாமரத்தின் பழம் சுவையாக இருந்ததென நண்பன் அடிக்கடி கூறுவான்.*

50. பின்வரும் வாக்கியங்களுள் மாற்றுப் பெயர் இடம் பெறும் வாக்கியத்தைக் குறிப்பிட்டு, அதில் வந்துள்ள மாற்றுப் பெயரை எழுதுக.
*மயில் தன் தோகையை விரித்து ஆடியது.*
*மயில் தான் அழகான பறவை.*

51. பின்வரும் வாக்கியங்களுள் பொருள் மயக்கம் தரும் வாக்கியத்தைக் குறிப்பிட்டு, பொருள் மயக்கம் என்ன என்பதை விளக்குக.
*சிங்கம் அதன் குட்டியைப் பார்த்தது.*
*சிங்கம் தன் குட்டியைப் பார்த்தது.*

52. அவன் கரைந்தான். அவன் கரைத்தான். இவ்விரு தொடர்களிலும் இடம் பெற்றுள்ள வினைகள் எவ்வகையைச் சார்ந்தன?

53. ஊருக்கு கிழக்கே கடல் உண்டு - இவ் வாக்கியத்தில் இடம் பெற்றுள்ள வேற்றுமையுருபு யாது? அது என்ன பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

54. அமெரிக்கா இராணுவம் தீவிரவாதியைப் பிடித்தது.
நான் காந்தியின் கொள்கைகளை ஏற்றேன்.
இவ்விரு வாக்கியங்களையும் செயப்பாட்டுவினை வாக்கி யங்களாக மாற்றி எழுதுக.

55. இரு, விடு, அழு, தடு- இவற்றுள் செயப்படு பொருள் குன்றிய வினையடிகள் யாவை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56. முக்கனி, கரைச்சுவர், காரிருள், காட்டுக் கோழி - இவை எவ்வகைத் தொகைகள்?

57. கேட்டிருப்பாய், இருந்தேன், செல்வமிருந்தது, நேரமிருக்கிறது, கற்றிருப்பேன் - இவற்றுள் " இரு" துணைவினையாக வந்துள்ள தொடர்கள் யாவை?

58. போல், பல், கல், சொல், நில், வால், வில் - இவற்றுள் ஏவல் வினையாக வரக் கூடியவை யாவை?

59. விபத்தின் போது ஒரு காலை இழந்த நடிகையின், தம்பி குண்டர் கும்பலால் தாக்கப்பட்டார். இவ் வாக்கியத்தில் காணப்படும் பொருள் மயக்கத்தைச் சுட்டிக் காட்டுக.

60. பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தைச் சுட்டிக் காட்டி, அவற்றைப் பொருள் மயக்கமற்ற முறையில் திருத்தி எழுதுக.

***கரிய நிற யானைகளும் மான்களும் அந்த அடர்ந்த காட்டில் வாழுகின்றன.***

61. மணி சிரிக்கவே மாட்டான் - இதில் "ஏ" காரம் என்ன பொருளில் வந்துள்ளது?

62. அஞ்சிறை - இத் தொடரினை இனங்கண்டு இரு வேறு பொருள் தரக்கூடியதாகப் பிரித்துக் காட்டுக.

63. பின்வரும் வாக்கியத்திலுள்ள இலக்கண வழுக்களைச் சுட்டிக்காட்டி, திருத்துக.

அந்திப் பொழுதாகையால் ஒவ்வொரு பறவையும் இரை கொண்டு தங்களது கூட்டை நாடிப் பறக்கின்றன.

64. பின்வரும் வாக்கியத்தில் உள்ள இலக்கண வழுவினைச் சுட்டிக்காட்டி அதனைத் திருத்துக

***திருச்சியில் சில வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. நரைத்தது, பிடித்தது, போன்றது, கலைந்தது - இவற்றுள் ஏவல் வினையாக வரக்கூடிய வினையடிகள் யாவை?

66. வன்மை, ஆமை, போனமை, பொறுமை, நம்மை - இவற்றுள் பண்புப் பெயர்களைக் குறிப்பிடுக.

67. குளி, அழி, வெளு, விழு - இவற்றுள் தன்வினையாகவும் பிறவினையாகவும் வரக்கூடிய முதனிலைகள் யாவை?

68. அழகான குழந்தை, அழகாக ஆடியது. இவ் வாக்கியத்தில் இடம் பெறும் அழகான, அழகாக எவ்வகைப்பட் சொற்கள் எனக் குறிப்பிடுக.

69. ஆழிப்பேரலை அழிவுகளை நேரில் பார்த்த புவியியல் பேராசிரியர் எச்சரிக்கையாக இருக்குமாறு மக்களைக் கூறினார் - இவ் வாக்கியத்தில் வினையடியாகப் பிறந்த பெயர்ச் சொற்களைத் தருக.

70. தொழிலாளர்கள் உரிமைகள் பேணப்பட வேண்டும் என்றும் அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்றும் தொழிற்சங்கத் தலைவர் கூறினார்- இவ் வாக்கியத்தில் "உம்" இடைச் சொல் எவ்வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனக் குறிப்பிடுக.

71. வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகளைப் பதில் மாவட்ட வைத்திய அதிகாரி கேட்டறிந்தார்- இவ் வாக்கியத்தில் உள்ள வழுவினை எடுத்துக் காட்டி அதனைத் திருத்தி எழுதுக.

72. "எல்லா வளங்களும் பெறுக"- இது எவ்வகை வாக்கியம்?

73. கேமா இடியப்பம் சாப்பிட்டாள். பாமா தோசை சாப்பிட்டாள். - இவ்விரு வாக்கியங்களையும் இல்லையென்றால், உம், ஆகவே ஆகிய இடைச் சொற்கள் பொருத்தமானதைப் பயன்படுத்தி இணைக்குக.

74. பின்வரும் வாக்கியத்தில் இணைக்கப்பட்டுள்ள வாக்கியங்களைப் பிரித்து காட்டுக.
உலக மக்கள் எவரும் நேர்மையுள்ள விசவாசமான அல்லது படிப்பறிவுடைய புத்திசாலியான தலைவரைத்தான் தேர்ந்தெடுப்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. ஒரு நிரப்புத் தொடரைப் பயன்படுத்திப் பின்வரும் தனிவாக்கியங்களை ஒரு கலப்பு வாக்கியமான அமைத்துக் காட்டுக.
*இன்று சுனாமி வரும்.*
*பயத்தினால் மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்லவில்லை.*

76. சிந்துரி பல்கலைக்கழகம் செல்வாள்.
சிந்துரி பட்டம் பெறுவாள்.
சிந்துரி விருது பெறுவாள்.
இம் மூன்று வாக்கியங்களையும் இணைத்து ஒரு கூட்டு வாக்கியம் ஆக்குக.

77. பல சிறந்த நாவல்களை எழுதிய நாவலாசிரியர் "நாவல்களை எழுதுவோர் தொகை வெகுவாகக் குறைந்து விட்டது" என்று பேராசிரியருக்குக் கூறினார் - இவ் வாக்கியத்திலுள்ள தலைமை வாக்கியத்தையும் துணைநிலை வாக்கியத் தொடரையும் பிரித்துக் காட்டுக.

78. கிளி மாமரத்தில் இருந்தது.
கிளி பழம் உண்டது.
இவை எவ்வகையான வாக்கியங்கள் எனக் குறிப்பிடுக.

79. றோமியோ காலையாட்டிக் கொண்டு கவிதை எழுதுகின்றான். - இவ் வாக்கியத்திலுள்ள தலைமை தொடரையும், துணைநிலைத் தொடரையும் குறிப்பிடுக.

80. பின்வரும் சொற்களில் "க" மூன்று வேறு விதமாக உச்சரிக்கப் படுகின்றது. உச்சரிப்பு வேறுபாட்டிற்கேற்ப அச் சொற்களை வகைப்படுத்துக.
அங்கம். பூக்கள், புற்கள், நீங்கள், அகம், புகழ்

81. கேண்மியா, அம்மியோ, உள்ளமிளகாயா, மிட்டாய், பாகியாது - இவற்றுள் குற்றியலிகரம் இடம் பெறும் சொற்களைக் குறிப்பிடுக.

82. கொண்டாட்டம், பாய்ந்தான், வாழ்க்கை, வில்லங்கம் - இவற்றுள் மூன்று மெய்கள் மயங்கும் சொற்களைத் தருக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. பின்வருவனவற்றுள் தற்காலத் தமிழ் சொல் இறுதியில் இடம் பெறாத மெய்யெழுத்துக்களைக் குறிப்பிடுக.

ழ். ஞ், ர், ம். வ், ண்

84. இயல்புப் புணர்ச்சியாக அமைபவை எவை?

பாலில்லை, பல்லில்லை, மரவேர், காட்டுக் கோழி, மான் குட்டி

85. இவற்றுள் பகுதி இரட்டித்துக் காலங்காட்டும் பகுபதங்கள் எவை?

சொன்னாள், விட்டான், கற்றான், உற்றான், கேட்பான்.

86. கீழ் வரும் பகுபதங்களில் உள்ள பகுதிகளைக் குறிப்பிடுக.
வந்தான், ஆண்டான், கடைக்கணித்தான், புக்கான்.

87. கண், கண்டவர், கண்டி, காணல் - இவை எவ்வகைப் பெயர்கள் எனக் குறிப்பிடுக.

88. "அங்கே பாருங்களேன்" இங்கு வந்துள்ள ஏவல் வினை கடப்பாட்டு ஏவலா? விருப்பு ஏவலா? எனக் கூறுக.

89. பின்வரும் வாக்கியங்களில் இடம்பெறும் எதிர் மறைப் பெயரெச்சங்களை எடுத்துக் காட்டுக

என்னோடு சென்ற ஆண்டு கல்வி கற்ற கண்ணன் தான் செய்யாத குற்றத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டு இருக்கின்றான்
செல்லையா தன்மனைவிக்கு உடையாத வளையல் ஒன்றை வாங்கிக் கொடுத்தான்

90. கூறுவான், படிப்போம், கேட்பான், நடப்பான் - இவற்றுள் மெல் வினை எது?

91. பின்வரும் வாக்கியத்தில் உள்ள நிபந்தனை வினையெச்சத்தை எடுத்துக்காட்டுக.
நான் கூறும் கருத்தை நீ கேட்பாயானால் நீ கேட்பவற்றை நான் உனக்குத் தருவேன்

92. பிரபல கவிஞர் ஒருவர் 1963 களில் கவிதை எழுதத் தொடங்கினார் - இவ்வாக்கியத்தில் உள்ள வழுக்களை சுட்டிக்காட்டித் திருத்துக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. ஜப்பானிலிருந்து மோட்டார் கார் வானொலிப் பெட்டி என்பன இறக்குமதி செய்யப்படுகின்றன- இச்செயப்பாட்டு வினை வாக்கியத்தை செய்வினை வாக்கியமாக்குக.

94. பிரதி சனிக்கிழமை தோறும் நடைபெறும் பட்டிமன்றத்தில் நீங்களும் கலந்து கொள்ள வேண்டும். இவ்விக்கியத்திலுள்ள வழுவினைச் சுட்டிக்காட்டி திருத்துக.

95. பூந்தோட்டத்தைத் தான் பொழுது போக்கு இடமாகவும் கையாழுகின்றேன் - இங்கு "தான்" இடைச் சொல் என்ன பொருளில் வந்துள்ளது

96. பின்வரும் செய்வினை வாக்கியங்களை செயற்பாட்டு வினை வாக்கியங்களாக்குக.
நான் அழகிய ஓவியங்களை வரைந்தேன்
அண்ணா திருடனைப்பிடித்தான்

97. கீழ் வரும் கலப்பு வாக்கியத்தில் உள்ள தலைமை வாக்கியத்தையும் துணை நிலை வாக்கியத்தொடரையும் பிரித்துக் காட்டுக.
வீதியில் நடந்து சென்ற முதியவர் சிறுவனைத் திரும்பிப்பார்த்து, " கோவிலுக்குச் செல்லும் வழியாது?" எனக்கேட்டார்.

98. பின்வரும் வாக்கியத்தில் "இரு" முதல் வினையாகவும் துணை வினையாகவும் இடம் பெறும் சொற்களை எடுத்துக்காட்டுக.
இந்தியாவிலிருந்து வந்த ஞான உபதேசம் செய்யும் சுவாமி நடுவிலிருந்தார். அவரிடம் ஆசிபெற வந்த பக்தர் கூட்டம் அவரை சூழ்ந்திருந்தது

99. ஓடு, இரு ஆகிய வினைச் சொற்கள் ஒவ்வொன்றும் அடியாக பிறக்கும் இவ்விரு பெயர் சொற்களைத் தருக.

100. நான் ஊருக்குப் போய் அம்மாவையும், அக்காவையும், சந்தித்தேன் - இக்கூட்டு வாக்கியத்தை தனிவாக்கியங்கள் ஆக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பின்னிணைப்பு

## மாத்திரை

கால அளவை கண்ணிமைப் பொழுது அல்லது கைந் நொடிப் பொழுது எனக் கூறுவர்.

| எழுத்துக்கள் | மாத்திரை |
|---|---|
| உயிர்க் குறில் | 1 மாத்திரை |
| உயிர் நெடில் | 2 மாத்திரை |
| மெய் | 1/2 மாத்திரை |
| குற்றியலுகரம் | 1/2 மாத்திரை |
| முற்றியலுகரம் | 1 மாத்திரை |
| இகரம் | 1 மாத்திரை |
| குற்றியலிகரம் | 1/2 மாத்திரை |
| ஐகாரம் | 2 மாத்திரை |
| ஐகாரக்குறுக்கம் | 1 மாத்திரை |
| ஔகாரம் | 2 மாத்திரை |
| ஔகாரக்குறுக்கம் | 1 மாத்திரை |
| மகரம் | 1/2 மாத்திரை |
| மகரக்குறுக்கம் | 1/4 மாத்திரை |
| முற்றாய்தம் | 1/2 மாத்திரை |
| ஆய்தக்குறுக்கம் | 1/4 மாத்திரை |
| உயிரளபெடை | 3 மாத்திரை |
| ஒற்றளபெடை | 1 மாத்திரை |
| உயிர் மெய்நெடில் | 2 மாத்திரை |
| உயிர் மெய்க் குறில் | 1 மாத்திரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புணர்ச்சி வகைகள்.

## இயல்புப்புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது எவ்வித மாற்றமும் ஏற்படாது புணர்வது இயல்புப் புணர்ச்சி ஆகும்.

மான் + குட்டி - மான் குட்டி

கடல் + அலை - கடலலை (ல - ல் + அ)

## விகாரப் புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது நிலை மொழியில் / வருமொழியில் மாற்றம் ஏற்படுமாயின் விகாரப்புணர்ச்சி என்ப்படும். இவ் விகாரப் புணர்ச்சி தோன்றல். திரிதல், கெடுதல் என மூன்று வகைப்படும்.

## தோன்றல் விகாரம்

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது ஓர் எழுத்துத் தோன்றுவது தோன்றல் விகாரம் எனப்படும்.

வாழை + பழம் - வாழைப்பழம் (ப்)

## திரிதல் விகாரம்

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது ஓர் எழுத்து இன்னோர் எழுத்தாக மாறுதல் திரிதல் விகாரம் எனப்படும்.

பால் + குடம் - பாற்குடம்.

## கெடுதல் விகாரம்

நிலைமொழியும் வருமொழியும் புணரும் போது ஓர் எழுத்து இல்லாது போதல் கெடுதல் விகாரம். ஆகும்.

மரம் + வேர் - மரவேர்

## அகப்புணர்ச்சி

ஒரு சொல்லினது உறுப்புக்கள் புணருவது அகப்புணர்ச்சியாகும். அகப்புணர்ச்சி சொற்களுக்குள்ளே நடைபெறும் புணர்ச்சி ஆகும்.

உ - ம் ஓடு + இன் + ஆன் = ஓடினான்.

## புறப்புணர்ச்சி

இரண்டு/ இரண்டுகசு மேற்பட்ட சொற்கள் புணர்வது புறப்புணர்ச்சி ஆகும். இது சொற்களுக்கு வெளியே நடைபெறும் புணர்ச்சி ஆகும்.

உ - ம் கந்தன் ஆட்டைப் பிடிக்க ஓடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகைகள்

உருபுகள் மறைந்து வருவதையே 'தொகைகள்' என்பர். தொகைகள் வேற்றுமைத் தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, பண்புத்தொகை, வினைத்தொகை, அன்மொழித்தொகை என ஆறு வகைப்படும்.

### 1) உவமைத் தொகை

உவமை உருபுகள் மறைந்து வருவது உவமை தொகை ஆகும்.
மதிமுகம்

விளக்கம் :

மதிபோன்ற முகம் என்பதில் போன்ற என்னும் உவமை உருபு மறைந்து வருவதால் உவமைத் தொகை

### 2) வேற்றுமைத் தொகை

வேற்றுமைத் உருபுகள் மறைந்து வருவது வேற்றுமைத் தொகை அகும்.
வெள்ளிக் குடம்

விளக்கம் :

வெள்ளியால் செய்த குடம் என்பதில் மூன்றாம் வேற்றுமை உருபாகிய "ஆல" மறைந்துவருவதால் வேற்றுமைத் தொகை.

### 3) உம்மைத் தொகை

"உம்" என்னும் இடைச்சொல் மறைந்து வருவது உம்மைத் தொகை ஆகும்.
பால்பழம்

விளக்கம் :

பாலும் பழமும் என்பதில் வந்துள்ள உம் என்னும் இடைச் சொல் மறைந்து வருதல் உம்மைத் தொகை

### 4) பண்புத் தொகை

ஆகிய என்னும் பண்புருபு மறைந்துவது பண்புத் தொகை ஆகும்.
செந்தாமரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விளக்கம் :**

செம்மை ஆகிய தாமரை என்பதில் ஆகிய என்னும் பண்புருபு மறைந்து வருவதனால் பண்புத் தொகை.

*பண்பு உருபு மறைய சிறப்புப் பெயரும். பொதுப் பெயரும் இணைந்த உருவாகும் தொகையை இருபெயரொட்டுப் பண்புத் தொகை என்பர்.

| கதலி | வாழை |
|---|---|
| சிறப்புப் பெயர் | பொதுப் பெயர் |

## 5) வினைத் தொகை

காலம் மறைந்து வரும் பெயரெச்சம் (காலம் கரந்த பெயரெச்சம்) வினைத் தொகை ஆகும்.

கொல்களிறு

**விளக்கம் :**

(கொன்ற/ கொல்கின்ற/ கொல்லும்) களிறு எனக் காலம் மறைந்து வந்தமையினால் வினைத் தொகை

## 6) அன்மொழித்தொகை

வேற்றுமை தொகை முதலிய தொகைகளுக்குப் புறத்தே அவை அல்லாத பிற மொழிகள் தொக்கி வருவது அன் மொழித் தொகை எனப்படும்.

பூங்குழல் வந்தாள்

**விளக்கம் :**

இதில் பூங்குழல் என்பது - பூவை உடைய குழல் என்று வேற்றுமைத் தொகையாக அமைந்தது. பூங்குழல் வந்தாள் என்பதில் பூங்குழல் பூவை உடைய குழலைக் கொண்ட பெண்ணைக் குறிப்பதால் அன்மொழித் தொகை ஆயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. உசாத்துணை நூல்கள்

1] அகத்தியலிங்கம், ச, **மொழியியல்** - சொல்லியல் - 1 பெயரியல், அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர். (1979).

2] அகத்தியலிங்கம், ச, **மொழியியல்** - சொல்லியல் - 2 வினையியல் அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர். (1982).

3] ஆறுமுக நாவலர், **இலக்கணச் சுருக்கம்,** தென்றல் பப்ளிக்கேஷன், கொழும்பு - 06 (2003).

4] இந்திராணி மணியன், **இருபதாம் நூற்றாண்டிற்கான தமிழ் இலக்கணம்,** சங்கம் பதிப்பகம், F- 1, Alsa Nat Ville, 13, நார்த் போக் சாலை, தி - நகர், சென்னை – 17.

5] சண்முகதாஸ், அ., **தமிழ் மொழி இலக்கண இயல்புகள்,** முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

6] சண்முகதாஸ், அ., " புதிய தமிழ் இலக்கணம் : அதன் தேவையும் சிக்கல்களும்", **தொடர்பாடல் மொழி நவீனத்துவம்** (எம். ஏ. நு∴மான்).

7] சண்முகம், செ. வை., **எழுத்திலக்கணக் கோட்பாடு** அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர். (1980).

8] சண்முகம், செ.வை, "தற்கால தமிழின் இலக்கண இயல்புகள்", **தொடர்பாடல் மொழி நவீனத்துவம்** (1993).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9] சண்முகம், செ.வை., **சொல் இலக்கணக் கோட்பாடு,** அனைத்திந்தியத் தமிழ் மொழியியல் கழகம், அண்ணாமலை நகர். (1984)

10] பரமசிவம், கு, **இக்காலத் தமிழ் மரபு,** கழகவெளியீடு, சென்னை (1991)

11] பொற்கோ, டாக்டர், **இலக்கணக் கலைக் களஞ்சியம்,** தமிழ் நூலகம், சென்னை

12] நு∴மான் எம். ஏ., **அடிப்படை தமிழ் இலக்கணம்** வாசகர் சங்கம் 139 சாயிறாக் கல்லூரி வீதி, கல்முனை – 07

13] முத்துச் சண்முகன், **இக்கால மொழியியல்** திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிட், 154 டி. டி கே. சாலை சென்னை – 18

14] முத்துச் சண்முகன், **இக்காலத் தமிழ் வேற்றுமைகள்,** ஆனந்தா பதிப்பகம், மதுரை

15] முத்துச் சண்முகன், **இக்காலத் தமிழ்,** முத்துப் பதிப்பகம், மதுரை

16] வரதராசன், மு., **மொழி நூல்,** கழகவெளியீடு, சென்னை

17] வேலுப்பிள்ளை, ஆ., **வரலாற்று தமிழ் இலக்கணம்,** பாரி நிலையம், சென்னை (1966)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்பாகப் பயின்றவர் பலர் இன்று நாடு போற்றும் நல்லாசிரியர்களாகத் திகழ்வதை யாவரும் அறிவர். தாம் பெற்ற கல்வியை வருங்காலச் சந்ததியினருக்குச் சிறப்பாகக் கையளிக்கின்ற பெரும்பொறுப்பினை ஏற்று இவர்கள் செம்மையாகச் செயற்படுவது மகிழ்ச்சிக்குரியது. இந்தவகையிலேயே எமது மாணவர் திரு.பா.பத்மநாதன் அவர்களையும் நோக்குகின்றோம்.

தாம் கற்றதையும் பெற்றதையும் தேடியதையும் அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கும் பக்குவத்தினைப் பல்கலைக்கழகக் கல்வி முறைமை பயிற்றிவந்துகொண்டிருக்கிறது. திரு.பா.பத்மநாதன் மாணாக்கர்களின் பரீட்சைத்தேவையை நிறைவுசெய்ய உதவும் வகையிலே தமிழ் இலக்கண வழிகாட்டி என்னும் இந்நூலை வெளியிடுகின்றார்.

இந்நூலாசிரியர் தமது முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வினையும் தமிழ் இலக்கணத்திலேயே மேற்கொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தமிழ்ப்புலமைச் செழுமைமிக்க ஏழாலைக் கிராமத்தைச் சேர்ந்த இந்நூலாசிரியர் இத்துறையிலே இன்னும் உழைக்கவேண்டும் என இறைவனை இறைஞ்சுகிறேன்.

இவரது முயற்சிகள் வெல்ல எமது வாழ்த்துக்கள்.

பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா.
தலைவர், தமிழ்த்துறை
யாழ். பல்கலைக்கழகம்.
11-10-2006

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org